# பொருளியல் நோக்கு

1977 செப்டம்பர்



மக்கள் வங்கி வெளியீடு

இரத்தினக்கற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினக்கற்கள் - அகழ்தல், வெட்டல், மெருகூட்டல், விற்பனை

இரத்தினக்கல் அகழ்தல் ஸ்ரீலங்காவின் மிகப் புராதன சுரங்கமகழ்தல் தொழில்களிலொன்ருகும். இத்தொழிலில் இன்றும் கூட பாரம்பரிய செய்முறைகள் கையாளப்பட்டு வருவதை இப்பக்கத்திலுள்ள படங்கள் காட்டுகின்றன. கூட்டுறவு வர்த்தக அடிப்படையில் நடைபெற்றுவரும் இத்தொழிலில் சுரங்கமகழ்வோர் இலாபத்தில் ஒரு பங்கைப் பெறும் அதே வேளையில், மூலதனமிடுவோரும் ஏனைய உள்ளீடுகளை வழங்குவோரும் மிகக் கூடிய பாகத்தினைச் சுவீகரித்துக் கொள்கின்றனர். அதிர்ஷ்டத்தின் அடிப்படையில் இத்தொழில் அமைந்திருப்பதுவே இதற்குக் காரணமாகும்.

கரடுமுரடான பாறை அடுக்குகளில் அமைந்திருக்கும் ''இல்லம்'' களிலேயே இரத்தினக்கற்கள் தென்படுகின்றன. பாறை அடுக்குகளுக்கு மேலிருக்கும் வண்டல் மண்ணில் குழிகள் தோண்டப்பட்டு இவ்வில்லங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆழமான குழிகள் பலகைகள் பொருத்தப்பட்டு பலப்படுத்தப்படுவதையும், மண் சரிந்து விழுவதைத் தடுக்கும் பொருட்டு பலகைகளிடையே கமுகுமர இலைகள் வைக்கப்பட்டிருப்பதையும் வலது புறத்திலுள் படங்கள் காட்டுகின்றன.







பெரிய குழிகளில் சரளைக்கல் மணலை அரிப்பதில் பலர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



சரளைக்கற்கள் கழுவப்பட்டு நீரில் அரிக்கப்பட்ட பின்னர் பெறுமதி வாய்ந்த கற்கள் தேடப்படுகின்றன.



சரளைக்கற்கள் நீரில் அமிழ்த்தப்படும் குழிகளுக்கு [illegible] புக்கள் அமைக்கப்படுவது வழக்கம்.



நீண்ட பிடிகளைக் கொண்ட மண்வெட்டிகளின் உதவியால் ஆற்றுப்படுக்கைகளில் இரத்தினக்கல் மணல் தோண்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1260

# பொருளியல் நோக்கு

மலர் 3 இதழ் 6 செப்டம்பர் 1977

## பொருளடக்கம்

**நிரல்கள்**

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

19 வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

25 வியாபாரப் பொருள்கள்

**தலைமைக் கட்டுரை**

3 இலங்கையின் இரத்தினக்கல் கைத்தொழில்

**சிறப்புக் கட்டுரைகள்**

23 சென்சீனு எவ்வாறு வேலையின்மையை அகற்றியது

என். என். சச்சிதானந்த் 27 கிராமக்கைத்தொழில் மயமாக்கல் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

கே. லொசானு குணரத்ன 29 தேசிய நகர அமைப்பு — தெளிவான கொள்கையொன்றின் அவசியம்

**அடுத்த இதழில்:**

- தொழில்நுட்பப் பரிமாற்றம் — பிரச்சினைகளும், எதிர்கால இலாபங்களும்.
  தொழில்நுட்ப அமைப்புக்களின் நிர்மாணம்: ஸ்ரீலங்காவினதும், உலகினதும் கண்ணோட்டத்தில் தொழில்நுட்ப உள்ளீடுகளை ஏற்றுக் கொள்ளலும், நிராகரித்தலும்.
- எண்ணெய் வள நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட கல்வி அமைப்புக்கள் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகள்.
- எமது அரச கூட்டுத்தாபனங்களில் நிலவும் முகாமைத்தரமும், செயற்றிறனும்.

**அட்டைப்படம்:**

இரத்தினக்கல் கைத்தொழில் — கடுமையான உழைப்பும் இதமான பளபளப்பும். அகழ்வு வேலைகளில் ஈடுபட்டிருப்போர் வறுமையால் வாடுவதையும், அவர்களது உழைப்பின் பயனை அறுவடை செய்வோர் பிரகாசமாக மின்னுவதையும் குறியீடாகச் சித்தரிக்கின்றார் பாலித்த கன்னங்கரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**ஓகஸ்ட்**

**2** அதன் பத்திரிகைகள் தொடர்ந்து பிரசுரமாவதை உறுதிப்படுத்தவும், ஊழியர்களின் நலம் நாடியும் டைம்ஸ் ஒப் சிலோன் நிறுவனத்தை, வர்த்தகச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அரசுடைமையாக்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

**3** கன்யன் அணைக்கட்டுத் திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 17.5 மில்லியன் டொலர் கடன் வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக உத்தியோக பூர்வமான அறிக்கை யொன்று குறிப்பிட்டது.

**4** மனிதாபிமானத்தையும், ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட புதிய சமுதாய மொன்றை அமைப்பதுவே அரசாங்கத்தின் இலட்சியமாகுமென அரசின் முதல் கொள்கை விளக்கப் பிரசங்கம் தெரிவித்தது.

**5** அரச பெருந்தோட்ட யாக்கம், ஜனவசம, உஸவசம ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் 10 லட்சம் ஏக்கர் நிலம், முகாமை, நிர்வாக வசதி, அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்திற் கொண்டு ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுமென செய்தி நிருபர்கள் மாநாடொன்றில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தகச் சபையில் நடைபெற்ற நாலுவிதப் பொருட்களுக்கான ஏல விற்பனை யொன்றில், ஜனவசம் தோட்டமொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட ''விஷேச வகை'' ஏலக்காய் ஒரு கிலோ 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. பொது ஏலமொன்றில் இப்பண்டம் இதுவரை பெற்ற மிகக் கூடிய விலை இதுவாகும்.

**6** கஷ்டத்திலிருக்கும் நாடுகளுக்கு உதவும் பொருட்டு 10,000 மில்லியன் அமெரிக்கன் டொலரை சர்வதேச நாணய நிதிக்கு வழங்க, பாரிசில் முடிவுற்ற உலகின் செல்வ வளமிக்க 14 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை 12 ம் திகதி பியெஸ்டா நாணயத்தைப் பெறுமதியிறக்கம் செய்ததன் விளைவாக ஸ்பெயினின் தங்க, வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் இவ்வருடத்தில் முதன் முதலாக அதிகரித்திருப்பதாக ஸ்பெயின் வங்கி தெரிவித்தது.

**7** மன்னார் வளை குடாவிலும் கரையோரங்களிலும் மேற்கொள்ளப்பட்ட எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளையும், அவற்றின் விளைவுகளையும் அறிந்துகொள்ளும் பொருட்டு நிபுணர்களைக் கொண்ட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாக கைத்தொழில் அமைச்சர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

தென் கிழக்காசியாவின் ஐந்து நாடுகளுக்குக் கூடிய பொருளாதார உதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்த அவுஸ்திரேலியா, அந்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிப் பொருட்களின் தீர்வைகளைக் குறைப்பது பற்றி எதுவும் கூறவில்லை.

**8** சர்வதேச நீர் மின்னியல் திட்டத்தினதும், உலக வானிலையாராய்ச்சி நிறுவனத்தினதும் ஆசியப் பிராந்திய மாநாட்டை நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் கொழும்பில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

**10** கூட்டுறவுச் சங்கங்களினால் மட்டுமே வினியோகிக்கப்பட்டுவந்த உணவுப் பொருட்களையும், ஏனைய பண்டங்களையும், வினியோகத்தைச் சீராக்குவதற்காக வேறும் 20,000 விற்பனை நிலையங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

மீன்பிடி இயந்திரங்களுக்கு நிலவும் பெரும் தட்டுப்பாட்டை நீக்குதற் பொருட்டு, மாற்றத்தக்க ரூபாக் கணக்குகளின் கீழ் தனியார் துறையினர் மீன்பிடி இயந்திரங்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார்களென கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இயந்திர உபகரணங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தும் இலக்ட்ரோனிக் அளவை கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்றை லெனின்கிராடில் நிறுவதற்காக 1.2 கோடி டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்றை சோவியத் ருஷ்யா இத்தாலிய நிறுவனமான ஒலிவெட்டி ஸ்பாவுக்கு வழங்கியுள்ளதாக ரொய்ட்டர் செய்தி யொன்று தெரிவித்தது.

**12** பாவனையாளர்களுக்குப் பரந்த அளவிலான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மேலதிகமாக 70 கோடி ரூபா அன்னியச் செலாவணி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 6.6 கோடி ரூபா பாலுணவு இறக்குமதிக்கும், 2.4 கோடி ரூபா கருவாடு இறக்குமதிக்கும், 2.5 கோடி ரூபா சீனி இறக்குமதிக்கும், 6 கோடி ரூபா துணிவகைகள் இறக்குமதிக்கும், 11.3 கோடி ரூபா மீன்பிடி உபகரணங்கள், பசளைகள் போன்றவை இறக்குமதிக்கும் பயன்படுத்தப்படும்.

செப்டம்பர் 1 ம் திகதியிலிருந்து கோதுமை மா ஒரு இறாத்தலின் விலையை 80 சதத்திலிருந்து 60 சதமாகக் குறைக்கவும், பாண் ஒரு இறாத்தலின் விலையை 75 சதத்திலிருந்து 60 சதமாகக் குறைக்கவும், பங்கீட்டுப் புத்தகத்துக்கான சீனியின் அளவை 1 இறாத்தலிருந்து 1½ இறாத்தலாக அதிகரிக்கவும் அரசாங்கம் தீர்மானித்தது.

**16** ஸ்ரீ லங்காவின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ''பச்சைத் தேயிலை'' உற்பத்தியை சீக்கிரம் ஆரம்பிக்குமென நிலையத்தின் அறிக்கை யொன்று தெரிவித்தது. சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இயந்திரங்களின் உதவியுடன் 4 சீன நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் ஆரம்ப வேலைகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**17** அரசாங்க வைத்தியர்கள் தனியார் சிகிச்சை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**19** நீர்ப்பாசனத் திட்டங்களிலும், குடியமர்த்தும் திட்டங்களிலும் பயன்படுத்தும் பொருட்டு ஸ்ரீலங்காவுக்கு 4.4 மில்லியன் ஸ்டேலிங் பவுண் வழங்க முடிவு செய்திருப்பதாக பிரித்தானியாவின் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு அறிவித்தது.

யாழ்ப்பாணத் தீப கற்பத்தில் நடைபெற்ற சில மோதல்களை அடுத்து நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு, மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆயுதப்படை அதிகாரிகளை இணைப் பதிகாரிகளாக நியமனம் செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

ஒபெக் நாடுகள் எண்ணெய்களின் கொடுப்பனவுகளில் டொலரின் நிலை பற்றி தற்போது மாற்றங்கள் ஏதும் செய்யமாட்டாவென ஐக்கிய அரேபிய எமிரேட்டுகளின் நிதியமைச்சர் குறிப்பிட்டார். ஆயினும் டொலரின் நிலைமை மேலும் சீர்குலையுமிடத்து, புதிய 'அரேபிய டொலர்' ஒன்றை உருவாக்க வேண்டி ஏற்படுமெனவும் அவர் சொன்னார்.

**23** ஓகஸ்ட் 19 ல் நிவ்யோர்க் சிடி வங்கி செய்ததைப் பின்பற்றி அமெரிக்காவின் பெரும்பான்மையான வர்த்தக வங்கிகள் அவற்றின் வட்டிவீதத்தை 6¾ சத வீதத்திலிருந்து 7 சதவீதமாக அதிகரித்திருப்பதாக நிவ் யோர்க் டைம்ஸ் குறிப்பிட்டது.

**24** உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாழ்வுகளினால் ஐக்கிய இராச்சியத்தில் வேலையின்மை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. தொழிலாளர் படையில் 6 சதவீதத்தினர் வேலையற்றோராக இருக்கின்றரென பினான்சியல் டைம்ஸ் தெரிவித்தது.

**26** வியட்னாமின் மீன்பிடி அபிவிருத்தித் திட்டங்களை நிதிப்படுத்த ஒபெக் நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

**29** இரண்டு வாரமாகக்கட்டவிழ்க்கப்பட்டிருந்த வன்செயல்களுக்குப்பின் நாடு முழுவதிலும் அமைதி நிலவுவதாக, 22 மாவட்டங்களிலும் கடமையாற்றும் இணைப்பதிகாரிகள் அறிவித்திருக்கின்றார்களென தேசிய பாதுகாப்புச் சபை தெரிவித்தது.

**30** புத்தளம், காலி, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் சிமெந்துத் தொழிற்சாலைகளில் உற்பத்தித் தடங்கல்கள் ஏற்பட்டதன் விளைவாக அரசாங்கத்துக்கு 2.5 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'' கல் '' வேட்டை - உருவகச் சித்திரம் — ஓவியர் : கிங்ஸ்லி குணதிலக்கா

# இலங்கையின் இரத்தினக்கல் கைத்தொழில்

கடந்த சில வருடங்களில் இலங்கையின் பொருளாதார சமூக வாழ்க்கையில் இரத்தினக் கற்கள் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளன. இரத்தினக்கற்கைத்தொழிலானது (சுரங்கம் வெட்டுதல், கற்களைப் பட்டம் வெட்டிச் செப்பனிடல், வர்த்தகம் முதலிய பல செய்முறைகளை இது உள்ளடக்குகிறது), அதிலீடுபடுவோருக்குப் பெருஞ் செல்வத்தை அளித்துள்ள அதே வேளையில், இதற்கு முன்னர் எந்தச் சிறு ஏற்றுமதிப் பொருளும் பெற்றுத்தராத பெருந் தொகை வெளிநாட்டுச் செலாவணியை உழைத்துத் தந்துள்ளது. இலங்கையின் நீண்ட பாரம்பரியமுள்ள வெளிநாட்டு வர்த்தக வரலாற்றைப் நோக்கும் போது, 1970 ம் ஆண்டு காலப்பகுதியில், இரத்தினக் கற்கள் அடைந்தது போன்ற மிகத் துரித வளர்ச்சியை வேறெந்த வர்த்தகப் பண்டமும் பெறவில்லை என்பது புலனாகின்றது. நாட்டு நலன் கருதி, இதனை அரசின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்து, இத் தொழிலின் முழு இயக்கத்தையும் ஒழுங்கமைக்க (சீ.ஆர்.ஏ. போன்ற ஊக்கக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி) அண்மைக் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் இதன் முக்கியத்துவம் அதிகரிக்கக் காரணமாயின.

நீண்ட நெடுங்காலமாக இந்நாட்டின் பொருளாதாரத்தில் இரத்தினக்கல் தொழில் பெற்றிருந்த முக்கிய இடத்தை வரலாற்றுக் குறிப்புக்கள் காட்டுகின்றன. ஷிபா மகாராணியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இரத்தினக் கல்லை சாலமன் மன்னன் இலங்கையிலிருந்து பெற்றுக் கொண்டதற்கு சாசனச் சான்றுகள் உள்ளன. இலங்கையின் ஆதி கால வரலாற்றைக் கூறும் கிரந்தமான மகாவம்சமும் இலங்கை இவ்விரத்தினக் கற்களுக்கு எவ்வளவு முக்கியம் பெற்றிருந்த தென்பதைக் கூறி நிற்கிறது. முற்கால இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட அரேபியர் கூட ''செரந்தீப்'' என அன்று அறியப்பட்ட எம்மிலங்கைத் தீவின் இரத்தினக்கல் வளத்தினாலேயே கவர்ந்திழுக்கப்பட்டனர். இதனாலேயே ''இரத்தினத் துவீபம்'' என்ற பெயரால் நம் நாடு அழைக்கப்படலாயிற்று. கி.பி. 2 ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல வானவியல் வல்லுனரும் புவியியலாளருமான தொலமியும் இலங்கையின் புகழ்பெற்ற இரத்தினக் கற்கள், தங்கம் முதலியனபற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வாறு தொடர்ந்த நூற்றாண்டுகளில் இலங்கையின் இரத்தினக் கற்கள் பற்றி பிரயாணிகளும், வரலாற்றாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்திலும் கூட இரத்தினக் கற்கள் இந்நாட்டின் வர்த்தகத்தில் அதி முக்கிய இடத்தைப் பெற்றிருந்த தென்பதை இலங்கையின் நவீன கால வரலாறு காட்டி நிற்கிறது. இக் காலப்பகுதியில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பேரழகு மிக்க அரிய பல இரத்தினக் கற்கள் உலகின் முன்னணி நூதனசாலைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன; மேலும் சில கோடீஸ்வரர்களின் அல்லது அவர்களின் சீமாட்டிகளின் கைகளையும், கழுத்துக்களையும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது இரும்புப் பெட்டிகளுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

எமது தேசிய கலாசாரம், பாரம்பரியம், கிராம மரபுகள் என்பனவற்றுடனும் எமது நாட்டு இரத்தின்க் கற்களுக்கு நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. குறித்த சிலவகை இரத்தினக் கற்களை அணிந்தால் தமக்குத் தீங்கு விளைவிக்கும் சில சக்திகளை விரட்டியடிக்கலாம் என எமது நாட்டு மக்களுட் சிலர் நம்புவதானது இத்தகைய தொடர்பையே பிரதிபலிக்கிறது. பெறுமதி மிக்க இரத்தினங்கள் ஆரம்ப காலங்களில் மன்னரது உடைமையாகக் கணிக்கப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கில் அவை, திறைசேரியைச் சென்றடைந்தன. 'இரத்தினபுரி,'' ''ருவன்வெல்ல'' (இரத்தினக்கல் மணல்) போன்ற ஊர்ப் பெயர்களும் இடப் பெயர்களும் கிராம மட்டத்தில் இரத்தினக் கற்களுக்கு இருந்த தொடர்பையே காட்டி நிற்கின்றன.

உலகின் பிரதான ஐந்து இரத்தினக்கல் வளமுள்ள பிரதேசங்களில் ஸ்ரீ லங்காவும் ஒன்றெனக் கருதப்படுகின்றது. தென்னாபிரிக்கா (இது வைரக் கற்களுக்குப் புகழ் பெற்றது), தென்னமெரிக்கா, பர்மா, தாய்லாந்து என்பன ஏனைய பிரதேசங்களாகும். வைரம், மரகதம், மேகவர்ணம் முதலியன தவிர, வர்த்தக முக்கியத்துவம் மிக்க சகல ரக இரத்தினக் கற்களும் இங்கு காணப்படுகின்றன. உலகின் வேறெந்தப் பிரதேசத்திலும், நம் நாட்டைப் போன்ற மிகச் சிறிய நிலப்பரப்பொன்றில் இவ்வளவு பெருந்தொகையான பெறுமதி வாய்ந்த கற்கள் கிடைப்பதில்லை என்பது கவனிக்கத்தக்கது. வரலாற்றுக் காலம் தொட்டே ஆண்டாண்டு காலம் இரத்தினக்கல் அகழ்தல், செப்பனிடல் நடவடிக்கைகள் தொடர்ந்து வெற்றிகரமாக நடந்து வந்தபோதிலும், நாட்டின் இரத்தினக்கல் வளம் எவ்வகையிலேனும் குறைந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையின் பாரம்பரிய இரத்தினக்கல் அகழ்வுப் பிரதேசம் சப்பிரகமுவ மாகாணத்தில் காணப்படுகிறது. சமாந்தரமாகச் செல்லும் பல குன்றுத் தொடர்களையும் பள்ளத்தாக்குகளையும் அடுத்தடுத்துக் கொண்டமைந்துள்ள இப் பிரதேசத்திலேயே நாட்டின் இரத்தினக்கல் சுரங்கங்களுள் 80 சதவீதமானவை காணப்படுகின்றன. அவிஸ்ஸாவெலை, கம்புறுப்பிட்டிய, மொனராகலை ஆகிய இடங்களுக்கிடையே சுமார் 1800 சதுர மைல் பிரதேசத்தை உள்ளடக்கி இப்பகுதி காணப்படுகிறது. இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள அளுத்நுவர, பலாங்கொட, இரத்தினபுரி, எஹலியகொட, ரக்வான, எனிதும, மொரவாக்க, தெனியாய, எல்பிட்டிய, பெலவத்தை ஆகிய இடங்களிலேயே இரத்தினக் கற்கள் பெருமளவிற் காணப்படுகின்றன. பாரம்பரியமாக இரத்தினக் கற்கள் அகழப்படும் இப் பகுதிகளுக்கு வெளியேயும் அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையில், நுவரேலியா, ஹோர்ட்டன் சமவெளி, மஸ்கேலியா, நாவலப்பிட்டி, குண்டசாலை, கண்டி ஆகிய பகுதிகளில் இரத்தினக் கற்கள் காணப்பட்டாலும் குறுகிய அளவிலேயே அவை இங்கு தென்படுகின்றன. இவை தவிர அண்மைக் காலத்தில் பல புதிய இடங்களில் இரத்தினக் கற்கள் அகழப்பட்டு வருகின்றன. கடந்த பத்தாண்டு காலப்பகுதியுள் வளவை, ஒக்கம்பிட்டிய, எலஹர ஆகிய இடங்களிலும் அம்பன் கங்கைக் கரையோரமாக பொலநறுவை வரையான பகுதிகளிலும் இரத்தினக் கற்கள் ஒழுங்கான ஓர் அடிப்படையில் அகழப்பட்டு வருகின்றன. கல் வியாபாரிகளைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் இடங்களாக இவை அண்மைக் காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ளன.

புவியோட்டின் சிறியளவுப் பரப்பில் இரத்தினக் கற்கள் இங்ஙனம் செறிந்து காணப்படும் இத்தனித்த புவிச் சரிதவியற் தன்மைக்கு, ஒன்றுடன் ஒன்றிணைந்த பல்வேறு அம்சங்கள் காரணமாகின்றன. தாய்ப்பாறையின் புவிச் சரிதவியல், அப்பகுதியின் இடவிளக்கவியல், அல்லது தரையின் மேற்பரப்பு அம்சங்கள், வானிலையழிவின் நீண்ட சுற்றோட்டங்கள் அல்லது நீண்ட காலமாக மாறிச் செல்லும் கால நிலைத் தன்மைகள் புவிச் சரிதவியற் காலத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய மண்ணரிப்புக்கள் படிவுகள், இரத்தினக் கற்களின் பௌதிக, இரசாயன உட்சேர்க்கைகள் (அல்லது கூறுகள்) போன்றன இவ்வம்சங்களாகும். இலங்கையின் நிலத்திணிவின் (அடிப்படைப் பாறையின்) பத்திலொன்பது பாகம் கேம்பிரியனுக்கு முற்காலப் பாறைகளால் ஆக்கப்பட்டுள்ளதெனப் புவிச் சரிதவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இப்பாறைகளிலேயே எமது நாட்டுக்குப் பெருஞ் செல்வத்தைத் தேடித்தரும் இரத்தினக் கற்கள் தோன்றி முதிர்ச்சி பெறுகின்றன. இரத்தினக் கற்கள் பொதுவாக ஆற்றுப்படுக்கைகள், குன்றுகளின் அடிவாரங்கள், வயல் நிலங்கள் ஆகியனவற்றில் காணப்படும் பரந்த கற்படைகள் (கிராவல்), மணல் முதலியனவற்றுடன் கலந்து காணப்படுகின்றன. தோரமல்லி, கார்னட், எமதைஸ்ட், மூன்ஸ்டோன் முதலிய தாய்ப்பாறைகளிலிருந்து தோன்றும் கற்களைத் தவிர நீலம், சிகப்புக் கற்களும் வைடூரியம், பசுங்கல், ஆறு நூல் முதலிய சகல கற்களும் இத்தகைய படிவுகள் காணப்படும் இடங்களிலிருந்தே அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

இலங்கையின் இரத்தினக் கற்களை பெறுமதிமிக்க கற்களெனவும், ஓரளவு பெறுமதிமிக்க கற்களெனவும் பரந்த இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் பெறுமதிமிக்க கற்களே எமது ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பகுதியைப் பெற்றுத் தருகின்றன. இவ்விரு வகைக் கற்களிடையேயான அவற்றின் விலைப் பெறுமதிகளும் பெருமளவு வேறுபட்டுக் காணப்படுகின்றன. 'காரட்' பெறுமதி அடிப்படையில் நோக்கின், பெறுமதி மிக்க கற்கள் பெறும் விலையில் மிகவும் சிறிய ஒரு பங்கினையே ஓரளவு பெறுமதி மிக்க கற்கள் பெறுகின்றன. உதாரணமாக, 1973 ல், ஓரளவு பெறுமதி மிக்க கல்லான எமதைஸ்டின் உள்ளூர் மொத்தச் சந்தை விலை காரட் சுமார் 100 ரூபாவாகக் காணப்பட்டது; இதே வேளை பெறுமதி மிக்கதான நீலக்கல் ஒன்றின் விலை காரட் 20 ஆயிரம் ரூபா வரை காணப்பட்டது, செம்மணி (சிவந்த இரத்தினம்), (கார்னட்) தோரமல்லி, கோமேதகம், புஸ்பராகம், படிகம், செவ்வந்திக்கல், மூன்ஸ்டோன் என்பன ஓரளவு பெறுமதிமிக்க கற்களாகும்; நீலக்கல் (புளு சபயர்), பிங்க் சபயர், யெலோ சபயர், பதுமராகம், ஆறு நூல் கல் (ஸ்டார் ரூபி) என்பன மிகப் பெறுமதி வாய்ந்த கற்களாகும். வைடூரியம் (கெட்ஸ் ஐ) ஓரளவு பெறுமதி வாய்ந்த கல்லாக இருப்பினும், மிக அரிதாகவே கிடைப்பதனால் விலை உயர்வாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. எமது நாட்டிற் பெருந்தொகையிற் காணப்படும் பெறுமதி மிக்க இரத்தினக் கற்களுள் நீலக் கற்கள் முக்கியமானவை. இக் கற்களின் நீல நிறத்துக்கேற்ப (இவற்றின் நிறம் மங்கலான இள நீளத்திலிருந்து கடும் நீல நிறம் வரை வேறுபட்டுக் காணப்படும்) விலையும் வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆழமான கடும் நீல நிறக் கற்களே மிகவும் சிறந்ததெனக் கணிக்கப்படுவதுடன் மிக உயர்ந்த விலையையும் பெறுகின்றன. இரத்தினக் கற்களுள் மிகவும் அழகானவை பசுங் கற்களாகும்; இவை மிக அரிதாகவே கிடைக்கின்றன. கனிப்பொருட்களுக்கான விதிகளிலிருந்து வேறுபட்டு நிற்கும் இவ் வியப்புக்குரிய கல், பகல் வெளிச்சத்தில் கண்ணைக் கூச வைக்கும் கடும் பச்சை நிறமாகவும், மின்சார வெளிச்சம் போன்ற செயற்கை வெளிச்சத்தில் செவ்வூதா நிறத்தையும் காட்டி நிற்கிறது. எமது ஏற்றுமதிச் சந்தையில் இக்கற்கள் பிரதான இடம் வகிக்கின்றன.

## இலங்கையில் இரத்தினக்கல் அகழ்வு

இலங்கையின் சுரங்கமகழ்தல் தொழில்களுள் இரத்தினக் கல் அகழலே மிகப் பழைமையான தொழில் எனலாம். இவ்வகழ்வு முறையானது இன்றும் கூட பாரம்பரிய முறையிலேயே செய்யப்பட்டு வருகின்றது. இரத்தினக் கல் அகழ்வு வேலைகளில் ஈடுபடுவோர் பொதுவாக சோதிடர்களைக் கலந்தாலோசித்த பின்னர், சிறிய ஒரு சமயாசார வைபவத்தைத் தொடர்ந்தே தங்கள் நடவடிக்கைகளைத் தொடங்குவர் காலடியின் கீழ் இருக்கும் செல்வங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் ''பஹிரவயா'' என்ற பிசாசுக்கும், அப்பிரதேசத்தின் காவல் தெய்வத்துக்கும் சடங்குகள் செய்யப்பட்டு தானங்கள் வழங்கப்பட்ட பின்னரே வேலைகள் தொடங்குகின்றன. உதாரணமாக இரத்தினபுரியில் இவ்வாறான தானங்கள் சமன் கடவுளுக்கு வழங்கப்படும்.

நாட்டின் இரத்தினக்கற் படிவில் பெரும்பகுதி இரத்தினபுரி மாவட்டத்தின் வண்டல் மண் படிவுகளிலும், தீவின் தென் மேற்குப் பாகத்திலும் காணப்படுகிறது. படிவுகளின் தன்மைக்கேற்ப, தரை மேற்பரப்பில் அகழ்தல், குழிகளில் (பள்ளங்களில்) அகழ்தல், சுரங்கங்களில் அகழ்தல், ஆற்றுப்படுக்கைகளில் அரித்து அகழ்தல் முதலிய பல்வேறு முறைகளில் கற்களை அகழும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தபோதும், வண்டற் படிவுகள் எங்கும் இரத்தினக் கற்கள் காணப்படுவதில்லை. குழிகளில் அகழ்தலும், சுரங்கங்களில் அகழ்தலுமே இன்று காணப்படும் பொதுவான அகழ்வு முறைகளாகும். இத்தகைய குழிகளைத் தோண்டுதற்கான இடங்கள் பெரும்பாலும் தற்செயலாகவே கண்டு பிடிக்கப்படுகின்றன. கிணறு வெட்டும் போதோ, அல்லது ஆற்றில் கிடக்கும் சில கூழாங் கற்களைக் கண்டோ இரத்தினக் கற் படிவொன்றை இனங்கண்டு கொள்வதுமுண்டு. அண்மைக் காலங்களில் இரத்தினக்சற் பிரிவுகளை இனம் கண்டு சொள்ள ''இல்லங்கூற'' என்றழைக்கப்படும் கூரான ஓர் இரும்பு ஆயுதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாயுதத்தை மண்ணுட்செலுத்தி, ''இல்லம்'' அல்லது இரத்தினக் கற்களைக் கொண்ட பரல் மண் எவ்வளவு ஆழத்திற காணப்படுகிறதென்பதை அறிந்துகொள்ளலாம். தரை மேற்பரப்பிலும், ஆழமற்ற குழிகளிலும் அகழ்தல் வேலைகள் எலஹர, பக்கமூண, ஓக்காம்பிட்டிய பகுதிகளிற் காணப்படுகின்றன.

சிறியளவு களியையும், சுத்தமான மண்ணையும் கொண்ட கூழாங்கற் படைகளிலேயே இரத்தினக் கற்கள் பெருமளவு காணப்படுகின்றன. பொதுவாக வண்டற் படிவுகளின் கீழ், இரத்தினக் கற்களைக் கொண்ட இப் படைகளைக் (இதனையே ''இல்லம்'' என்பர்) காணலாம். இரத்தினக் கற்களைக் கொண்ட படைகள் காணப்படும் ஆழத்துக்கேற்ப குழிகளின் ஆழம் காணப்படும். ஆழமற்ற குழிகள் கிணறுகள் போன்ற வட்ட உருவிலும், ஆழமானவை நீள் சதுர வடிவிலும் காணப்படும். ''வாழ்க்கத் தட்டு'' என்பதன் மூலம் அவர்கள் இக்குழிகளின் ஆழத்தை அளவிடுகின்றனர். சில ஆழமான குழிகளில் ஒன்றுக்குக் கூடிய படைகள் அல்லது ''இல்லங்கள்'' காணப்படலாம். அத்துடன், தரையின் மேற்புறத்திலும் அதே போன்று ஆழத்திலும் இல்லங்கள் காணப்படலாம். முன்னதை ''கொட இல்லம'' என்றும் பின்னையதை ''யட்ட இல்லம'' எனவும் அழைப்பர். சில சந்தர்ப்பங்களில் ஒன்றன் கீழ் ஒன்றாக, மூன்று அல்லது நான்கு இரத்தினக் கல் நரம்புகள் காணப்படலாம். இரத்தினக் கற் படுக்கைகள் நீள் சதுரமாக விருப்பின் நரம்பை அப்படியே தூக்கியெடுக்க ''தோனுவ'' என்ற சுரங்கங்கள் வெட்டப்படும். இல்லத்தை மேலே கொணர்ந்து பிரம்புக் கூடைகளின் உதவியுடன் அதனைக் கழுவுவர்; இதன் மூலம் மண் அகற்றப்பட்டு கூழாங்கற்கள் எஞ்சும். பின்னர் கூடையைச் சூரிய ஒளியில் வைத்து, அநுபவம் மிக்கோர் எஞ்சிக் காணப்படும் கற்களை நன்கு பரிசீலனை செய்து இரத்தினக் கற்கள் எவையும் காணப்படுகின்றனவா எனப் பார்த்துக் கண்டுபிடிப்பர்.



இலங்கையில் இரத்தினக்கற்கள் காணப்படும் பிரதேசங்கள்

பாரம்பரிய அகழ்வு முறையின் கீழ், சில தொழிலாளர்கள் மாத்திரம், முழு அகழ்வு நடவடிக்கைகளுக்குமெனக் கூலிக்கமர்த்தப்படுவர். அகழ்வு வேலைகளில் இயந்திரங்கள் இங்கு பயன்படுத்தப்படுவது கிடையாது. சில வேளைகளில், ஆழமான குழிகளில் சேரும் தண்ணீரை வெளியேற்ற தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியை நாடுவதுண்டு; இது தவிர வேறெவ்வித இயந்திரங்களின் உதவியும் நாடப்படுவது கிடையாது. இத் தண்ணீரை வெளியேற்றுவதிலும் இன்று பல இடங்களில் புராதன முறைகளே

கையாளப்படுகின்றன. சக்கரமொன்றைச் சுழற்றுவதன் மூலம், வாளி குழியினுட் சென்று தண்ணீரை வெளிக் கொணரும் ''தபரயா'' முறை அல்லது சாதாரண ''துலா'' (ஆண்டியா'') முறைகள் இவற்றுட் குறிப்பிடத்தக்கவை.

இரத்தினக் கல் அகழ்வுத் தொழிலின் அமைப்பு, பாரம்பரிய அம்சங்களை மாத்திரமின்றி, ஓரளவு முதலாளித்துவ தன்மைகளையும் பிரதிபலிக்கின்றது. இரத்தினக் கற்களின் அகழ்வு நடவடிக்கைகளில் வேலை செய்வோர் தனிப்பட்ட முறையிலேயே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட முன்னர் அதிலீடுபடுவோர் ஒன்று சேர்ந்து, இடப்படும் முதல், தொழிலாளர், இலாபப் பகிர்வு போன்ற விஷயங்கள் பற்றிக் கலந்துரையாடி இணக்கத்துக்கு வருவர்; வழக்கமாக காணியின் சொந்தக்காரரோ அகழலுக்கான அரசாங்க அனுமதிச் சீட்டைப் பெறப் பொறுப்பாகவிருப்பவர். (முன்னர் அவ்வப்பகுதி அரசாங்க அதிபரின் பொறுப்பிலிருந்த இவ்வனுமதி வேலை தற்போது இரத்தினக் கற் கூட்டுத்தாபனத்தால் செய்யப்படுகிறது.) இவ்வகையில் காணிச் சொந்தக்காரருக்கு இலாபத்தில் பத்திலொரு பங்கு கிட்டும். முதலீட்டுக்கும் அவர் ஒரு தொகையை வழங்கின், இலாபத்திலும் அவருக்கொரு பங்கு கிடைக்கும். இதுவே, பொதுவாக இரத்தினக் கல் அகழ்வுப் பகுதிகளில் கடைப்பிடிக்கப்படும் பொதுவான வழக்கமாகும். இரத்தினபுரிப் பகுதியில், பங்குதாரர்களுக்கு இலாபத்தில் பத்திலொரு பங்கை அளிக்கும் வழக்கம் உண்டு. சில வேளைகளில் பங்குதாரர் ஒவ்வொருவரும் தமது சார்பில் ஒரு தொகைத் தொழிலாளரை அமர்த்த வேண்டி ஏற்படுவதும் உண்டு. தம்மைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இத்தொழிலாளிக்கு வாரம் 15 ரூபாவைக் கொடுக்கும் அதே வேளை, இத்தொழிலாளிக்கும் கிடைக்கக் கூடிய இலாபத்தில் ஒரு பங்கு கிட்டும்; இதற்கு ''கறுஹவுல'' என்று பெயர்; பங்குதாரருக்குக் கிடைக்கும் இலாபப் பங்கில் சுமார் எட்டில் ஒரு பங்கு இவருக்குக் கிடைக்கும். இதே போன்று அகழ்வு நடவடிக்கைகளில் பயன்படுத்தவென ஒருவர் ஒரு தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை வழங்கின், அவரும் இலாபத்தில் ஒரு பங்குக்கு உரித்துடையவராவார். இத்தகைய ஓர் இயந்திரத்தை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு பெருஞ் செலவு ஏற்படுமாதலால் இவ் வேற்பாடு பின்பற்றப்படுகிறது. மழை வீழ்ச்சி அதிகமுள்ள இரத்தினபுரிப் பகுதிகளில் ஆழமான அகழ்வுக் குழிகளில் நிரம்பும் தண்ணீரை வெளியேற்றுவதற்கு, நீர் இறைக்கும் இயந்திரங்களுச்கும் பெரும் கிராக்கி நிலவுகிறது. பாரம்பரிய முறைகளிலும் பார்க்க இம் முறையில் மிகச் சுலபமாகவும், விரைவாகவும் நீரை வெளியேற்றிவிட முடியுமென்பது இதற்குக் காரணம். எந்தக் குழியில் அந்நீர் இறைக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படுகிறதோ அதில் கிடைக்கும் இரத்தினக் கற்கள் அனைத்துமூலமாகவும் கிடைக்கும் மொத்த இலாபத்திலிருந்து ஐந்திலொரு பங்கினைத் தண்ணீர் இறைக்கும் இயந்திரச் சொந்தக்காரர் பெறுவர் இப்பொழுது இதன் முக்கியத்துவம் கூடி வருகின்றது. எனினும், இரத்தினபுரி தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்நிலை காணப்படுவதில்லை என்றே கூறவேண்டும்.

தற்போது நாட்டில் நிலவும் இரத்தினக் கல் அகழ்வு நிறுவன முறைகளைப் பார்க்கையில் அவை மரபு ரீதியான அல்லது பாரம்பரிய முறைகளைப் பிரதிபலிக்கின்றன என்று கூறத் தோன்றலாம். ஆனல், இலாபப் பகிர்வு அடிப்படையில் தொழிலாளர்களை அமர்த்திக் கொள்ளல், மூலதனமிடுவோரிடையே இலாபத்திற் பெரும் பங்கு பிரித்து வழங்கப்படல் போன்றன இது ஒரு முதலாளித்துவ முயற்சியாக மாறிவருவதைச் சுட்டிக் காட்டுகின்றன.

## இரத்தினக் கல் அகழ்தலும் வெட்டலும்

கண்டு பிடிக்கப்படும் இரத்தினக் கற்கள், வெட்டப்பட்டு ஒப்பமிடப்படும் (பள பளபாக்கல்) வரை அதன் உண்மைப் பெறுமதியை நிச்சயித்தல் மிகக் கடினம்; இங்ஙனம் வெட்டப்பட்டு ஒப்பமிட முன்னர் இது சாதாரண கூழாங்கற்களைப் போன்று சொர சொரப்பானதாகவே சாட்சியளிக்கும். அகழ்வு வேலைகளில் மாத்திரம் ஈடுபடுவோர், இத்தகைய ஒப்பமிடாத கற்களைக் கண்டு பிடித்தவுடன் சுமாரான பெறுமதிக்கு அவற்றை விற்று விடுவர். பொதுவாக, உள்ளூரில் உள்ள தரகர்களே இவற்றைக் கொள்வனவு செய்வர்; இவர்கள் வெளியூர்களிலுள்ள வர்த்தகர்களின் முகவர்களாக (ஏஜண்டுகளாக) விளங்குகின்றனர். கொள்வனவு நடவடிக்கைகளில் இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் ஈடுபடத் தொடங்கிய தன் பின்னர், ஒப்பமிடாத கற்களின் வர்த்தகத்திலீடுபடும் கிராம வர்த்தகர்களின் பேரம் பேசும் நிலை குறிப்பிடத்தக்களவு பலமடைந்தாலும், இரகசியமாக இயங்கும் சில வர்த்தகர்களைப் பொறுத்த வரையில் இது இன்னும் நன்கு பலம் பெற வேண்டும். பொதுவாக ஏலத்தின் மூலமும், தனிப்பட்ட வர்த்தகத்தின் மூலமும் இரத்தினக் கல் விற்பனை நிகழ்கிறது. முன்னர் கூறியது போன்று வர்த்தகத்தில் இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் ஈடுபடத் தொடங்கியதன் பின்னர், அகழப்படும் கற்களின் பெறுமதி பற்றி மக்களுக்கு முன்னரைவிடக் கூடிய அறிவு ஏற்பட்டுள்ளதென்பது இங்கு கவனிக்கத்தக்க தொன்றுகும்.

தரகர்கள் அல்லது முகவர்கள் கொள்வனவு செய்யும் வெட்டப்பட்ட கற்கள் பேருவலை, காலி, கொழும்பு முதலிய இடங்களிலிருக்கும் தம் வர்த்தகர்களிடம் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்விற்பனையின் போது பாரம்பரிய ஒரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. வர்த்தகர் குறித்த கல்லைப் பரிசிலனை செய்த பின், அதனை அவர் வாங்கச் சம்மதிப்பின், ஒரு கைக்குட்டை அல்லது துணியொன்றின் கீழ் இருவரும் (வாங்குபவரும் விற்பவரும்) தங்கள் கைகளைப் பிணைப்பர்; விற்க வந்துள்ளவரது, விரல்களை எண்ணிப் பிடிப்பதன் மூலம், வாங்குபவர் கல்லுக்கான தனது விலையைத் தெரிவிப்பார். ஒவ்வொரு விரலுக்கும் ஒரு தொகை என்ற அடிப்படையிலேயே இக் கணக்கீடு நிகழ்வதுண்டு. குறித்த விலையை வற்க வந்தவர் ஏற்றுக் கொள்ளின், மற்றவரது கையை இறுக்கமாகப் பிடிப்பதன் மூலம் தமது விருப்பத்தைத் தெரிவிப்பார்: அன்றேல், அவரது விரல்களைப் பிடித்து தாம் கோரும் விலை இன்னதுதான் என்பதைத் தெரிவிப்பார். இது நடைபெறுகையில் எதுவித வாய்ப்பேச்சும் இடம் பெறுது என்பது குறிப்பிடத்தக்கது. முற்காலத்தில் இங்கு வர்த்தக நோக்கில் வந்த அரேபியர் காலந் தொட்டு இவ்வழக்கம் இருந்து வருவதாயும், சுதேச மொழிகளைத் தெரியாத அரேபியர் இங்ஙனம் தங்கள் வர்த்தகத்தை

மேற்கொண்டனர் எனவும் கூறப்படுகிறது. பெரும்பாலான பாரம்பரிய முஸ்லிம் வர்த்தகர்களிடையே, பல்வேறு வர்த்தகங்களிலும் இவ்வழக்கம் இன்றும் காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

இரத்தினக் கற்களின் பட்டம் வெட்டல், ஒப்பமிடல் வேலைகளில் ஈடுபடுவோர் முக்கியமாக இரத்தினபுரி, காலி மாவட்டங்களில் காணப்படுகின்றனர். இலங்கை முஸ்லிம்களின் கைகளிலேயே பெரும்பாலும் உள்ள இத்தொழிலில் பல்லாயிரக் கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். தந்தையிலிருந்து பிள்ளைகளுக்கு என்ற தலைமுறையடிப்படையாகவே இக்கலை போதிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும், தற்போது, இப்பட்டம் வெட்டல் ஒப்பமிடல் என்பனவற்றை உள்ளடக்கிய நவீன இரத்தினக் கல்லியல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கையால் இயக்கப்படும் ஒரு புராதன ரக இயந்திரத்தின் மூலமே பட்டம் வெட்டல் நடைபெறுகிறது. விஞ்ஞான ரீதியான முறைகள் எதுவும் இங்கில்லை. பட்டம் வெட்டத் தொடங்க முன்னர், கல்லின் பழுதுற்ற பகுதிகள் சீவப்பட்டு அகற்றப்பட்டு விடும். ஒப்பமிடுவதிலும் பழங்கால முறைகளையே இன்றும் பயன்படுத்துகின்றனர்.

தொழில் வசதி அடிப்படையில், இரத்தினக் கல் கைத்தொழிலானது எதிர்காலத்தில் விரிவு பெறும் சாத்தியங்களைக் கொண்டிருந்தாலும், அகழ்வு வேலைகளிலீடுபடுவோர் எண்ணிக்கையைப் பார்க்கையில், இதில் மேலும் பலர் ஈடுபட இடம் உண்டென்பது தெரிகிறது. சுரங்கமகழலில் உள்ள அபாயங்கள் இதற்கொரு தடையாகவுள்ள தென்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்; எனினும் பட்டம் வெட்டல், ஒப்பமிடல், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் நவீன முறைகளைப் பயன்படுத்தும் பட்சத்தில் பலருக்குத் தொழில் வாய்ப்பு வழங்க முடியும் என்பதை மறந்து விட முடியாது.

# ஏடுகள் சொல்வதென்ன?

பண்டைக்கால இலங்கையில் முத்தும், இரத்தினக் கற்களும் பிரதான வர்த்தகப் பொருட்களாக இருந்துள்ளன. கி.மு. 250 ல் தேவநம்பியதீச மன்னன் அசோக சக்கரவர்த்திக்கு அனுப்பிய பரிசுப் பொருட்களில் பெறுமதிவாய்ந்த கற்களும் அடங்கியிருந்தன என்று மகாவம்சம் கூறுகின்றது, ''இதுபோன்ற பெறுமதி வாய்ந்த பொருட்கள் இங்கில்லையே'' என்று குறி மன்னன் வியப்புற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5 ம் நூற்ருண்டின் பாகியனிலிருந்து 17 ம் நூற்ருண்டின் ரொபட் நொக்ஸ் வரையில் இங்கு வந்த சகல வெளிநாட்டுப் பிரயாணிகளும் நம் கற்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ஆரம்ப கால வரலாற்ருசிரியர்கள் பலர் ஸ்ரீலங்காவின் பெறுமதிமிக்க இரத்தினங்கள் பற்றி எழுதிப் போந்தனர்.

*இபின் பத்தூத்தாவின் ''ஆசிய ஆபிரிக்கப் பிரயாணங்கள் (1325 - 1354'')*

புத்தளத்திலிருந்து ஸ்ரீபாத மலை (செரந்திப் மலை) வரையிலான தன் பிரயாணத்தை விவரிக்கும் 14 ம் நூற்ருண்டின் இத்தேச சஞ்சாரி பின்வருமாறு எழுதுகின்ருர்.

''அதன் பிறகு நாங்கள், நாட்டின் பிரதான சுல்தானின் தலை நகரான குணகர் (குருணகல்) நகருக்கு வந்தோம். ஒடுக்கமான இரு மலைத்தொடர்களிடையே அமைந்திருக்கும் பள்ளத்தாக்கொன்றில் இந்நகர் அமைந்துள்ளது. சிவப்புக் கல் ஏரி என்றழைக்கப்படும் ஏரி ஒன்று இந்நகருக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இவ்வேரியில் சிவப்புக் கற்கள் காணப்படுவதனுலே இப்பெயர் வழங்கி வருகின்றது. குணகர் நகரின் சுல்தான் குமார் (இளவரசன்) என்றழைக்கப்படுகின்ருர். இவரிடம் ஒரு வெள்ளை யானை உண்டு. திருவிழாக்களின் போது அவர் இந்த யானையின் மீது சவாரி செய்வார். யானையின் நெற்றி பெருந்தொகையான சிவப்புக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பஹ்ரமான் என்றழைக்கப்படும் பிரமிப்பூட்டும் இச் சிவப்புக் கற்கள் இந்நகரில் மட்டுமே கிடைக்கின்றன. பெறுமதிவாய்ந்த இக்கற்கள் ஏரியிலிருந்து பெறப்படுகின்றன; அல்லது நிலத்தைத் தோண்டி எடுக்கப்படுகின்றன. இலங்கைத் தீவின் சகல பகுதிகளிலும்சிவப்புக் கற்கள் தென்படுகின்றன இக்கற்களுள் சில சிவப்பாகவும் சில மஞ்சளாகவும் சில நீல நிறமாகவும் இருக்கின்றன. நூறு பணம் பெறுமதியான கற்கள் மன்னனுக்குச் சொந்தமானவை; மன்னன் இவற்றைப் பணம் கொடுத்து வாங்குவான். அதை விடக் குறைந்த பெறுமதியுள்ள கற்கள் கண்டுபிடிப்போருக்கு உரித்துள்ளவையாகும். இதுவே இம்மக்களின் வழக்கமாகும். நூறு பணம் ஆறு தங்க தினர்களின் பெறுமதிக்குச் சமமானது.''

மலை உச்சியை பதூதா பின்வருமாறு வர்ணிக்கின்ருர்:

''பாதச்சுவடு இருக்கும் பாறையில் ஒன்பது ஓட்டைகள் துளைக்கப்பட்டுள்ளன; யாத்திரிகர்கள் தங்கம், பெறுமதிமிக்க கற்கள், நகைகள் போன்ற தம் காணிக்கைகளை இங்கு சமர்ப்பிப்பர்''

''மலையடிவாரத்தில் சிவப்புக் கற்கள் தென்படும் பெரிய ஏரி அமைந்துள்ளது. இவ்வேரியின் நீர் பார்வைக்கு பிரகாசம் மிக்க நீலமாகத் தென்படுகின்றது.''

— ரொபட் நொக்ஸ்

கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியின் கப்பல்களில் சேவையிலீடுபட்டிருந்த மாலுமியான ரொபட் நொக்ஸ், 1660 ம் ஆண்டில் கண்டிய மன்னனுல் கைது செய்யப்பட்டு ஏறத்தாழ 20 வருட காலமாக உள்நாட்டுப் பிரதேசங்களில் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். 'வரலாற்று உறவுகள்' என்ற தன் நூலில் இக்கால கட்டத்தில் தான் பெற்ற அனுபவங்களையும், தன் அவதானிப்புக்களையும் வெகு தத்ரூபமாக அவர் சித்தரிக்கின்ருர். தீவின் பெறுமதி வாய்ந்த கற்கள் பற்றி அவர் பின்வருமாறு சுவைபட வர்ணிக்கின்ருர்.

''இத்தீவிலே பெறுமதி வாய்ந்த பல்வேறு வகையான கற்கள் நிறைந்துள்ளன. இதனுல் மேலும் கற்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை மன்னன் இழந்துள்ளான். இக்கற்கள் காணப்படும் பகுதிகளில் கூர்மையான கழிகள் நிலத்தில் மேல் நோக்கிப் பொருத்தப்பட்டிருப்பதனுல் மக்கள் அப்பகுதிகளுக்குச் செல்ல அஞ்சுவர். மேலும் மன்னனின் பாவனைக்கான சிவப்புக்கல், நீலக்கல், வைடூரியம் போன்ற கற்கள் கிடைப்பதாகக் கூறப்படும் சில நதிகளும் உண்டு. அழகிய வர்ணங்களில் ஜொலிக்கும் நாவற்பழங்களைப்போன்ற கற்களை நான் நேரில் பார்த்துள்ளேன். இவற்றுட் சில பொத்தான்கள் போன்றும், ஒளி உட்புக முடியாததாகவுமிருக்கும். ஆனுல் இவை என்னவென்று புரிந்துகொள்ள முடியாதிருக்கும். சிவப்புக் கற்களையும், நீலக்கற்களையும் நான் கண்டுள்ளேன்.''

## எமது பொருளாதாரத்தில் இரத்தினக் கற்கள்

அண்மைக் காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில், இரத்தினக் கற்கள் ஓர் அதிமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளன; இதற்கு இரு முக்கிய காரணங்கள் உள. நாட்டின் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களுள் வெளிநாட்டுச் செலாவணியைப் பெருமளவு பெற்றுத் தரும் பிரதான வழிகளில் ஒன்ருக இது காணப்படுதல் இதில் முதலாவதாகும்; இரண்டாவது காரணி, இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்வோருக்கு 1972 முதல் அரசாங்கம் வழங்கிய ஊக்கத் திட்டங்கள், உள்ளூர் கைத்தொழில் முயற்சியாளர் மீது நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தியிருந்த பாதிப்பை ஓரளவு நிவிர்த்திக்க உதவியமையாகும்; இதே வேளை, பெருந்தொகை பணம் படைத்த புதிய வர்க்கமொன்றை உருவாக்க இது உதவிற்றென்பதனையும் மறுக்க முடியாது. நீண்ட பல காலமாக இந்நாட்டுக்குள் எட்டியும் பார்த்திராத பல்வேறு வகையான ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதில் இவ்வர்க்கம் முனைந்தது.

1975 ல் இரத்தினக் கல் ஏற்றுமதி மூலம் 18 கோடி 2 இலட்சம் ரூபா வருமானமாகப் பெறப்பட்டது; 1976 ல் இத்தொகை 26 கோடி 14 இலட்சம் ரூபாவாக அதிகரித்தது; இவ் வகையில் 45 சதவீத அதிகரிப்பு காணப்படுகிறதென்பது கவனிக்கத்தக்கது. 1971 ல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்களின் உத்தியோகபூர்வப் பெறுமதி 34 இலட்சம் ரூபாவாகும்; இதே வேளை இரத்தினக் கற் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபித்து வர்த்தகத்தை அதன் மூலம் ஒழுங்கமைத்தற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1972 ல் ஏற்றுமதிப் பெறுமதி 4 மடங்காக அதாவது 1 கோடி 23 இலட்சம் ரூபாவாக அதிகரித்தது. எனினும் அடுத்த ஆண்டில் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு அதியற்புதமானதாகக் காணப்பட்டது. 1973 ன் ஏற்றுமதிப் பெறுமதி 14 கோடி 8 இலட்சம் ரூபாவாகியது. 1976 ன் ஏற்றுமதிப் பெறுமதியான 26 கோடி 14 இலட்சம் ரூபா அவ்வாண்டுக்கான ஐந்து வருடத் திட்ட (1972 - 1976) இலக்கிலும் ஐந்து மடங்காக அதிகரித்திருந்தது.

இரத்தினக்கல் கைத்தொழிலானது நம் நாட்டின் பொருளாதாரத்துக்கு வழங்க விருக்கும் நன்மைகள் பற்றி 1970 ன் ஆரம்பங்களில் நாம் சிறிதளவே அறிந்திருந்தோம். ஏற்றுமதி செய்யப்பட்ட கற்களுட் பெரும் பகுதியின் பெறுமதி விவரங்கள் உத்தியோகபூர்வக் குறிப்பேடுகளுக்கு வராமையே இதற்குக் காரணம். 1970 க்கு முன்பும், நாட்டின் பொருளாதாரத்தில் இக் கைத்தொழில் ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியே இருந்தது: ஆனல், இது ஒரு தீய விளைவாகும். வெளிநாட்டுச் செலாவணிக்கென உத்தியோகபூர்வச் சந்தையொன்றையும் கட்டுப்பாடற்ற இன்னெரு சந்தையையும் உருவாக்க இது வழி கோலியது. 1950 ன் பிற்பகுதியிலும் 1960 களிலும் இரத்தினக் கல் வர்த்தகத்திலும், ஏற்றுமதியிலும் நிலவிய சட்ட விரோதக் கொடுக்கல் வாங்கல்கள் பொருளாதாரத்தைச் சீர்குலைத்ததுடன், நாட்டில் தொடர்ந்து இரு செலாவணி மாற்று வீதங்கள் நிலவி வரவும் ஏனைய காரணிகளை விடக்கூடிய அளவில் வழி கோலியது. அத்துடன், கடந்த இருபது ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் முக்கிய ஓர் அங்கமாக அமைந்து விட்ட புதிய ஒரு வர்த்தகர்குழுவொன்றையும் நாட்டில் உருவாக்கியது.

கடந்த காலத்தில் இரத்தினக் கற்களின் உள்ளூர் வர்த்தகமும் ஏற்றுமதியில் ஒரு பகுதியும் ஒரு சில குடும்பங்களின் ஏகபோகமாக இருந்து வந்துள்ளன. இவ் வர்த்தகர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தோராவர். ஏற்றுமதி, பெருமளவில் கள்ளக்கடத்தற் சந்தையிலேயே தங்கியிருந்தது. வெளிநாடுகளில் இலங்கை இரத்தினங்களுக்கு பெரு மதிப்பு ஏற்பட்ட 1960 ம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் இதனைக் குறிப்பாக அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. கிழக்கில் சிங்கப்பூர், ஹொங் கொங் போன்ற நகரங்கள் கடத்தல்காரர்களின் சொர்க்க புரிகளாக இருந்து வந்துள்ளன. மேற்குலகிலும் இவ்வாருன மையங்கள் இருந்திருக்கின்றன. 10 கோடி ரூபா முதல் 30 கோடி ரூபா வரையான பெறுமதியுள்ள கற்கள் வருடாவருடம் நாட்டுக்கு வெளியே கடத்தப்பட்டுள்ளதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. சில நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிவரத் திரட்டுக்கள், இந்நாடுகளுக்கு இரத்தினக் கற்கள் கடத்தப்பட்டுள்ளதைத் தெளிவாக நிரூபிக்கின்றன. ஹொங்கொங், ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளின் இறக்குமதிப் பதிவேடுகள் 1968 ல் இவை கூட்டு மொத்தமாக ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் கூடிய பெறுமதியுள்ள இரத்தினக் கற்களை இலங்கையிலிருந்து பெற்றுள்ளதைக் காட்டுகின்றன; இதே வேளை, எமது சுங்கப் பகுதிப் பதிவேடுகள் அவ்வாண்டு இந்நாடுகளுக்கு ஆக 20 இலட்சம் ரூபா பெறுமதியான கற்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. மேலும் 1970 ல் இலங்கையிலிருந்து இந்நாடுகள் பெற்றுக் கொண்ட இரத்தினக் கற்களின் பெறுமதி 3 கோடி ரூபாவுக்கும் அதிகமென அந்நாடுகளின் பதிவேடுகள் காட்டும் அதே வேளையில், எமது சுங்கப் பகுதிப் பதிவுகள் 43 இலட்சம் ரூபாவைக் காட்டுகின்றன. 1971 ல் இந்நாடுகள் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்துள்ள கற்களின் பெறுமதி 4½ கோடி ரூபாவாகவிருக்க எமது சுங்கப் பதிவுகள் ஆக 34 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களே ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. 1972 ல் இந்நாடுகள் இங்கிருந்து இறக்குமதி செய்த கற்களின் பெறுமதி 7 கோடி ரூபாவாக இருக்க எமது சுங்கப் பதிவுகள் ஒரு கோடி 23 லட்சம் ரூபா பெறுமதியான கற்களே ஏற்றுமதியானதாகத் தெரிவிக்கின்றன. 1972ன் பின்னர் நிலைமை சிறிது மாறி, மொத்த ஏற்றுமதிகளுள் 50 சதவீதம் உத்தியோகபூர்வமான ஏற்றுமதிகள் என்ற நிலையை எய்தியதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்த வருடங்களில் சட்ட விரோத ஏற்றுமதிகள் குறைந்து, 1976 ல் இது 30 முதல் 40 சதவீதம் வரையாகக் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினக் கல் ஏற்றுமதிப் புள்ளி விவரங்களின்படி, 1940 களில் இதன் மூலமான ஏற்றுமதி வருமானம் மிகச் சிறு தொகையாகவே காணப்பட்டது. யுத்தத்தைத் தொடர்ந்த காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகள் வர்த்தகத் துறையில் கட்டுப்பாடுகளை விதித்திருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். 1950 ஐத் தொடர்ந்து ஏற்றுமதிகள் அதிகரித்தன. கடந்த 30 வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால அதிகரிப்பை அட்டவணை 1 காட்டுகின்றது. 1960 க்கும் 1971 க்குமிடைப்பட்ட 12 வருட காலப் பகுதியுள் மொத்த ஏற்றுமதி வருமானம் சுமார் 3 கோடி 60 இலட்சம் ரூபாவாக அதாவது ஒரு வருடத்துக்கு சராசரி 30 இலட்சம் ரூபாவாகக் காணப்பட்டது.

(1) பெறுமதிமிக்க, ஓரளவு பெறுமதி மிக்க கற்கள் - செயற்கைக் கற்கள் உட்பட.

(2) தங்கம், வெள்ளி, பிளாட்டினம் ஆகிய உலோகங்களிலாலான ஆபரணங்கள், ஏனைய தங்க வெள்ளிப் பொருட்கள்.

சட்ட ரீதியாக (உத்தியோக பூர்வமாக) ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்களின் பெறுமதியையே இவ்வட்டவணை காட்டுகிறது; பெருமளவில் சட்ட விரோத — கள்ளக்கடத்தல் — ஏற்றுமதிகளும் நடைபெற்றுள்ளதால் இத்தொகை உண்மையில் மிக மிக அதிகமானதாக இருத்தல் வேண்டும். உலகின் பிரதான இரத்தினக்கல் இறக்குமதியாளர்களின் இறக்குமதிப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, ஐக்கிய அமெரிக்கா மட்டும் 1964 ல் 58 கோடி 60 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான கற்களையும், 1968 ல் 106 கோடி 40 இலட்சம் டொலர் பெறுமதியான கற்களையும் இறக்குமதி செய்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஹொங் கொங், ஜப்பான் மேற்கு ஜெர்மனி, சுவிற்சர்லாந்து முதலிய ஏனைய கொள்வனவு நாடுகளும் 1960 களில் தங்களது இறக்குமதிகளை அதிகரித்துள்ளன. இலங்கை இரத்தினங்களுக்கு உலகில் மிகப் பெரும் கிராக்கி காணப்பட்ட போதும், 1960 களின் பின்னரைப் பகுதியில், எமது உத்தியோகபூர்வ ஏற்றுமதிகளின் மூலமான வருமானம் வெகுவாகக் குறைந்தது. 1969 ல் இத்துறையில் ஒரு ஒரு பெரும் வீழ்ச்சி காணப்பட்டது. பேரளவில் நடைபெற்ற இரத்தினக் கற்கடத்தலே இதற்குக் காரணமாகும்; இக் கடத்தல் குறிப்பாக சிங்கப்பூர், ஹொங் கொங் ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டது.

உலகின் மொத்த இரத்தினக் கல் ஏற்றுமதியில் இலங்கையின் ஏற்றுமதிகள் ஒரு சதவீதத்துக்கும் குறைவானதாகும். உலக ஏற்றுமதிகளின் வருட மொத்தப் பெறுமதி 600 கோடி அமெரிக்க டொலராகும். உலக நாடுகள் சிலவற்றின் இறக்குமதி, ஏற்றுமதிப் புள்ளிவிவரங்கள் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளன. தாம் இறக்குமதி செய்யும் கற்களுள் ஒரு தொகையை பட்டம் வெட்டி ஒப்பமிட்டு இந்நாடுகள் மீண்டும் ஏற்றுமதி (மறு ஏற்றுமதி) செய்கின்றன; இதன் மூலம் இவை பெருமளவில் இலாப மீட்டுகின்றன. மிக நவீன விஞ்ஞான ரீதியான உபகரணங்களைப் பயன்படுத்தி இப்பட்டம் வெட்டல் நடவடிக்கைகளில் அவை ஈடுபடுகின்றபடியால் இக் கற்களுக்குப் பெரும் மதிப்புக் காணப்படுகிறது.

ஏற்றுமதியைப் பொறுத்தளவில் இலங்கை சர்வதேசச் சந்தையில் பலத்த போட்டியை எதிர்நோக்குகின்றது. இங்ஙனம் போட்டியிடும் நாடுகளுள் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, பர்மா போன்ற ஆசிய நாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. 1970 களின் ஆரம்பகாலப் பகுதியில் இலங்கை இரத்தினங்களுக்கு ஹொங் கொங்கே மிகப் பெரிய சந்தையாக இருந்து வந்தது. இதற்கடுத்ததாக ஜப்பான் காணப்பட்டது. உத்தியோகபூர்வப் புள்ளிவிவரங்களின்படி 1975 .ல் ஜப்பான். முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. 1974ஐ விட 1975 ல் ஜப்பான் தனது ஏற்றுமதிகளை 250 சதவீதத்தால் அதிகரித்துக் கொண்டது. இதே வேளை, ஹொங் கொங்கில் ஆக 23 சதவீத அதிகரிப்பே காணப்பட்டது. அட்டவணை 3 சுட்டிக் காட்டுவது போன்று இலங்கையின் அண்மைக்கால ஏற்றுமதிகளுட் பெரும்பாகம் ஹொங் கொங்கொங்குக்கும் ஜப்பானுக்குமே சென்றுள்ளன. உத்தியோக பூர்வ அறிக்கைகளின்படி 1973ல் இவ்விரு நாடுகளும் இலங்கையின் ஏற்றுமதிகளுள் 80 சதவீதத்தை அல்லது $11\frac{1}{2}$ கோடி ரூபா பெறுமதியான இறத்தினக் கற்களைக் இறக்குமதி செய்துள்ளன. 1974 ல் இது 45 சதவீதமாக அல்லது 5 கோடி ரூபாவாகக் குறைந்தது. 1975 ல் இது 70 சதவீதம் அல்லது 12 கோடி 45 இலட்சம் ரூபாவாகி, 1976 ல் 75 சதவீதமாக அல்லது $19\frac{1}{2}$ கோடி ரூபாவாக அதிகரிக்கலாயிற்று. 1977ன் முதல் 8 மாதங்களில் இவ்விரு நாடுகளும் இலங்கையிலிருந்து மொத்தம் 16 கோடி 84 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களை இறக்குமதி செய்துள்ளன: இது, இவ்வருடம் ஆகஸ்ட் வரை இலங்கை ஏற்றுமதி செய்த

அட்டவணை 1

**இரத்தினக் கற்கள் ஆபரணங்கள் மூலமான ஏற்றுமதி வருமானம்**
(10 இலட்சம் ரூபாவில்)

| வருடம் | | | | இரத்தினக் கற்கள் | ஆபரணங் கள் |
|---|---|---|---|---|---|
| 1947 | .. | .. | .. | 37,783 | 19,817 |
| 1951 | .. | .. | .. | 185,370 | 6,306 |
| 1955 | .. | .. | .. | 601,036 | 194,817 |
| 1958 | .. | .. | .. | 1,535,952 | 116,183 |
| 1959 | .. | .. | .. | 2,964,254 | 89,432 |
| 1960 | .. | .. | .. | 3,016,698 | 204,074 |
| 1961 | .. | .. | .. | 2,359,576 | 2,154 |
| 1962 | .. | .. | .. | 3,563,586 | 1,699,770 |
| 1963 | .. | .. | .. | 3,646,891 | 3,815,607 |
| 1964 | .. | .. | .. | 1,312,127 | 7,217,633 |
| 1965 | .. | .. | .. | 4,080,241 | 1,823,163 |
| 1966 | .. | .. | .. | 3,884,456 | 1,722,753 |
| 1967 | .. | .. | .. | 3,471,145 | 2,337,263 |
| 1968 | .. | .. | .. | 2,028,357 | 1,181,587 |
| 1969 | .. | .. | .. | 674,105 | 965,366 |
| 1970 | .. | .. | .. | 4,284,356 | 1,019,513 |
| 1971 | .. | .. | .. | 3,446,286 | 268,223 |
| 1972 | .. | .. | .. | 12,331,076 | 230,256 |
| 1973 | .. | .. | .. | 140,785,869 | 146,866 |
| 1974 | .. | .. | .. | — | — |
| 1975 | .. | .. | .. | 180,227,684 | 2,223,713 |
| 1976 | .. | .. | .. | — | — |

மூலம்: இலங்கைச் சுங்கப்பகுதி.

(1) பெறுமதிமிக்க, ஓரளவு பெறுமதி மிக்க கற்கள் — செயற்கைக் கற்கள் உட்பட.

(2) தங்கம், வெள்ளி, பிளாட்டினம் ஆகிய உலோகங்களிலாலான ஆபரணங்கள் ஏனைய தங்க வெள்ளிப் பொருட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த இரத்தினக் கற்களுள் சுமார் 80 சதவீதமாகும்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தளவில், அண்மைக் காலத்தில் இலங்கையின் இரத்தினங்களைப் பெருமளவில் இறக்குமதி செய்யும் நாடு சுவிற்சர்லாந்தாகும். புள்ளிவிவரங்களின்படி இந்நாடு, 1973 ல் 1 கோடி 54 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களையும் 1974 ல் 2 கோடி 20 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களையும் 1975 ல் 2 கோடி 80 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களையும், 1976 ல் 2 கோடி 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களையும் இறக்குமதி செய்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி என்பனவும் தங்கள் கொள்வனவை நன்கு அதிகரித்து வருகின்றன: குவைத், லெபனான், துபாய், சவூதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளும், சமீபத்தில் எம் இரத்தினக் கற்களை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

இலங்கையிலிருந்து ஏற்றுமதிச் செய்யப்படும் இரத்தினக் கற்கள் பெரிதும் ஆபரண வர்த்தகத்திலேயே பயன்படுத்தப்படுகின்றன. உபகரணங்கள், கைக்கடிகார உற்பத்தியிலும் சிறிதளவில் இவை பயன்படுகின்றன. எனினும், மிகவும் விலையுயர்ந்த கற்களைத் தனிநபர்கள் பேணிப் பாதுகாத்து வைக்கும் பொருட்டே வாங்குகின்றனர். 1973 ன் உலகளாவிய பணச் சுருக்கத்தைத் தொடர்ந்து பல நாடுகள், அவற்றின் அலங்காரம் பெறுமதிகளுக்காகவன்றி, அவற்றின் உள்ளார்ந்த முதலீட்டுத் திறனுக்காகவே இரத்தினக் கற்களைக் கொள்வனவு செய்தன. உதாரணமாக, அக் காலத்தில் பெருமளவு டொலர் மீதத்தை வைத்துக் கொண்டு அவற்றை ஜப்பானின் யென் நாணயத்துக்கு மாற்ற முடியாது திண்டாடிய நிறுவனங்கள், அந்த டொலர் பணத்தை இரத்தினக் கற்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுக்கு வழங்கின. நாணயப் பரிவர்த்தனைப் பெறுமதிகளில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வங்கிகளும் தங்கள் வாடிக்கையாளர்களை இரத்தினக் கற்களில் முதலீடு செய்யத் தூண்டின. பங்கு சரக்கு முதல் என்பனவற்றை விட, மேலும் பொருத்தமானவற்றில் தங்கள் பணத்தை முதலீடு செய்ய வேண்டுமென்ற மனோபாவம் பல முதலீட்டாளர்களின் கவனத்தை தற்போது ஈர்த்துள்ளது.

அட்டவணை 2

### தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகள் சிலவற்றின் இரத்தினக் கல் வர்த்தகப் புள்ளிவிவரங்கள் 1975

('000 அமெரிக்க டொலர்)

| | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
|---|---|---|
| உலகம் | 5,848,678 | 5,646,093 |
| பிரிட்டன் | 2,027,227 | 1,907,019 |
| ஐக்கிய அமெரிக்கா | 8,51,455 | 3,96,607 |
| ஜப்பான் | 3,87,684 | 67,055 |
| ஹொங்கொங் | 333,311 | 236,827 |
| மேற்கு ஜெர்மனி | 221,004 | 107,894 |
| நெதர்லாந்து | 69,033 | 43,402 |
| இந்தியா | 69,334* | 134,194* |
| சிங்கப்பூர் | 20,935 | 9,320 |
| தாய்லாந்து | 4,271 | 37,971 |
| பர்மா | | 5,411* |

* 1974 க்குரியது

மூலம்: சர்வதேச வர்த்தகப் புள்ளிவிவர ஆண்டறிக்கை — 1975

எனவே, இலங்கை இரத்தினங்களுக்கான உள்ளார்ந்த சந்தைகள் பெரும்பாலும் அமெரிக்கா: ஜப்பான், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, மத்திய கிழக்கு நாடுகள் முதலிய உயர் வருமான நாடுகளிலும், சிங்கப்பூர், ஹொங் கொங் முதலிய புகழ் பெற்ற வர்த்தக மையங்களிலும் தான் காணப்படுகின்றன.

எமது இரத்தினங்களை இறக்குமதி செய்யும் நாடுகளுள் ஜப்பான் தான் உள்ளூர்த் தேவைக்கென அவற்றைப் பயன்படுத்துகிறது; சுவிற்சர்லாந்தும், ஹொங்கொங்கும் இவற்றுட் பெருந்தொகையை மறு ஏற்றுமதி செய்கின்றன. உலகின் மிகப் பெரிய இறக்குமதி நாடான ஐக்கிய அமெரிக்கா அதன் இறக்குமதிகளை 40% அதிகரித்திருந்த போதிலும், இலங்கைக் கற்களை நேரடியாக வாங்குவதில் முக்கியத்துவம் பெறவில்லை. ஏற்றுமதிகளைக் கையாள்வதற்கு நிறுவன ரீதியான ஓர் அமைப்பு அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர், இரத்தினக் கல் ஏற்றுமதி மூலமான வருமானம் படிப்படியாக அதிகரித்துள்ளது. 1972 ல் அறிமுகப் படுத்தப்பட்ட மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம், இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டமை என்பன இவ்வதிகரிப்புக்கு முழு முதற் காரணிகளாயின.

சர்வதேச இரத்தினக் கல் வர்த்தகத் துறையில், கூட்டுத்தாபனம் ஏற்படுத்திய ஒரு முக்கிய விளைவு, கொழும்பை ஒரு வர்த்தக மையமாக மாற்றியமைத்ததாகும். முன்னர் முக்கிய வர்த்தக மையமாக ஹொங்கொங் விளங்கியதுடன், இது கள்ளக் கடத்தலையும் ஊக்குவித்தது. கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்ட பின்னர் அது பெருந்தொகைக் கற்களைக் கையிருப்பில் வைத்துக் கொள்ளத் தொடங்கியது. 1973 ல் 10 கோடி 70 இலட்சம் ரூபா பொறுமதியான கற்களை அது இங்ஙனம் கையிருப்பில் வைத்திருந்தது. இவ்வகையிற் தாங்கள் தெரிவு செய்து வாங்கக் கூடிய பெருமளவு ரகக் கற்கள் இங்கிருந்தமையால் கொழும்பு வந்து கொள்வனவு செய்தல் வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு இலாபமாயிற்று. உள்ளூர் வர்த்தகர்களும், தங்கள் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களை இங்கு அழைக்க முற்பட்டனர். பல ஜப்பானியர்கள் இதன் விளைவாக இங்கு வந்தனர்.

### இரத்தினக கல் ஏற்றுமதியும் மாற்றக் தக்க ரூபாய்க் கணக்கும் (C. R. A.)

பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கென வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஊக்குவிப்பான இம் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு (சீ.ஆ,.ஏ.), இரத்தினக் கற் கைத்தொழிலைப் பொறுத்தளவில் மிக்க பயன் தரும் ஒன்றுயமைந்தது. இத்திட்டம் அமு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக்கப்பட்டது முதல், இரத்தினக் கல் வர்த்தகத்தின் மூலமாகவே இக் கணக்கிற் பெரும் பகுதி வைப்பு சேர்ந்துள்ளது. இரத்தினக் கல் ஏற்றுமதி வருமானத்தில் 25 % (பின்னர் இது 20 % ஆகி ஆகியது) வழங்கப்பட்டு, ஏனைய பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிகளுக்கு 5 % மாத்திரம் வழங்கப்பட்டமை இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணமாயிற்று. 1973 ன் இறுதிவரையான $1\frac{1}{2}$ வருட காலத்துள் இக் கணக்கில் மொத்தம் 5 கோடி 42 இலட்சம் ரூபா பற்ருக வைக்கப்பட்டது; இதில் 4 கோடி 65 இலட்சம் ரூபா இரத்தினக் கல் ஏற்றுமதி மூலமானதாகும். 1976 ல் இரத்தினக் கற்களின் ஏற்றுமதி மூலமான மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு $26\frac{1}{2}$ கோடி ரூபாவாகியது. இது 1972 - 73 ம் வருடக் கணக்கிலும் 275 % அதிகமாகும். கடந்த $4\frac{1}{2}$ வருடங்களில் பற்று வைக்கப்பட்ட மொத்த மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் தொகையான 42 கோடி ரூபாவில் 24 கோடி 70 இலட்சம் ரூபா அல்லது 60% இரத்தினக் கற்களின் ஏற்றுமதிமூலம் கிடைத்ததாகும். 1975 ல் இரத்தினக் கல் ஏற்றுமதியாளர்கள் இக் கணக்கில் மிகக் குறைந்த தொகையையே பற்ருக வைத்தனர். 1976 ல் பெருந்தொகை இக்கணக்கிலிடப்பட்டது. 1975ல் 5 கோடி 57 இலட்சம் ரூபாவாகவிருந்த இத்தொகை, 1976 ல் 8 கோடி 17 இலட்சம் ரூபாவாகிற்று. இரத்தினக்கல் ஏற்றுமதி மூலமான சி.ஆர்.ஏ. வைப்பு 1976 ல் அதிகரித்த அதே வேளை, ஏனைய பாரம்பரியமற்ற பொருட்கள் மூலமான இவ் வைப்பு 1975 ல் 47 % இலிருந்து 1976 ல் 40 % ஆகக் குறைந்தது.

இக் கணக்கிற் பெருந்தொகையை இவ் ஏற்றுமதியாளர்கள் பல்வேறு வகைப் பொருட்களை இறக்குமதி செய்வதில் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றுடன், ஆடம்பரப் பொருட்களும், ஓரளவு ஆடம்பரப் பொருட்களும் இங்ஙனம் இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த வருட இறுதிவரை இக் கணக்கிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 31 கோடி 60 இலட்சம் ரூபாவில், சுமார் 26 கோடி 60 இலட்சம் ரூபா இறக்குமதிகளுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. 3 கோடி 30 இலட்சம் ரூபா வெளிநாட்டுப் பயணங்களுக்கும், ஒரு கோடி 70 இலட்சம் ரூபா உள்ளூர்ச் செலவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1976 ன் இறுதி வரை, 10 கோடி 40 இலட்சம் ரூபா இக் கணக்கில் தொடர்ந்து இருக்கக் காணப்பட்டது.

மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குகளின் (சி.ஆர்.ஏ.) எண்ணிக்கையும் வருடாவருடம் அதிகரித்து வருகின்றன. கணக்குகள்தொகை 1974 ல் 581 ஆகவும் 1975 ல் 588 ஆகவும் 1976 ல் 611 ஆகவும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது.

உத்தியோகபூர்வமாக ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக் கற்கள் மூலமான வருமானம், இக் கணக்கு அமுலுக்கு வந்ததன் பின்னர், குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்மை தெளிவாகத் தெரியும் ஓர் உண்மையாகும். இது இன்றேல் முன்னைய வருடங்கள் போன்று, நாடு பெருந்தொகைச் செலாவணியை இழந்திருக்க நேரிடும்.

இரத்தினக் கல் வர்த்தகத்தில் மிகப் பெருந் தொகையானோர் வந்து குவிந்தது, இக் கணக்கு ஏற்படுத்திய ஓர் எதிர்பாராத விளைவாகும்; ஏற்றுமதி மட்டங்களிலான கற்களின் விலைகள் இதனால் அதிகரித்தன. எனினும், இத் தொழிலில் ஈடுபட்டிருந்த அகழ்வோர், பட்டம் வெட்டுவோர், ஒப்பமிடுவோர் ஆகியோரது எண்ணிக்கையில் எத்தகைய அதிகரிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கின் குறிப்பிடத்தக்க பிறிதொரு விளைவு யாதெனில் பெருந்தொகையானோர் இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கியதாகும். இவர்களுட் பலர் பெரும் கைத்தொழிலதிபர்களும், வர்த்தகர்களுமாவர். சி.ஆர்.ஏ. கணக்கின் நன்மைகளைப் பெற்று, இவர்கள் தங்கள் கைத்தொழில், வர்த்தகங்களையும் அதன் மூலம் தம் வருமானத்தையும் மேலும் பெருக்கிக் கொண்டனர். இந்த சீ.ஆர்.ஏ. கணக்குகள் மூலம் மூலப் பொருட்கள் அல்லது ஆடம்பர, ஓரளவு ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இப் பொருட்கள் உள்ளூரில் அவற்றின் பெறுமதியை விடப் பன்மடங்கு இலாபத்தில் விற்கப்பட்டன. அல்லது இம் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு (சீ.ஆர்.ஏ.) பெரும் இலாபத்துடன் உள்ளூரில் விற்பனை செய்யப்பட்டது. இப் புதிய வர்த்தகர்களுட் பலர் இரத்தினக் கற்கள் பற்றியும் அதன் வர்த்தகம் பற்றியும் சிறிதளவே அனுபவம் பெற்றிருந்தமையால் தாம் வாங்கும் கற்களுக்கு கூடிய விலைகளைக் கொடுத்தனர். இதன் விளைவாக, 1974 ம் ஆண்டளவில், விற்பனை செய்ய முடியாத பெருந்தொகைக் கற்களை வைத்துக் கொண்டு ஏராளமான வர்த்தகர்கள் திண்டாடலாயினர். இரத்தினக் கல் கொள்வனவில் சிறிது தொகை நட்டமடைந்தாலும் பரவாயில்லை என நினைத்த சில வர்த்தகர்களும் காணப்பட்டனர். இவற்றின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கை (சீ. ஆர்.ஏ.) ஏனையோருக்கு விற்பதன் மூலமோ அல்லது இவற்றின் மூலம் பொருட்களை ஏனையோருக்காக இறக்குமதி செய்து கிடைக்கும் 200 முதல் 300 சதவீத இலாபத்தின் மூலமோ இந்நட்டத்தை ஈடுசெய்து கொள்ளலாமென இவர்கள் எண்ணலாயினர். இக் காலத்தில் நிலவிய உள்ளூர்ச் சந்தைக்கான மொத்த விலைகள், இரத்தினக்கல் ஏற்றுமதி மூலமான கப்பற்றரை வரையிலான விலைகளிலும் அதிகமாகவே காணப்பட்டன. உத்தியோக பூர்வமாகக் கற்களை ஏற்றுமதி செய்து, மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கையும் (சீ.ஆர்.ஏ.) பெற்ற பின்னர், மீண்டும் ஏற்றுமதி செய்தற்கென அதே கற்களை இந் நாட்டுக்குள் கடத்தி வந்துள்ள சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. (சுங்கப் பகுதிப் புள்ளிவிவரங்களின்படி 2 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்கள் இலங்கைக்குள் கடத்தப்படுகையில் பிடிபட்டுள்ளன.)

இரத்தினக்கல் ஏற்றுமதிக்கான மா.த.ரூ. கணக்கினை 20 சதவீதமாகக் குறைத்ததன் மூலமும், ஏனைய பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதிக்கான மா.த.ரூ. கணக்கு வீதத்தினை அதிகரித்ததன் மூலமும் 1974 அளவில் இத்தகைய நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

வர்த்தகத்தின் மூலத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்த இன்னொரு அம்சம் மென்மேலும் பல தரகர்கள் இவ் வர்த்தகத்தை வந்தடைந்ததாகும். இவ்வர்த்தகம் நன்கு பிரபலமடைந்தமை, ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்க நடவடிக்கைகள் என்பனவற்றால் இத் தரகர்கள் எண்ணிக்கை அதி

கரித்தது. முன்னர் 2 அல்லது 3 தரகர்கள் இருந்த இடத்தில் தற்போது 6 அல்லது 7 பேர் காணப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவர் கைகளினூடாகவும் கற்கள் வந்து செல்கையில் அதன் விலை இயல்பாகவே அதிகரித்து ஈற்றில் ஏற்றுமதியாளரைச் சென்றடைந்தது.

இவ்வர்த்தகத்தின் சர்வதேச மட்டத்திலும் இத்தகைய ஒரு நிலை காணப்பட்டதாக, ஜெனீவாவிலுள்ள சர்வதேச வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் நடத்திய மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஓர் இரத்தினக் கல் கடைசியாக அதனை வாங்குபவரைச் சென்றடைய முன்னர் 6 அல்லது 7 மொத்த வியாபாரிகளின் ஊடாகவே செல்கின்றதெனவும், இங்ஙனம் ஒருவர் இன்னொருவருக்கு விற்கையில் அவர் தமது இலாபத்தை அதிகரித்துக் கொண்டே அங்ஙனம் விற்பதாயும், இறுதி விலை இங்ஙனமே தீர்மானிக்கப்படுவதாயும் அந் நிபுணர் கூறுகிறார். பேரளவில் கொள்வனவுகள் நடைபெறுகையில் இதனை அவ்வளவு அவதானிக்க முடியாவிட்டாலும், ஏனைய சந்தர்ப்பங்களில் இது சர்வ சாதாரணமாகக் காணப்படுவதாயும், சில வேளைகளில் கற்களின் சில்லறை விலைகள் ஒருவர் வாங்க முடியாதளவு கூட அதிகரித்துக் காணப்படுவதாயும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஜப்பான் போன்ற நாடுகளில் இவ்விலைகள் ஆரம்ப உற்பத்தியாளரது விலையிலும் 400 முதல் 1000 வீதம் வரை அதிகரித்துக் காணப்படுவதாயும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்நிலை காணப்பட்ட போதிலும் ஜப்பான் இலங்கையிலிருந்து செய்யும் தனி இறக்குமதிகளை அதிகரித்தே வருகிறது. 1974 ல் 10 கோடி 85 இலட்சம் ரூபா மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில், ஒரு கோடி 57 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களை ஜப்பான் கொள்வனவு செய்தது. இதே போன்று 1975 ல் ஏற்றுமதியான 18 கோடி 2 இலட்சம் ரூபா கற்களுள் 7 கோடி 77 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களையும், 1976 ல் ஏற்றுமதியான 26 கோடி 19 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களுள் 9 கோடி 32 இலட்சம் ரூபா பெறுமதியான கற்களையும் ஜப்பான் இறக்குமதி செய்தது.

1974 ல் இலங்கையின் சர்வதேசச் சந்தையை ஆராய்ச்சி செய்ய வந்த சர்வதேச வர்த்தக நிலைய நிபுணர்கள், இலங்கை இரத்தினக் கற்களின் விலைகள் சர்வதேசச் சந்தையில் அதிகரிப்பதற்குப், பேரளவில் நிகழும் ஜப்பானியக் கொள்வனவுகளே காரணமெனக் கண்டனர். டோக்கியோவில் ஏராளமான ஜப்பானிய வர்த்தகத் தாபனங்கள் பெருமளவு டொலர் பணத்தை யென் நாணயமாக மாற்றிக்கொள்ள முடியாதிருந்தது; ஆகவே, இரத்தினக் கல் இறக்குமதியாளர்களுக்கு இவற்றை வழங்கிப் பின்னர், இவற்றுக்கான தொகையை யென் நாணயத்தில் பெற்றுக் கொள்ளுதல் இவற்றின் நோக்கம் போலத் தென்பட்டது. எனவே, இப்பெருவர்த்தக நிறுவனங்களுக்கு உண்மையில் இரத்தினக் கல் கொள்வனவில் அக்கறை இல்லையெனவும், அவர்கள் தமது உடனடி நோக்கைப் பூர்த்தி செய்யவே இந் நடவடிக்கையி லிறங்கியுள்ளனர் எனவும், இந் நோக்கம் பூர்த்தியானதுடன், இறக்குமதிகள் திடீரெனக் குறையுமெனவும் இந் நிபுணர்கள் இலங்கை

### மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம்

| | | பற்று | | | | | வரவு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | திறக்கப்பட்ட கணக்குகளின் தொகை | இரத்தினக் கல் ஏற்றுமதி | ஏனைய ஏற்றுமதிகள் 1 | உல்லாசப் பயணத் துறை | ஏனையவை 2 | மொத்தம் | இறக்குமதிகள் | வெளிநாட்டுப் பயணம் | உள்ளூர் செலவினங்கள் | மொத்தம் | தேறிய மொத்த மிகுதி |
| 1973 .. | 709 | 46,490 | 6,786 | 874 | 51 | 54,202 | 19,143 | 3,037 | 451 | 22,630 | 31,572 |
| 1974 .. | 581 | 62,815 | 23,269 | 2,286 | 763 | 89,127 | 48,522 | 7,146 | 3,350 | 59,019 | 61,680 |
| 1975 .. | 588 | 55,692 | 54,738 | 5,111 | 1,085 | 116,630 | 81,424 | 9,322 | 2,382 | 93,128 | 85,182 |
| 1976 .. | 611 | 81,670 | 65,821 | 10,396 | 2,597 | 160,495 | 117,020 | 13,519 | 10,914 | 141,453 | 104,224 |
| 1976 டிசம்பர் இறுதி மொத்தம் | 2,489 | 246,667 | 150,614 | 18,667 | 4,496 | 420,454 | 266,109 | 33,024 | 17,097 | 316,230 | 104,224 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி — ஜூலை 1977

(1) விவசாய, கைத்தொழில் மீன்பிடிப் பொருள் உற்பத்திகளின் எற்றுமதியை உள்ளடக்கியது.

(2) கலாசார நடவடிக்கைகள், சேவைகள், மீள் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்கியது.

(3) 1973ம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள் 11.7.72க்கும் 31.12.73க்குமிடையேயான கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கிறது.

குறிப்பு: மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம், 1972 ஜூலை 11 ம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. இதன் மூலம் இரத்தினக் கல் ஏற்றுமதி வருமானத்தின் 25 %ஐ இக் கணக்கிற் சேர்த்துக் கொள்ளலாம். 1974 நவம்பர் 7 ம் திகதி முதல் இக் கணக்கு பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது:

இரத்தினக் கல் ஏற்றுமதி மூலமான வருமானத்தில் 20 %; தேயிலை, ஷீட் றப்பர், தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல், கொப்பரு, தும்பு முதலியன தவிர்ந்த ஏனைய வர்த்தக ஏற்றுமதி வருமானத்தில் 5 %; உல்லாசப் பயணத்துறை வருமானத்தில் 5%; சித்திரங்கள் சிற்பங்கள், முதலிய கலைப் பொருட்களின் ஏற்றுமதிகள், உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்தல் என்பனவற்றின் மூலமான வருமானத்தில் 20%; தனியாரது பணிகள், ஆலோசனைச் சேவைகள் மூலமான வருமானத்தில் 20 %; மேற்படிச் சேவைகளை வழங்கும் கம்பெனிகளுக்கு 5%; 25.11.1974 முதல் (1) ஆபரணங்களிற் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்களின் கப்பற்றளம் வரையிலான பெறுமதியில் 20%; (2) ஆபரணங்களின் செய்திறனுக்கான பெறுமதியில் 20%.

ஏற்றுமதியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

## இரத்தினக் கற் கூட்டுத்தாபனமும் அதன் தாக்கமும்

1971 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச இரத்தினக் கற் கூட்டுத் தாபனம், அவ்வாண்டு நவம்பர் 1 ம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது; இத் திகதி முதல், இரத்தினக் கற்களை அகழ்தற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பணியையும், அகழ்வு வேலைகட்கென முடிக்குரிய காணிகளைக் குத்தகைக்கு விடும் வேலையையும் அது பொறுப் பேற்றது; கூட்டுத்தாபனத்தின் கிளை அலுவலகமொன்று உடனடியாக இரத்தினபுரியில் நிறுவப்பட்டது. இச் சட்டத்தின் கீழ், முடிக்குரிய காணிகளிற் பெறப்படும் இரத்தினக் கற்களைக் கொள்வனவு செய்தல், கற்களை ஏற்றுமதி செய்தல் என்பனவற்றுக்கான ஏகபோக உரிமை இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்துக்கே வழங்கப்பட்டதாயினும், இப் பணிகளை கூட்டுத்தாபனம் உடனடியாக மேற்கொள்ளவில்லை. அதன் முக்கிய பணிகளான கொள்வனவு, ஏற்றுமதி என்பன 1972 ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன.

கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பது தொடர்பான 1970 - 71 ம் வருட வரவு செலவுத் திட்ட உரையில் நிதியமைச்சர் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''வறிய மனிதனுக்கு இரத்தினக் கல் அகழ்வு வேலைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை இக் கூட்டுத்தாபனம் வழங்கும்; இதன் மூலம், மேலும் பலரது வாழ்க்கை வளம் பெற வழி கிட்டும் அதே வேளை, அது நாட்டின் செல்வத்தை அதிகரிக்கவும் உதவும்; அத்துடன் பட்டம் வெட்டல், ஒப்பமிடல் முதலிய துறைகளில், நவீன பயிற்சிகளையும் இது வழங்கும். இதன் மூலம், தற்போதுள்ளது போலன்றி, சமூகத்தின் பெரும் பகுதியினர் இந்நுணுக்கங்களை அறிந்து கொள்ள வழி வகுக்கப்படும். மேலும், தம் இரத்தினக் கற்களைப் பரீட்சித்துக் கொள்ள விரும்புவோர்க்கும், அவற்றின் பெறுமதியை நிர்ணயம் செய்து கொள்ள விழைவோருக்கும் சகல வசதிகளும் வழங்கப்படும். வர்த்தகர்களின் மதிப்பீட்டையும் அவர்கள் நிர்ணயிக்கும் விலையையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய பரிதாப நிலையிலிருக்கும் சாதாரண தர கல் அகழ்வோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்''

கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் பற்றித் தமது அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் (1971-72ம் ஆண்டில்) நிதியமைச்சர் பின்வருமாறு தெரிவித்தார். ''கள்ளக் கடத்தல் மூலமாக நாடு வருடா வருடம் இழக்கும் 30 கோடி ரூபா அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. கூட்டுத்தாபனம் கற்களை வாங்கி, ஏற்றுமதி செய்யும் அதே வேளை, அதன் அங்கீகாரத்தையும், அனுமதியையும் பெற்றுள்ள தனியாருக்கும் அவற்றை ஏற்றுமதி செய்ய அனுமதியளிக்கும்.''

எனினும், அதன் ஆறு வருட கால ஆயுளில், அதன் எல்லா இலக்குகளையும் எய்த கூட்டுத் தாபனம் தவறிவிட்டது.

தனியார் துறை இரத்தினக்கல் ஏற்றுமதிகள் கூட்டுத்தாபனத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது கட்டாயப் படுத்தப்பட்டதானது ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க நியாய பூர்வமாக உதவிற்றெனக் கூற முடியாதென இரத்தினக் கல் வர்த்தகர்கள் பலர் வாதிட்டுள்ளனர்; ஏற்றுமதி செய்யப்படும் கற்கள் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டதொன்றே இதனால் ஏற்பட்ட நன்மை என அவர்கள் கருதுகின்றனர். மேலும் தனியார் துறையுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, கூட்டுத்தாபனம் ஏற்றுமதி வர்த்தகத்தில் புரிந்த சாதனைகள் மிக அற்பமானவையே. எனினும், வர்த்தகர்கள், கல் அகழ்வோர், பட்டம் வெட்டுவோர், ஒப்பமிடுவோர் ஆகியோருக்கு நன்மை கிட்டும் வகையில் விலைகள் உயர்த்துவதன் மூலமோ, இரத்தினக் கற்களின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் பெருமளவிலான செலாவணி வருவாயை உரிய அலுவலக வழிகளிற் செலுத்துவதன் மூலமோ, முழுக் கைத்தொழிலும் இக் கூட்டுத்தாபனம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பது பற்றிச் சிறிது சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.

கற்களை அகழ்வோரிடமிருந்து, வர்த்தகர்களிடம் அவற்றை எடுத்துச்சென்று விற்பனை செய்து வந்த தரகர்கள், இக்கூட்டுத்தாபனத்தின் தோற்றத்துடன் ஒரு ''மாற்று வழியை'' ப் பெறலாயினர். வர்த்தகர்களின் விலைகள் போதியதாய் இல்லாத பட்சத்தில் கூட்டுத்தாபனத்தை நாடிச் செல்லும் வாய்ப்பு இவர்களுக்குண்டு.

இவ்வகையில் இத்தரகர்கள் அல்லது நடுவர்கள், தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள உதவிற்று. கூட்டுத்தாபனத்தின் விலை மதிப்பிடுவோர் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும், நியாயமான விலைகளைக் கணித்தமை இதனால் ஏற்பட்ட இன்னொரு நன்மையாகும். இதன் விளைவாக தரகர்கள் மட்டுமன்றி, இரத்தினபுரி, எலஹரா பிரதேசங்களிலிருந்த கல் அகழ்வோரும், கொழும்பு, காலி, வேர்விலை போன்ற இடங்களிலிருந்த பட்டம் வெட்டுவோரும் ஒப்பமிடுவோரும் கற்களின் உண்மையான பெறுமதிகளைத் தெரிந்து கொள்ளலாயினர். முன்னர் குறித்த சில வர்த்தகர்களும், தரகர்களும் இவ்வுண்மைப் பெறுமதியையும் அதன் மூலம் அவற்றின் விலையையும் தெரிந்து வைத்திருந்து அதன் மூலம் தாம் நன்மையடைந்தனர். எனவே, இவ்வகையில் அகழ்வோர், பட்டம் வெட்டுவோர் முதலிய சகல துறையினருக்கும் இது பரந்தளவில் வருமானத்தைப் பெற்றுத் தந்ததென்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அகழ்வுத் தொழிலீடுபட்டுள்ளோரது வினைத் திறன், உழைப்பு என்பனவற்றுக்குரிய நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன என்று கூறிவிட முடியாது. வர்த்தகர்கள் இன்னும் இரகசியமாகவும், சிறு கூட்டங்களாகவும் இயங்கி விலைகளைக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதில் ஓரளவு வெற்றி கண்டு வருகின்றனர்.

தனிப்பட்ட வர்த்தகர்கள் தங்கள் விலைகளை நிர்ணயிக்கையில் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு (சீ.ஆர்.ஏ.) மூலமான வருமானத்தையும் கணக்கிலெடுத்தே நிர்ணயிப்பதால் கூட்டுத்தாபனம் இவர்களுடன் போட்டியிட்டுக் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது கடினமாகவுள்ளது. ஏனெனில், கூட்டுத்தாபனம் வெகுவாகத் தனது மாற்றத் தக்க ரூபாய்க் கணக்கை வெளிக்காட்ட முடியாது. தவிர, கூட்டுத்தாபனத்துக்குக் கற்களை விற்பதன் மூலம் பெறும் வருமானம், அரசாங்கப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டு, ஈற்றில் அவர்கள்

வருமானவரி செலுத்த வேண்டி வருமென அஞ்சுவதால், அவர்கள் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு இவற்றை விற்க விரும்புகின்றனர். அத்துடன், தனிப்பட்ட வர்த்தகர்களோ அவர்களது முகவர்களோ (ஏஜண்டுகள்) அகழ்வுப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, நேரடியாக அகழ்வோரைச் சந்தித்து, அவர்கள் கையிற் பணத்தை ஒப்படைத்துக் கொள்வனவு செய்வது சர்வ சாதாரண காட்சியாகும். குறித்த நேரங்களில் மாத்திரம் திறந்து வைத்து வர்த்தகத்திலீடுபடும் கூட்டுத்தாபனத்தின் கிளைகளுக்கு, கட்டுப்பாடுகள் எவையுமின்றி வியாபாரத்திலீடுபடும் தனியார் வர்த்தகர்களுடன் போட்டியிடுதல் கடினமே.

கல் அகழ்வுக் காலங்களில் இரத்தினபுரி, எலஹரப் பகுதிகளில் வாரத்துக்கு சுமார் நான்கு அல்லது ஐந்து முறை இரத்தினக் கல் ஏலங்கள் நடைபெறும். தனியார் வர்த்தகர்களுடன், கூட்டுத்தாபனமும், ஏலத்திற் கலந்து கொண்டாலும், கூடிய விலைகளை வழங்கும் தனியார் வர்த்தகர்களையே மக்கள் விரும்புகின்றனர். கற்கள் கூட்டுத்தாபனத்துக்குக் கொண்டுவர முன்னரே அவற்றைத் தனியார் கொள்வனவு செய்துவிட்டதற்கான சந்தர்ப்பங்கள் பல காணப்பட்டுள்ளன. இவ்வகையில் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு நிலையங்கள் திறம்படச் செயற்படவில்லை. உதாரணமாக, கூட்டுத்தாபனத்தின் மாத்தளைக் கொள்வனவு நிலையம் தற்காலிகமாக மூடப்பட வேண்டியதாயிற்று; தனியார் வர்த்தகர்கள் பெருந்தொகையில் நேரடியாக எலஹரைக்குச் சென்று கற்களை வாங்கி விடுகின்றனர் எனக் கூறப்படுவதே இதற்குக் காரணம்; மிகச் சில கற்களே மாத்தளைக்குக் கொண்டு வரப்பட்டன. இரத்தினபுரி, எலஹர ஆகிய இடங்களிலுள்ள கொள்வனவு நிலையங்கள் பயனுள்ளவை எனக் கூறப்பட்டாலும், பெல்மதுளை, ரக்வானை, கஹவத்தை ஆகிய இடங்களுக்கு கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு அதிகாரிகள் சென்று கற்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

*1971* ன் இரத்தினக் கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் *16* ம் பிரிவின் கீழ், இரத்தினக் கற்களின் முழு ஏற்றுமதி உரிமை, தனியே கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்படி தனியார் பெரும் கற்களை ஏற்றுமதி செய்ய விரும்பின், அவர்கள் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவே அதனைச் செய்ய வேண்டும். எனவே, கூட்டுத்தாபனம் இயங்கத் தொடங்கிய பின்னர், தனியார் துறையின் இரத்தினக் கற்கள் கூட, கூட்டுத்தாபனத்தினால் விலை மதிப்பீடு செய்யப்பட்டு அதனூடாகவே ஏற்றுமதியாகின்றன.

கூட்டுத்தாபனம் தனது இவ்விலை மதிப்பீட்டு வேலைகளுக்கென கூலியாக மொத்த ஏற்றுமதியில் அரைச்சதவீதத் தொகையை அறவிடுகின்றது. இவ்வகையில் கூட்டுத்தாபனம் ஒரு முக்கிய பணியை ஆற்றுகிறது; இதன் மூலம், கூட்டுத்தாபனத்தின் விலை மதிப்பீட்டாளர்கள் சுங்கப்பகுதி அதிகாரிகளுடன் இணைந்து, கூட்டுத்தாபனத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் கற்களின் பெறுமதி தரம் என்பனவற்றில் ஒரு தரக் கட்டுப்பாட்டை வைத்திருக்க உதவியுள்ளனர். இக்கட்டுப்பாடுகள் இருந்தபோதும் கூடச் சிலர் உண்மையான கற்களுடன் செயற்கைக் கற்களைக் கலந்து ஏற்றுமதி செய்ய முயன்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. மாற்றத்தக்க ரூபா மூலம் கிட்டும் பெரு நன்மைகளே இத்தகைய முயற்சிகளிற் பலரை ஈடுபடத் தூண்டுகின்றன. இவ்விஷயத்தைப் பொறுத்தளவில் கூட்டுத்தாபனச் சட்ட விதிகளில் ஒரு பிழை இருப்பது போற் தோன்றுகிறது. இரத்தினக் கற்களுக்கான மதிப்பீட்டாளர், இது பற்றி ஆணைக் குழுவிடம் குறிப்பிடுகையில், ஏற்றுமதி செய்யப்படும் கற்களை தாம் பரிசீலனை செய்யும் தினங்களில் ஏற்றுமதிக்கான பார்சல்களுள் சராசரி நான்கு செயற்கைக் கற்களைக் கண்டு பிடித்ததாகத் தெரிவித்தார். தற்போது இக் கற்கள் கூட்டுத்தாபனத்தால் பறிமுதல் செய்யப்படுகின்றன; முன்னர், அவற்றை ஏற்றுமதி செய்தற்காக வேண்டி அவற்றின் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டன; செயற்கைக் கற்களின் விற்பனை மூலம், இலங்கையின் இரத்தினக் கற்கள் பற்றி வெளிநாடுகளில் நிலவும் உயர்ந்த அபிப்பிராயம் பெரிதும் பாதிக்கப்படுமாதலால் அவற்றை விற்றல், விற்க முயற்சித்தல், விற்பதற்காக காட்சிக்கு வைத்தல், அவற்றை வைத்திருத்தல் முதலியனவற்றை முற்றாகத் தடை செய்யவென விசேட சட்ட விதிகள் இயற்றப்பட வேண்டுமென ஆணைக் குழு கருதியது. அத்துடன், குறிப்பாக, இத்தகைய கற்களை ஏற்றுமதி செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாரதூரமான குற்றமாகக் கருதப்பட்டு தண்டனையும் வழங்கப்பட வேண்டுமெனவும் அது அபிப்பிராயப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் இவ்விலை மதிப்பீடு, பெறுமதி நிர்ணய நடவடிக்கைகளின் இன்னொரு பாராட்டத்தக்க விளைவு யாதெனில் வெளிநாட்டவர்கள், தாங்கள் கொள்வனவு செய்யும் கற்களுக்கான உண்மைப் பெறுமதியை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையாகும். இதன்மூலம் பெறுமதியானதும், தரமானதுமான கற்களையே தாங்கள் வாங்கியுள்ளனர் என்ற அரசாங்க உத்தரவாதத்துடன் அவர்கள் செல்லலாம்.

தனியார் துறை வர்த்தகர்களுக்கு வெளிநாட்டுக் கொள்வனவாளர்களைத் (சந்தைகளை) தேடிக் கொடுப்பதிலும் கூட்டுத்தாபனம் உதவியுள்ளது. உதாரணமாக, *1974* ன் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு முறை மாற்றியமைக்கப்பட்ட பின்னர், புதிய தனியார் துறை வர்த்தகர்களுக்கு இங்ஙனம் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களைத் தேடிக் கொடுப்பதன் மூலமும், ஏற்றுமதி நடவடிக்கைகளில் கூட்டுத்தாபனம் உதவிற்று.

கற்களைப் பட்டம் வெட்டல், ஒப்பமிடல் துறைகளில் திறமையுடையோருக்கு மேலதிக பயிற்சி வழங்கவும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றை நவீனமயமாக்கும் முயற்சியில் ஓரங்கமாக, நவீன பட்டம் வெட்டும் நிலையமொன்று நிறுவப்பட்டது; ஐ.நா. உதவியுடன் இன்னொரு நிலையம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் எஹலிய கொடையில் நிறுவப்படவுள்ளது. இவற்றுடன், ஆபரண உற்பத்திப் பிரிவொன்றையும் கூட்டுத்தாபனம் ஸ்தாபித்துள்ளது; இப்பிரிவு பேரளவிலான உற்பத்திகளில் ஈடுபடும் அதே வேளை, வாங்குவோர் விரும்பும் டிசைன்களில் விசேஷ ஆபரணங்களையும் தயார் செய்து வழங்குகிறது.

**சட்ட விரோதமாகச் சுரங்கமகழ்தல்**

முடிக்குரிய காணிகளில் இரத்தினக் கற்களை அகழும் பொறுப்பும், உரிமையும், அதே போன்று கற்களை அகழ்வதற்கென அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளைக் குத்தகை அடிப்படையில் வழங்கும் முழு அதிகாரமும் கூட்டுத்தாபனத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது; எனினும் இது ஒழுங்காகப் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. எலஹர போன்ற இடங்களில் சட்ட விரோதமாக கற்கள் அகழும் வேலைகள் பாரிய அளவில் தடையின்றி நடைபெறுகின்றன. அத்துடன் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட குழுக்கள் இந்நடவடிக்கையிலீடுபட்டு வந்தனவெனவும் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக காடுகள் மிக்குள்ள அப்பகுதிகளில் ஒழுங்கான கட்டுப்பாடுகளை தொடர்ந்து வைத்திருத்தல் கூட்டுத்தாபனத்தால் முடியாத காரியமே. எனவே, சட்ட விரோதமாக கற்களை அகழ்வோர் தங்கள் கைவரிசையைக் காட்ட முன்னர், கூட்டுத்தாபனம் இக் காணிகளை ஏலத்துக்கு விடுவதே உடனடியாக மேற்கொள்ளக் கூடிய தீர்வென்பதைப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்; இங்ஙனம், சட்ட விரோதமாகக் கற்களை அகழ்வோர் மேற்கொள்ளும் நாசகார முறைகள் நாட்டுக்கு ஈடுசெய்யாத முடியாத நட்டத்தைக் கொண்டுவருமென்பதும் அடிக்கடி சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. கூட்டுத்தாபனச் சட்ட விதிகள் அமுலுக்கு வந்தவுடன், இவ் ஏலத்துக்கு விடும் நடவடிக்கைகள் முழுவதையும், அரசாங்க அதிபர்களிடமிருந்து கூட்டுத்தாபனம் கையேற்றது. எனினும், இப்பாரிய பணியைத் தனியே கூட்டுத்தாபனத்தாற் செய்யமுடியாதெனவும், எனவே பொலிஸ், மாவட்ட நிர்வாகம், என்பனவற்றினதும், காணி, விவசாயம், நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் ஆகிய அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்களினதும் உதவியை இவ்வகையிற் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ளல் நன்றெனவும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பாரிய கட்டிடத் திட்டங்களும் நீர்பாசனத் திட்டங்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் சிலவற்றிலும் இரத்தினக் கற்கள் காணப்படலாமெனவும், எனவே, இவ்வபிவிருத்திட்டங்கள் மேற்கொள்ள முன்னர், இக் காணிகளை அகழ்வு நடவடிக்கைகளுக்கென ஏலத்தில் விடாத பட்சத்தில், இங்கு காணப்படக் கூடிய பெறுமதிமிக்க இரத்தினக் கல் வளத்தை இலங்கை என்றுமே பெற்றுக்கொள்ள முடியாது போய் விடுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினக் கல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

| வருடம் | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1961 | 1565 |
| 1973 | 3547 |
| 1974 | 3027 |
| 1975 | 2977 |
| 1976 | 3637 |

கடந்த ஐந்து வருட காலப் பகுதியுள் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 130 சதவீதம் அதிகரித்துள்ள போதிலும், நாட்டில் சட்ட விரோத அகழ்வு வேலைகள் குறைந்ததாகத் தெரியவில்லை. இரத்தினபுரி, எஹலியகொடைப் பகுதிகளிலுள்ள காணிகளுக்கே பெருமளவு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. எலஹரப் பகுதியில் ஒழுங்கான ஓர் அடிப்படையில் காணிகள் ஏலத்துக்கு விடப்படும் பட்சத்தில் (இங்கு அனுமதிச் சீட்டுக்கள் பெறுவோர் தொகை அதிகரிக்கிறது), இங்கு சட்டவிரோத அகழ்வுகள் நன்கு குறைக்கப்படலாம்.

முடிக்குரிய காணிகளில் கண்டுபிடிக்கப்படும் கற்கள் பற்றி அரசாங்கத்துக்கு அறிவிப்பது பற்றிய சட்டவிதிகள் பின்பற்றப்படுவதிலும் பலவீனம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. அகழ்வு மேற் கொள்ளப்படும் காணிகளுட் பெரும்பாலானவை முடிக்குரியவை என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் 13 ம் இலக்கச் சட்டத்தின், 14 ம் பிரிவின் கீழ் முடிக்குரிய காணிகளில் இரத்தினக் கற்களை அகழ்ந்தெடுப்பவர்கள், அவை அனைத்தையும் கூட்டுத்தாபனத்திற்கே விநியோகிக்க வேண்டும். கூட்டுத்தாபனம் அவற்றை ஒன்றிற் கொள்வனவு செய்யும் அல்லது வேறெவரும் அவற்றை வாங்க அனுமதி அளிக்கும். கூட்டுத்தாபனத்தின் அத்தாட்சிப் பத்திரத்திரத்தினுடனேயே இத்தகைய கற்கள் விற்கப்படும். ஆனால், இங்ஙனம், முடிக்குரிய நிலங்களிற் கண்டெடுக்கப்படும் கற்கள் பற்றி மிக அரிதாகவே அறிவிக்கப்படுகிறது. மிகப் பெறுமதியான கற்கள் கண்டுபிடிக்கப் படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தான் இங்ஙனம் அறிவிக்கப்படுவதுண்டு.

இங்ஙனம் கண்டுபிடிக்கப் படும் கற்கள் பற்றி அலுவலக ரீதியற்ற முறையில், கூட்டுத்தாபன அதிகாரிகளது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பங்கள் பல உள்ளன. இத்தகைய கற்களே வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதாக, அதிகாரிகள் நம்புகின்றனர். இவ்வடிப்படையிலேயே தற்போது கடத்தப் படும் இரத்தினக் கற்கள் 30 முதல் 40 சதவீதம் வரையாக இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இரத்தினக் கற்கள் காணப்படக்கூடிய இடங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும், ஒழுங்கு முறையான ஒரு திட்டம் பின்பற்றப்படுவதாயில்லை. இத்தகைய புதிய இடங்கள், விஞ்ஞான ரீதியான முறைகளிலன்றி, சட்டவிரோதமாக அகழ்வுவேலைகளில் ஈடுபடுவோர் கள்ளத்தனமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தே கண்டுபிடிக்கப்படுவது தெரிய வந்துள்ளது. இத்தகைய புதிய இடங்களை விஞ்ஞான ரீதியிற் கண்டுபிடிக்கக்கூடிய ஓர் ஆராய்ச்சி அதிகாரியையும் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது; அனுமதிப் பத்திரம் பெற்றோரினுல் முறையாக இங்கு அகழ்வு நடத்த வேண்டுமென்பதே இதன் நோக்கம்; நாட்டின் சூழலுக்கேற்ப இலகுவான உபகரணங்களை இவ் விஷயத்திற் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

1950 ஐத் தொடர்ந்து இரத்தினக்கற் தொழில் வளர்ச்சி பெற்றது, உண்மையென்றாலும், ஏற்றுமதிகள் படிப்படியாக சட்ட விரோத வழிகளிலேயே செல்லத் தொடங்கின. அகழ்வு நடவடிக்கை,யிலீடுபடுவோரும், வெட்டி ஒப்பமிடுவோரும் தாங்கள் படும் கஷ்டத்துக்கு மிகச் சிறு பலனையே பெறலாயினர். கல் வெட்டுதல், வர்த்தகம் போன்றவற்றில் ஓரிரு குடும்பங்களே ஆதிக்கம் செலுத்தின. எனவே, தரகர்களே வர்த்தகத்தின் முழுப் பலனையும் பூரணமாக அனுபவித்தனர். 1960 ஐத் தொடர்ந்த காலப்பகுதியில் நிலைமைகள் கள்ளக் கடத்தற் சந்தைக்குச் சார்பாகவே காணப்பட்டதால், இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கற்களின் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப் பெறுமதி விவரங்களை, இந் நாட்டு ஏற்றுமதி விவரப்பட்டியலிலிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை. 30 கோடி ரூபா வரையான கற்கள் இங்ஙனம் கடத்தப்பட்டதாகச் சில மதிப்பீடுகள் காட்டுகின்றன. 1971 ம் ஆண்டு அளவில் 10 கோடி ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் இங்கிருந்து கடத்தப்பட்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் நம்பின. சுங்கப் பகுதி ஏற்றுமதிப் புள்ளிவிவரங்கள் 1971 வரை வருடாந்த ஏற்றுமதிகள் சுமார் 30 இலட்சம் ரூபாவாக இருந்தனவெனக் காட்டுகின்றன. இத்தகைய சூழ் நிலையிலேயே இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது.

இரத்தினக் கற் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் பற்றி 1976 ல் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட காத்திரமான கோரிக்கைகள் பலவற்றைத் தொடர்ந்து இத் தொழில் பற்றிய சில விஷயங்களை ஆராயவென விசாரணைக் கமிஷனொன்றை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ் விஷயங்களுள் ஒன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அல்லது ஊழியர்கள் எவராவது அவர்கள் வகிக்கும் பதவிகட்கு முரண்பட்ட வகையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருடன் கூட்டுத்தாபன ஊழியர்கள் எவராவது இணைந்து செயற்பட்டுள்ளனரா என்பவற்றை அறிந்து கொள்வதாகும். கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களாக விருக்கும் அல்லது ஊழியர்களாக விருந்த 30 க்கும் அதிகமானோர் இரத்தினக்கல் தொழிலுடன் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதனை நிரூபிக்கப் போதிய சாட்சியங்களிலிருந்தன. எனினும், இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் போன்ற ஒரு வர்த்தக நிறுவனத்தை இயக்க, இத் தொழிலில் ஈடுபாடு கொண்டோரிடமிருந்து தேவையான ஆட்களைத் திரட்டுவது தவிர்க்க முடியாததொன்றென்றும், இவ் வகையில் இத் தொழிலில் சம்பந்தமில்லாதோரைக் காணுதல் அரிதென்றும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. இதே வேளை கூட்டுத்தாபனத்தின் முக்கிய பதவிகளுக்கு இரத்தினக்கற் தொழிலுடன் நெருங்கிய தொடர்புள்ளோரை நியமனம் செய்தல் பொருத்தமற்ற செயல் எனவும், இது இயல்பாக ''நலன்களுக்கிடையேயான முரண்பாடுகளை'' ஏற்படுத்த வல்லது என்றும் எடுத்துக் காட்டப்பட்டது. மேலும், இவ்வாறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை நிரூபணம் செய்யும் சாட்சியங்கள் வழங்கப்பட்டன.

கூட்டுத்தாபனம், கற்களை மதிப்பீடு செய்வதிலும், கொள்வனவு செய்வதிலும் கையாண்ட நடைமுறைகள் பெரும் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டன. செய்திப் பத்திரிகைகளும் இதற்கு முக்கியத்துவம் வழங்கின. குறிப்பாகக் கூட்டுத்தாபனத்தின் சில விலை மதிப்பீட்டாளர்களின் சிபார்சின் பேரில் கொள்வனவு செய்யப்பட்ட இரத்தினக் கற்கள் மூலம் ஏற்பட்ட நட்டம் பற்றி, ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ மதிப்பீட்டுக் குழு வழங்கிய முடிவுகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இவ்விரு மதிப்பீட்டாளர் குழுக்களின்படி, (மதிப்பீட்டாளர்களது பெயர்களைத் தவிர்த்து), கொள்வனவு செய்யப்பட்ட கற்களின் பெறுமதியையும், ஏற்பட்ட நட்டத்தையும் அட்டவணை காட்டுகிறது:

**சமூக சிக்கல்கள்**

1970 ல் இரத்தினக் கற் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் ஏற்றுமதி மூலம் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை ஈட்டல், இவ்வருமானத்திற் பெரும் பகுதியை உத்தியோகபூர்வ வழிகளிற் பெறல் என்ற எதிர்பார்க்கப்பட்ட பலாபலன்களைத் தந்தன என்பது உண்மையே. தனியார் துறை நடவடிக்கைகள், 1970 ஐத் தொடர்ந்து நாட்டில் படிப்படியாக குறைந்து வந்த போதும் இரத்தினக்கற் கைத்தொழிலுக்கும், உல்லாசப் பயணத் துறைக்கும் விசேட இடங்கள் வழங்கப்பட்டன. ஏனைய முக்கிய தனியார்துறை நடவடிக்கைகளான பெருந்தோட்டத்துறை சரக்குகளின் ஏற்றுமதி, வர்த்தகம், கைத்தொழில் போன்றனவற்றுககு மிகவும் குறைந்த ஓர் இடமே வழங்கப்பட்டது. பல்வகை வரிகள், கட்டாயச் சேமிப்பு போன்ற பல கட்டுப்பாடுகள் அவற்றின் மீது விதிக்கப்பட்டன. பெருந்தோட்டத்துறை போன்ற நடவடிக்கைகள், பழைய காலனித்துவ முதலாளித்துவத்தினுள் அடங்கும் அதே வேளை, உல்லாசப் பயணத்துறை போன்றன சுதந்திரத்தின்பின் தோன்றிய முதலாளித்துவத்தின் பால் — அல்லது ஐ.நா. தீர்மானங்கள் கூறுவது போன்று நவ காலனித்துவத்தின் பாற்படுகின்றன. என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. எனவே, நாம் பழைய காலனித்துவ அம்சங்கள் மீதான பிடியைத் தளர்த்தி, புதிய காலனித்து அம்சங்கள் மீதான பிடியை இறுக்கியுள்ளோம்.

இத் தொழிலில் இவ் வூக்குவிப்புக்கள் செயற்படுத்தப்பட்ட விதமானது, அதில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள் சிலருக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் பேரளவு செல்வத்தைச் சேர்த்து, ஏனைய சராசரி மக்கட் பிரிவினருடன் ஒப்பிடுகையில் பொருளாதார ரீதியில் விசேட சலுகைகள் பெற்ற ஒரு வகுப்பினராக அவர்களைத் திகழ வழி செய்தது என்பது இவற்றிலிருந்து தெரியவருகின்றது.

**இலங்கையின் மதிப்பீட்டாளர் மேற்கொண்ட மதிப்பீடுகள் பற்றி பிரதான கணக்காளரின் ஆய்வு**

| மதிப்பீட்டாளர் | கொள்வனவுகள் ரூபா | அமைச்சின் குழுவினரின் கணிப்பின்படி நட்டம் ரூபா |
|---|---|---|
| அ .. .. .. .. | 20,261,000 | 6,464,428 |
| ஆ .. .. .. .. | 11,944,000 | 4,329,260 |
| இ .. .. .. .. | 13,718,200 | 4,248,916 |
| ஈ .. .. .. .. | 17,449,200 | 4,145,700 |
| உ .. .. .. .. | 10,697,700 | 2,982,295 |
| ஊ .. .. .. .. | 41,602,400 | 1,497,695 |
| எ .. .. .. .. | 241,917,900 | 1,489,266 |
| ஏ .. .. .. .. | 6,331,900 | 626,925 |
| ஒ .. .. .. .. | 1,726,500 | 173,983 |
| ஓ .. .. .. .. | 58,802,800 | 19,061,000 |
| ஔ .. .. .. .. | 12,932,000 | 5,838,700 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குப் (C.R.A.) பற்றிய ஆய்வுகள், நாட்டில் சுமார் 2,000 பேரே இக் கணக்கை வைத்திருந்தனர் என்பதைக் காட்டின. நாட்டின் மொத்த ஏற்றுமதியாளர்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது ஓர் சிறிய எண்ணிக்கையேயாகும். இவர்களுள்ளும் மிகச் சிலரே இக் கணக்கிற் பெருந் தொகைப் பணத்தை வைத்திருக்க முடிந்தது எனவே, ஒரு சிறு குழுவினரின் கையிலேயே இம் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கின் முழு இயக்கமும் தங்கியிருந்ததெனலாம். வருமானப் பகிர்வு அடிப்படையில் நோக்குகையில், இக்குழுவின் வருமானப் பங்குகள் பேரளவில் உயர இது காரணமாயிற்று. இவர்களிடம், ஏற்கனவே பெருந்தொகை முதலீடு காணப்பட்டதுடன், மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கின் (C.R.A.) மூலம் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை கூடிய விலைகளில் உள்ளூரில் விற்று மேலும் பெருமளவு வருமானத்தை இவர்கள் பெற்றுக் கொள்ளலாயினர்.

தவிர, இங்ஙனம் ஒரு சிறு குழுவின் கையிற் குவிந்த பெருந் தொகைப் பணம், போதுமான அளவில், முதலீட்டு சேமிப்புத் துறைகளைச் சென்றடையவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது. எனவே, ஒரு வகையில் பணவீக்கத்துக்கும் இது காலாயிற்று.

1971 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சர், இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் அவசியத்தை வலியுறுத்தியபோது அரசாங்கம் அமுல் செய்யவுள்ள ஐந்து வருடத் திட்டத்தின் முக்கிய ஓர் இலக்கு, சமூக அமைதியின்மையைக் குறைக்கும் வண்ணம் விரயமான பொருள் நுகர்வை ஒழிப்பதாகும் எனக் குறிப்பிட்டார். ஆனால், இரத்தினக் கற் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களின் விளைவுகள் இவ்விலக்குகளுக்கு எதிர் மாறாகச் செயற்பட்டுள்ளன போலத் தோன்றுகிறன. நுகர் பொருட்களின் விரயத்தை மாத்திரமின்றி அவற்றை முனைப்பாகவும் அவை ஏற்படுத்தி சமூக அமைதியின்மையை உச்சமுறச் செய்தன.

முக்கிய இரத்தினக்கற் தொழில் மையமாக விளங்கும், இரத்தினபுரியில் காணப்படும் இம் ''முனைப்பான நுகர்ச்சி'', அத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் சின்னமாக வளர்ந்துள்ளது.

அட்டவணை 3

## இலங்கையின் இரத்தினக்கல் ஏற்றுமதிச் சந்தைகள் 1973 — 77

(பத்து லட்சம் ரூபா)

| | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 (8 மாதம்) |
|---|---|---|---|---|---|
| பெல்ஜியம் .. .. | | | | | 2.1 |
| கனடா .. .. .. | | | | 1.2 | |
| டுபாய் .. .. .. | | | | 3.5 | |
| பிரான்ஸ் .. .. .. | 3.6 | 3.2 | 8.3 | 5.2 | 2.3 |
| மேற்கு ஜெர்மனி .. .. | 3.7 | 3.4 | 3.0 | 7.3 | 4.1 |
| ஹொங்கொங் .. .. | 79.5 | 33.1 | 46.8 | 101.9 | 90.2 |
| ஜப்பான் .. .. .. | 35.9 | 15.7 | 77.7 | 93.2 | 78.2 |
| குவைத் .. .. .. | | | | 4.3 | |
| லெபனன் .. .. .. | | | 3.5 | | |
| நெதர்லாந்து .. .. | | | | 3.4 | 5.0 |
| சிங்கப்பூர் .. .. .. | 3.4 | 3.5 | 4.1 | 7.2 | 4.4 |
| சுவீடன் .. .. .. | | | | 2.1 | 1.0 |
| சுவிற்சர்லாந்து .. .. | 15.4 | 22.1 | 28.0 | 22.0 | 10.2 |
| பிரிட்டன் .. .. .. | 4.2 | 3.9 | 2.1 | 2.4 | 2.0 |
| ஐ. அமெரிக்கா .. .. | 2.5 | 6.1 | 4.2 | 5.9 | 5.1 |
| மொத்தம் .. | 140.8 | 108.7 | 180.2 | 261.4 | 206.3 |

மூலம்: இலங்கைச் சுங்கப் பகுதி.
இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

கொழும்பு நகரின் காணி விலைகளிலும், ஹோட்டல்களிலும் அவர்களது நுகர்ச்சிப் போக்கு நன்கு தென்படுகிறது. முனைப்பான செலவுகளின் அடையாளங்கள் கொழும்பிலும் அண்மைக்காலம் முதல் தெளிவாகத் தெரியத் தொடங்கியுள்ளது. வாழிடப் பகுதிகளில் காணி விலை முன்னர் பேர்ச் ஒன்று 5,000 ரூபாவாக விருந்த நகரின் வாழிடப் பகுதிகளின் காணி விலை, தற்போது அதன் இருமடங்கிலும் அதிகமாகியுள்ளது. இதற்கு மாறாக, இங்ஙனம் கிட்டிய நன்மைகள், வசதிகள் எவையும் உண்மையான உழைப்பாளிகளான இரத்தினக் கற்களை அகழ்வோரையோ அதனை வெட்டி ஒப்பமிடுவோரையோ சென்றடையவில்லை. இத்தன வந்த முதலாளிகளின் நிலைமைக்கு நேர் எதிர்மாறாகவே இத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் காணப்பட்டன.

இரத்தினக் கல் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவென அறிமுகம் செய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்கள் சில — குறிப்பாக இம் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குப் போன்றனவும், தற்போதைய சமூக சமத்துவமின்மையை உருவாக்கக் கால் கோலாயிருந்தன. இக் கணக்குகளை வைத்திருந்தோர் — முன்னர் கூறியது போன்று — வர்த்தகப் பொருட்கள், கைத்தொழில் மூலப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், நேரடிப் பாவனைப் பொருட்கள், கைத்தொழில் இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியனவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர். இக் கணக்கிலிருந்த தொகையில் 85 % க்கும் கூடிய தொகை இறக்குமதிகட்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விறக்குமதிகளின் கீழ் 1973 ன் மொத்த இறக்குமதிகளுள் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 19 % ஐப் பெற்றது. 1975 ல் இத் தொகை 23 % ஆகியது. இக் கணக்கின் மூலம் ஆடம்பரப் பொருட்களும் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. நேரடிப்பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்தற்கான அனுமதிப் பத்திரங்களின் கீழ், பல்வேறு ரக வானொலிப் பெட்டிகள், மின்சார இசைக் கருவிகள், கெசட் பிளேயர்கள், ஏனைய வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றன பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு, நுகர்ச்சிப் போக்கைப் பெருமளவு பாதித்தன. இத்தகைய நேரடிப் பாவனைப் பொருட்களின் இறக்குமதி, 1973 ன் மொத்த இறக்குமதியில் சுமார் 2 % ஆகவிருந்தது. அடுத்த இரு வருடங்களில் இவ்விறக்குமதிகள் துரிதமாக அதிகரித்தது. 1975 ல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுள் இவை 13.6 % ஆகக் காணப்பட்டன. இவ்விரு பொருட்களும் (மோட்டார் வாகனங்களும், நேரடிப்பாவனைப் பொருட்களும்) தேசிய அபிவிருத்திக்கு அர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ள வகையில் எங்ஙனமும் உதவ மாட்டா என்பது வெளிப்படையாகும். உண்மையில் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது போலன்றி கைத்தொழிலுக்கான இயந்திரங்கள், உபகரணங்கள் போன்ற முதற் பொருட்கள் மிகக் குறைந்தளவிலேயே இறக்குமதி செய்யப்பட்டன. 1973ம், 1974ம் ஆண்டுகளில் இத் தகைய பொருட்களின் இறக்குமதிகள், மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு மூலமான மொத்த இறக்குமதிகளில் ஒரு சதவீதமாகக்கூட இருக்கவில்லை. எனினும் 1975 ல் இவ்வியந்திரங்களினதும், உபகரணங்களினதும் இறக்குமதி, மொத்த C. R. A. இறக்குமதிகளில் 8 % வரை உயர்ந்து காணப்பட்டது. தொகுத்து நோக்குமிடத்து, மா.த.ரூ. கணக்குத் திட்டத்தின் கீழ் தனியார்துறை வர்த்தகர்களினால் சம்பாதிக்கப்பட்ட பெருந்தொகையான பணம், தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் எந்த வகையிலும் பயபடுத்தப்படவில்லையென்றே கூற வேண்டும்.

இரத்தினக்கல் கைத்தொழிலானது எம்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் பயனுள்ள முறையில் உந்துதல் அளிக்கக் கூடிய வாய்ப்புக்கள இருக்கின்றன. இரத்தினக்கல் வளத்தின் உச்சப்பயன்பாட்டை நாடு பெற வேண்டுமாயின் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.

1. சட்ட விரோதமாக அகழ்தல், கள்ளக் கடத்தல் போன்றவை குறித்து இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்ட விதிகளைத் தீவிரமாக அமுல் நடத்தல்.
2. இரத்தினக்கற்கள் காணப்படும் பிரதேசங்களை விஞ்ஞான ரீதியில் கண்டு பிடிக்கவும், நவீன தொழில் நுட்ப முறைகளில் அகழ்புகளை மேற் கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல்.
3. சர்வதேச தரம் வாய்ந்த உபகாரணங்கள் இங்கிருப்பதனால் கல் வெட்டல், ஒப்பமிடல் போன்றவற்றை உள் நாட்டிலேயே மேற்கொள்ளல்.

இந்நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படின் நாடு அபரிமிதமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

## இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள்

இதுவரை காலமும் இரத்தினக்கல் தொழிலுடன் எதுவித தொடர்புமின்றியிருந்த ஸ்ரீலங்காவின் பிரதான வர்த்தகர்களில் சிலர், சமீப காலமாக எம் இரத்தினக்கல் ஏற்றுமதி வர்த்தகத்தில் முன்னணியில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வருட ஓகஸ்ட் மாதம் வரையிலான ஏற்றுமதியில் 40 சத வீதத்துக்கும் அதிக பங்கினைப் பெற்றிருக்கும் ஐந்து பிரதான ஏற்றுமதியாளர்கள் புதிதாக இந்துறைக்கு வந்து சேர்ந்தோராவர். மாற்றத்தக்க ரூபா வசதிகளைப் பெற்றுத் தம்மைச் சார்ந்துள்ள நிறுவனங்களுக்கு உள்நாட்டில் அருமையாகவிருக்கும் பொருட்களை இறக்குமதி செய்து கொடுப்பதே இவர்களது உள் நோக்கமாகும்.

மூன்று பிரதான ஏற்றுமதியாளர்கள் மொத்த ஏற்றுமதியின் மூன்றிலொரு பங்கினைப் பெற்றுள்ளனர். இவ்வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் ரூ. 5.5 கோடி பெறுமதியான இரத்தினங்களை இவர்கள் ஏற்றுமதி செய்துள்ளனர்; 1971ன் மொத்த ஏற்றுமதியைவிட இது 16 மடங்கு அதிகமானதாகும்; 1972 ன் மொத்த ஏற்றுமதியில் 4 மடங்கு அதிகமானதாகும்.

இன்றைய மொத்த ஏற்றுமதியின் 52.3 சதவீதம் 15 பிரதான ஏற்றுமதியாளர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. பதிவு செய்யப்பட்ட 775 ஏற்றுமதியாளர்கள் ஏனைய 47.3 சத வீதத்தினை ஏற்றுமதி செய்கின்றனர்.

பதிவு செய்யப்பட்ட 775 ஏற்றுமதியாளர்களுள் 10 சத வீதமானோர் இப்பொழுது ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை. மோட்டார் வாகன மொன்றையோ அல்லது வேறேதும் ஆடம்பரப் பொருள் ஒன்றையோ இறக்குமதிச் செய்யப் போதியளவு மாற்றத்தத்க ரூபாவைப் பெற்றவுடன் அவர்கள் ஏற்றுமதிசெய்வதை நிறுத்துகின்றனர்.

---

### 15 பிரதான தனியார் துறை இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள்

ஜனவரி-ஓகஸ்ட் 1977 காலப்பகுதிக்கான ஏற்றுமதிகளின் பெறுமதி

| ஏற்றுமதியாளர் | | பெறுமதி (ரூ. பத்து லட்சங்களில்) | மொத்த ஏற்றுமதியில் வீதம். |
|---|---|---|---|
| 1. ஏ | .. | 24.6 | 15.9 |
| 2. பீ | .. | 14.9 | 9.6 |
| 3. சீ | .. | 7.7 | 5.0 |
| 4. டீ | .. | 6.9 | 4.5 |
| 5. ஈ | .. | 5.6 | 3.6 |
| 6. எப் | .. | 4.1 | 2.7 |
| 7. ஜீ | .. | 2.9 | 1.9 |
| 8. எச் | .. | 2.7 | 1.7 |
| 9. ஐ | .. | 2.3 | 1.5 |
| 10. ஜே | .. | 2.2 | 1.4 |
| 11. கே | .. | 1.8 | 1.2 |
| 12. எல் | .. | 1.4 | 0.9 |
| 13. எம் | .. | 1.4 | 0.9 |
| 14. என் | .. | 1.3 | 0.8 |
| 15. ஏனையோர் | | 1.1 | 0.7 |
| (பதிவு செய்யப்பட்ட 775 ஏற்றுமதியாளர்கள்) | .. | 73.9 | 47.7 |
| மொத்தம் | .. | 154.8 | 100.0 |

## எலஹறாவில் மலேரியா அபாயம்

புதிதாக வளர்ச்சியடைந்துவரும் இரத்தினக்கல் அகழ்வுப் பிரதேசமான எலஹறாவில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. கல் அகழ்வுக்காகத் தோண்டப்பட்டிருக்கும் சுமார் 30 இலட்சம் குழிகள் மூடப்படாதிருப்பதனால் ஆயிரக்கணக்கான மலேரியா நுளம்புகள் இக்குழிகளில் உற்பத்தியாகின்றன.

நிவெங்கிலுமிருந்து தம் அதிர்ஷ்டத்தைத் தேடிவரும் சுமார் 30,000 பேர் தற்காலிகமாயமைக்கப்பட்ட குடிசைகளில் தங்கியிருந்து அகழ்வு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் சுமார் 60 சதவீதமானோர் சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வோர் ஆவர். மலேரியாவினால் பாதிக்கப்படுவோர் தத்தமது கிராமங்களுக்குச் செல்வதனால் இந்நோய் சகல இடங்களிலும் பரவுகின்றது. 1963 ல் 17 ஆக இருந்த நோயாளர் தொகை இப்பொழுது 3 இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கின்றது.

அரசாங்க அனுமதியின்றி அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தாம் தோண்டும் குழிகளை மூடிவிடாது செல்வதே இதற்குக் காரணமாகும். அரசாங்க அனுமதியுடன் அகழ்வு செய்வோர், குழிகளை மூடவேண்டுமெனச் சட்டத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதனால் இவ்வாறான ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

எனவே எலஹறாப் பிரதேசத்தில் அனுமதியின்றிக் கல் அகழ்வோர் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவதுடன் முடிக்குரிய காணிகளில் தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும். மேலும் சகல காணிகளுக்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கி சட்ட ரீதியான முறையில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தூண்டுதல் அளித்தல் அவசியம்.

மலேரியா ஒழிப்பு இயக்கமும், இரத்தினக்கல் கூட்டுத்தாபனமும் கூட்டாக இணைந்து மூடப்படாதிருக்கும் இக்குழிகளை மூடிவிட முன்வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

## கொகோ – கோலா விவகாரம்

நீண்ட காலமாக இந்திய வாழ்க்கையுடன் ஊடாடிப்போன காரம் மிகுந்த பானமொன்றான கொகோ கோலா மிகப் பெரிய ஆபத்தொன்றை எதிர் நோக்கியுள்ளது. எந்த ஒரு வெளிநாட்டு நிறுவனமும் 40 சதவீதத்துக்கு அதிகமான பங்குகளை வைத்திருக்க முடியாமை, சகல உற்பத்தி தொழில் நுட்பத் தந்திரங்களையும் குறிப்பிட்ட திகதி யொன்றுக்கு முன்னர் இந்தியாவிடம் சமர்ப்பிக்க வேண்டியமை போன்ற நியதிகளை உள்ளடக்கிய 1973 ன் அன்னியச் செலாவணி ஒழுங்கு விதிச் சட்டத்தின் தீவிர அமுலாக்கத்தினலேயே இவ்வாபத்து நேர்ந்துள்ளது. இந்தியாவில் முதலீடு செய்யும் சகல வெளிநாட்டு நிறுவனங்களையும் தேசிய ரீதியில் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இச்சட்டம் உருவாக்கப்பட்டது.

தம் உற்பத்தியில் 40 சதவீதத்துக்கு அதிகமான பாகத்தினை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் 51 வீதப் பங்கினையும், மொத்த உற்பத்தியையும் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் 74 வீதப் பங்கினையும் வைத்திருப்பதை இச் சட்டம் அனுமதிக்கின்றது.

இச் சட்டத்தின் விதிகளை கொகோ கோலா நிறுவனம் ஏற்றுக் கொண்ட போதிலும் தொழில் நுட்பத் தந்திரங்களை இந்தியாவிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்ற விதியை ஏற்க மறுத்தது. பல கோடி டாலர் பெறுமதி வாய்ந்த தன் கலவைத் தந்திரத்தை வெளியிட இவ்வமெரிக்க நிறுவனம் விரும்பவில்லை. இந்த இக்கட்டான நிலையை வெற்றி கொள்ளும் பொருட்டு, தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் ஒன்றை அமைக்குமாறு இந் நிறுவனம் வேண்டுகோள் விடுத்தது. ஆனல் இந்திய அரசு இதற்கு இணங்கவில்லை. இதற்குச் சம்மதம் தெரிவிப்பின், இந்தியர்கள் தொடர்ந்தும் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதிகளாகவே இருப்பார்களெனக் கைத்தொழில் அமைச்சர் ஜோர்ஜ் பேர்ணன்டஸ் தெரிவித்தார். நைரோபியிலிருக்கும், கொகோ கோலா நிறுவனத்தின் ஆபிரிக்க - இந்தியப் பிரிவின் தலைவரான திரு. அந்தோணி யங், நிறுவனத்தின் வியாபாரத்தைத் தொடர்ந்து இந்தியாவில் நடத்துவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டு புது டில்லிக்கு வந்தார். கொகோ கோலாவின் உலக மொத்த வர்த்தகத் தொகையுடன் ஒப்பிடும் போது இந்தியாவின் பங்களிப்பு மிகச் சிறியதாயிருப்பினும் (1 சதவீதம்) இவ் வர்த்தகத்தை இழப்பதை விடத் தொடர்ந்து நடத்துவதையே நிறுவனம் விரும்புகின்றது என திரு. யங் குறிப்பிட்டார். உணவுப் பொருட்களையும், பானங்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அவற்றின் உள்ளீடுகளை வெளியிட வேண்டுமென்ற ஒரு விதி உணவு - மருந்துச் சட்டத்தில் இருப்பதனலேயே கொகோ கோலா நிறுவனம் கலவைத் தந்திரத்தை வெளியிட வேண்டுமென இந்திய அரசு வற்புறுத்துகின்றது.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை கொகோ கோலாவுக்குக் கெடு வழங்கியுள்ள கைத்தொழில் அமைச்சர், கடந்த 20 வருட காலத்தில் இக் கம்பெனியின் இந்திய நடவடிக்கைகளை பின்வருமாறு குறிப்பிட்டார்.

''வளர்முக நாடொன்றில் முக்கியத்துவம் குறைந்த துறையொன்றில் கூடிய இலாபத்துடன் வர்த்தகம் செய்யும் ஒரு பல்தேசிய நிறுவனம் எவ்வாறு அபரிமிதமான வளர்ச்சியை அடைய முடியுமென்பதற்கும், அரசாங்கம் இது குறித்து அஜாக்கிரதையாக இருப்பின் தேசியக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு அது எவ்வளவு தூரம் தடையாக இருக்குமென்பதற்கும் இந் நிறுவனம் மிகச் சிறந்ததோர் உதாரணமாகும்.''

புள்ளிவிவரத் தரவுகளை மேற்கோள் காட்டும் ''நியூ டைம்ஸ்'' பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''1958ல் 660,000 ரூபா ஆரம்ப மூலதனத்துடன் இந்தியாவில் தன் நடவடிக்கைகளை மேற்கொண்ட கொகோ கோலா ஏற்றுமதி நிறுவனம் 1971 ல் ரூ. மூன்று கோடியை நிகர இலாபமாகப் பெற்றது. இது ஒப்பீடில்லாத ஒரு வரப்பிரசாதமாகும். 1958க்கும் 1974 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நிறுவனம் ஐக்கிய அமெரிக்காவில் அட்லான்டாவில் அமைந்திருக்கும் அதன் தலைமைக் காரியாலயத்துக்கு 6 கோடி ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.''




கொகோ கோலா நிறுவனம் இந்தியாவில் பெற்ற இலாபங்கள், அமைச்சர் ஜோர்ஜ் பர்ணண்டஸின் கண்ணோட்டத்தில் இவ்வாறமைந்துள்ளன. ஒகஸ்ட் 26 ம் திகதி ''ஏசியா வீக்'' வார ஏடு இப்படத்தைப் பிரசுரித்திருந்தது.

போத்தலின் அடியில் காட்டப்பட்டுள்ள உள்ளீடுகள் இயந்திரங்களையும் உள்ளடக்கியதாகும்.

கொகோ கோலாவுக்குப் பிரதியீடாகப் பானமொன்றைத் தயாரிப்பதில் இந்தியர் முயற்சி எடுத்துள்ளனர். இந்திய ஆராய்ச்சி நிறுவனமொன்று தயாரித்திருக்கும் கலவை முறை யொன்றை அடிப்படையாகக் கொண்ட புதுப் பானமொன்று கூடிய சீக்கிரத்தில் உற்பத்தி செய்யப்படும். இப் பானத்துக்கான பெயரிடும் போட்டியில், ''77'' எனப் பெயரிடலாமெனக் கருத்துத் தெரிவித்த ஜனதா எம்.பி. ஒருவர், அதற்கான பரிசைப் பெற்றுள்ளார். இந்தியர்களைப் பொறுத்தவரையில் ஏழு ஓர் அதிர்ஷ்ட இலக்கமாக இருப்பதுடன் ஜனதாக் கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றிய ஆண்டையும் இது சூசகமாகத் தெரிவிக்கின்றது. இப் பானத்தை உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல் போன்றவற்றை அரசுக்குச் சொந்தமான மொடர்ன் பேக்கரீஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கொகோ கோலாவைப் போத்தலில் அடைக்

கும் நிறுவனம் இப் புதுப்பானத்தையும் போத்தலில் அடைக்க இசைந்துள்ளது.

இச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்குமாறு சுமார் 100 பல்தேசிய நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வேண்டுகோள் விடுத்திருப்பதாக 'பினான்ஷியல் டைம்ஸ்' தெரிவித்தது. இரண்டு மாத காலக் கெடுவுக்குள் தம் இருப்புக்களில் ஒரு பகுதியை இந்தியப் பங்காளர்களிடம் கையளிக்குமாறு இந் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன. அவ்வாறில்லாத பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், இலாபத்தினை வெளியே எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்படும்.

அமெரிக்காவுக்குச் சார்பான போக்கினைக் காட்டிய ஜனதா அரசு, இவ்வாறான நடவடிக்கையொன்று எடுத்திருப்பது குறித்து அரசியல் அவதானிகள் வியப்படைந்துள்ளனர். கொகோ கோலாவைப் போத்தலில் அடைக்கும் நிறுவனத்தினரும், அதன் உயர் அதிகாரிகளில் சிலரும் திருமதி இந்திரா காந்தியின் அரசுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தமையாலேயே இத்தகைய கடுமையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டதென்ற கருத்தொன்றும் புது டில்லியில் நிலவுகின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தம் கட்சியில் போட்டியிடுவதற்காக கொகோ கோலாவின் புது டில்லிக் கிளை உரிமையாளருக்கு திருமதி காந்தி அனுமதி வழங்கியிருந்தார் என்றும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

கொகோ கோலாவை இந்தியமயப்படுத்துவதற்குப் பின்னணியில் எத்தகைய உந்துசக்திகள் இருந்தபோதிலும், இந்தியாவில் தம் போக்கில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பல் தேசிய நிறுவனங்கள் இனிமேலும் அப்போக்கினைத் தொடர முடியாதென்பது மட்டும் தெளிவாகும். உலகின் மிகப் பெரிய கம்பியூட்டர் உற்பத்தி நிறுவனமான I. B. M. (I B M) கம்பெனிக்கும் இதே கதி ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

பல பல்தேசிய நிறுவனங்கள் தாம் முதலீடு செய்த பணத்தை விடக் கூடிய தொகையைச் சம்பாதித்துள்ளன.

## வறியோர் மேலும் வறியோராகின்றனர்

*உலக வங்கித் தலைவர் திரு. ரொபட் மக்னமாரா வங்கியின் ஆளுனர் குழுக் கூட்டமொன்றில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கு பிரசுரித்துள்ளோம்*

வளர்முக நாடுகளின் பெரும்பான்மையோரைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் மிக மிக மெதுவானதாகவே இருக்கின்றது. எதிர்பார்ப்புக்கும் வெற்றிக்கும் இடையேயுள்ள தூரம் அகன்று செல்லச் செல்ல நம்பிக்கைகள் மங்கி மயக்கம் தெளிவடைகின்றது.

### இடைவெளியை நிரப்புதல்

கடந்த 25 வருடங்களில் அபிவிருத்தி குறித்து மேற்கொண்ட சகல முயற்சிகளும், வளர்முக நாடுகளதும், வளர்ச்சியடைந்த நாடுகளதும் தலைக்குரிய சராசரி வருமானத்திலிருக்கும் மிகப் பெரிய இடைவெளியை நிரப்பத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும். இவ்விடை வெளியானது அதன் மிக உயர்ந்த இடத்தில் 8000 டொலராக இருக்கின்றது.

''இடை வெளியை நிரப்புவதற்கு'' முதலில் யதார்த்த ரீதியான நோக்கங்கள் இல்லாதிருந்தமையினால் இந்நிலை ஏற்பட்டதே ஒழிய, அபிவிருத்தித் திட்டங்களின் தோல்வியினால் ஏற்பட்டதொன்றல்ல என்ற முடிவுக்கு வரலாம். கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளின் மூலதனம், தொழில் நுட்பங்கள் போனவற்றை வளர்முக நாடுகளின் மூலதனம், தொழில் நுட்பங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தென்படும் மிகப் பெரிய வேறுபாடானது, இந்த இலட்சியம் இலகுவில் நிறைவேறாததொன்றே என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

தலைக்குரிய வருமானங்களிடையே காணப்படும் மிகப் பெரிய இடைவெளியை நீக்குவதனை அட்சர கணித ரீதியில் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். செல்வந்த நாடொன்றை விட வேகமான அளவில் வளர்ச்சியுறும் ஒரு வறிய நாடு, அவற்றின் வளர்ச்சிக்கிடையே இருக்கும் தலைகீழ் விகிதமானது அந்நாடுகளின் தலைக்குரிய வருமானங்களுடன் சமனாகும் வரையில் வருமான இடைவெளியைக் குறைக்க முடியாததாகவே இருக்கும். எனவே, வரலாற்று ரீதியான வளர்ச்சி விகிதங்கள் எதிர்காலத்திலும் தொடர்ந்து நிலவுமாயின், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமான தனி நபர் வருமான வளர்ச்சி கடந்த 25 வருடங்களில் ஒரே மாதிரியாக இருந்திருப்பதனால் தற்போதைய வருமான இடைவெளியானது தொடர்ந்தும் அகன்று கொண்டே செல்லும். வளர்முக நாடுகள் அவற்றின் தலைக்குரிய வருமான வளர்ச்சி விகிதத்தினை இரட்டிப்பாக்கினாலும், கைத்தொழில் மயமான நாடுகளின் வரலாற்று ரீதியான வளர்ச்சி தொடர்ந்து நிலவுமிடத்து வருமான இடைவெளி நிரப்பப்படுவதற்கு ஏறத்தாழ ஒருநூற்றாண்டு செல்லும். மிக வேகமானமுறையில் அபிவிருத்தியடையும் நாடுகளில் 7 நாடுகள் 100 வருட காலத்திலும் ஏனைய 9 நாடுகள் 1000 வருட காலத்திலும் வருமான இடைவெளியை நிரப்பக்கூடியவையாக இருக்கும்.

கடந்த 25 வருட காலத்தில் வளர்முக நாடுகள் கூடிய வளர்ச்சி விகிதங்களை அடைந்திருந்தும் வருமான இடைவெளி சுருங்குவதற்குப் பதிலாக மேலும் அகன்றே செல்கின்றது என்பதனைக் கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது. எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் மட்டும் இதற்கு விதி விலக்காகும்.

வருமான இடைவெளிகள் முக்கியத்துவமற்றவையல்ல. உலகில் நிலவும் சமனின்மையையும், நாடுகளுக்கிடையே இருக்கும் வேறுபாடுகளையும், நாடுகளுக்குள் இருக்கும் வேறுபாடுகளையும் அவை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மேலும், செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்கான நிதியுதவிகளை தொடர்ந்தும் செய்துவர முடியுமென்பதையும் அது சுட்டிக் காட்டுகின்றது.

வாழ்க்கைத்தரம், போஷாக்கு, கல்வி, வயதெல்லை, பௌதீக, சமூகச் சூழல் போன்றவற்றில் இவ்விரு பிரிவு நாடுகளுக்குமிடையே இருக்கும் இடைவெளியை அகற்றுவதை அடிப்படையாகக் கொண்ட நோக்கங்கள் முக்கியமானவையாகும். இவ்விடைவெளிகள் இப்பொழுது ஓரளவுக்குச் சுருங்கியுள்ளதுடன், இன்னும் சில காலங்களில் இவை மேலும் சுருங்க வாய்ப்புண்டு.

### வறுமையை அகற்றுதல்

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில், வளர்முக நாடுகள் அவற்றின் சமூகங்களிடையே பரந்து காணப்பட்ட வறுமையை ஒழிக்கவோ அல்லது குறிப்பிடக்கூடிய அளவுக்குக் குறைக்கவோ தவறிவிட்டமை இன்னொரு விஷேட அம்சமாகும்.

இடைவெளியைச் சுருக்குவது போலன்றி, வறுமையை அகற்றுவதானது யதார்த்த ரீதியான



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

### வருமான இடைவெளி

வளர்ச்சியடைந்த நாடுகளின் தலைக்குரிய வருமானங்களில் வளர்முக நாடுகளின் தலைக்குரிய வருமான வீதம்

| | 1950 | 1960 | 1975 |
|---|---|---|---|
| மிக வறிய நாடுகள் | 6.1% | 4.0% | 2.6% |
| மத்திய தர வருமானமுள்ளவை | 20.8% | 18.3% | 17.0% |
| எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் | — | 16.1 | 22.6 |
| சகல வளர்முக நாடுகளும் | 11.9 | 9.7 | 9.2 |

நோக்காக இருப்பதுடன் அத்தியாவசியமானதுமாகும். அபிவிருத்தியடையும் சில சமூகங்கள் உபயோகமற்ற சில கொள்கைகளைக் கொண்டிருந்தனவென்பது உண்மையே. துரிதமான பொருளாதார வளர்ச்சியானது தானாகவே வறுமையைப் போக்கிவிடும் என்பதில் பலத்த நம்பிக்கை வைத்திருந்ததைப் பின்னோக்கிப் பார்க்கும்போது உணரமுடிகின்றது. சமூகத்தின் மிக வறிய பகுதிகளுடன் நேரடித் தொடர்பு கொண்ட பயனுள்ள உபாயங்களை விருத்தி செய்வதற்காக கடந்த சில வருடங்களில் உலக வங்கியும், அதன் சேவைகளைப் பெறும் நாடுகளும் முயன்று வருகின்றன.

தற்பொழுது உருவாகி வரும் உபாயங்களை வெவ்வேறு வறிய சமூகங்களுக்கும் வெவ்வேறு முறைகளில் பிரயோகித்தல் வேண்டும். கிராமமொன்றில் அரை ஏக்கர் நிலத்தினை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு விவசாயிக்குப் பொருத்தமான உபாயங்கள் நகரச் சேரிகளில் வாழும் வேலையற்ற ஒரு தொழிலாளிக்குப் பொருந்துவதில்லை.

வறுமையை ஒழிக்கப் பல பயனுள்ள வழிமுறைகள் இருப்பினும், மிகத் துரித கதியில் ஒரு செயலைச்செய்து முடிப்பதனாலோ சிறப்பான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தினாலோ உறுதியுடன் மேற்கொள்ளப்படும் பத்தாண்டு முயற்சியினாலோ உடனடியாக அது அகன்று விடுவதில்லை.

இதற்குத் தேவையான கால அளவு, பொருத்தமான கொள்கைகளைப் பிரயோகிக்கப் பயன்படுத்தப்படும் நிறுவன அமைப்புக்களிலேயே தங்கியிருக்கின்றது. பல வளர்முக நாடுகளில் இந்நிறுவன அமைப்புக்கள் மிகச் சமீபத்தில் தான் உருவாகி வருகின்றன.

அதிகமான பயிற்றப்பட்ட மக்களையும், விரிவான பொருளாதார, சமூகப் பொது முதலீடுகளையும், அபிவிருத்திப்படி முறையின் நீண்ட காலப் பிரயோக அனுபவத்தினையும் முன்னெப்போதையும் விட தற்கால வளர்முக நாடுகள் கொண்டதாக விருக்கின்றன. இந்நாடுகளின் கடந்த 25 வருட கால முதலீட்டினதும், கடின உழைப்பினதும் விளைவான இது, இருபதாம் நூற்றுண்டின் கடைசிக் கால்நூற்றுண்டை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப் பிரிவாக மாற்றியமைக்கும் வாய்ப்பினையும் அவற்றுக்கு அளித்துள்ளது. எனவே 'இடைவெளியை' நிரப்பத் தவறியமையாலும், வறுமையை ஒழிப்பதில் தோல்வி கண்டதாலும் அபிவிருத்தி பொய்த்து விட்டது என்ற கூற்று மேலெழுந்தவாரியானதும், தவறான வழியில் இட்டுச் செல்வதுமாகும்.

### நாடுகளுக்கிடையிலான சமனற்ற வளர்ச்சி

பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு பார்ப்போமாயின்:

- பிரதானமாகத் தென்னுசியாவிலும், சகாரா ஆபிரிக்காவிலும் இருக்கும் 32 வறிய நாடுகளைப் பொறுத்த வரையில் தலைக்குரிய வருமான அதிகரிப்பானது 1.5 சதவீதமாக அல்லது சராசரி விகிதத்தின் அரைவாசியாக இருக்கின்றது. இந்நாடுகள் 95 கோடி மக்களைக் கொண்டவையாக இருக்கின்றன; இது வளர்முக உலகின் மொத்தச் சனத்தொகையில் 46 சதவீதமாகும்.
- வறிய நாடுகள் குறிப்பிடத்தக்களவு மெதுவான வளர்ச்சியை அடைந்திருப்பதுடன், அவற்றின் வளர்ச்சி வேகம் ஒவ்வொரு பத்தாண்டிலும் மேலும் மேலும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகின்றது.

மிக வறிய நாடுகளின் தலைக்குரிய வருமான வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் இவ் வீழ்ச்சியானது அபிவிருத்தி வரலாற்றில் காணப்படும் மிகக் கவலைக்குரிய ஒரு போக்கு என்பதனை உணரலாம்.

### நாடுகளுக்குள் காணப்படும் தவருன வழியில் இட்டுச் செல்லும் வளர்ச்சி

மிக வறிய நாடுகளின் வளர்ச்சி வீதங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இந்நாடுகளும் மத்திய தர வருமானமுள்ள வளர்முக நாடுகளும் அடைந்த ஓரளவான வளர்ச்சியில் கூட சமூகத்தில் வாழும் மிக வறிய மக்கள் எவ்வித நன்மையையும் அடையவில்லை.

எந்த ஒரு சமூகத்தினதும் அபிவிருத்திக்குப் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாத நிபந்தனையொன்ருக இருப்பினும், அச்சமூகத்துக்குள் அது மட்டும் போதியதாயில்லை. அதற்கான காரணமும் தெளிவானதாகும். பொருளாதார வளர்ச்சியானது வறியோரைச் சென்றடையாவிடின், அவற்றினுல் அவர்களுக்குதவ இயலாது.

சகல வளர்முக நாடுகளிலும் வாழும் வறிய மக்கள், தம் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்கவோ, வளர்ச்சியினுல் பெறப்படும் நன்மைகளை சமமாக அனுபவிக்கவோ முடியாதவாறு இக்கட்டான ஒரு நிலையில் சிக்கியுள்ளனர். அவர்களது தரித்திர நிலை, அவர்களை அபிவிருத்திப் படிமுறையிலிருந்து வெளியே தள்ளியுள்ளது. அபிவிருத்தி அவர்களைத் தாண்டிச் செல்கின்றது.

நாம் இங்கு முக்கியத்துவமற்ற ஒரு சிறு குழுவினரைப் பற்றிப் பேசவில்லை. கோடானுகோடி மக்களைப் பற்றி நாம் பேசுகிருேம். அவர்களையே நான் மிகவும் வறியவர்கள் என குறிப்பிட்டேன். கல்வி யறிவின்மை, போஷாக்குக் குறைவு, நோய்கள், கூடிய வீத சிசு மரணம், குறுகிய வாழ்வெல்லை போன்ற இன்னேரன்ன பல இன்னல்களில் சிக்கி அவர்கள் வாழ்விழந்தோர்களாக, பிறப்புரிமைகள் மறுக்கப்பட்டோராக வாழ்கின்றனர். அவர்களது அடிப்படை மனிதத் தேவைகள் கூட நிறைவேற்றப்படவில்லை.

சுமார் 100 கோடி மக்கள் சுத்தமான குடிநீர் வசதியினையோ பொதுச் சுகாதார வசதிகளையோ இழந்தோராக இருக்கின்றனர். 70 கோடி மக்கள் மிகப் பெருமளவில் போஷாக்குறைவால் வாடுகின்றனர். 55 கோடி மக்களுக்கு எழுதவோ வாசிக்கவோ தெரியாது. போதிய இருப்பிட வசதிகளற்ற நகர்ப்புறங்களில் 25 கோடி மக்கள் வாழ்கின்றனர். இலட்சோப லட்சம் பேர் போதிய தொழில் வாய்ப்புக்களின்றித் தவிக்கின்றனர்.

(24ம் பக்கம் பார்க்கவும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நேரத்தில் கை கொடுக்கும் இடம்

## — சர்வதேச நாணய நிதி : மற்றுமோர் அமெரிக்கக் கண்ணோட்டம்

பெருமளவில் நிதி நெருக்கடிகளினுல் பாதிக்கப்படும் நாடுகளுக்குச் சர்வதேச நாணய நிதியின் மூலம் கடன்கள் வழங்குவதற்காக வேண்டி அவசர கால நிதியொன்றைத் தாபிக்க வேண்டுமென, ஐக்கிய அமெரிக்காவினதும், 7 ஒபெக் நாடுகளதும் தலைமையில் ஒகஸ்ட் 6 ம் திகதி பாரிசில் நடைபெற்ற உலகின் செல்வவளம் கொண்ட 14 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. 'சர்வதேச நாணய நிதி கஷ்டத்திலிருக்கும் நாடுகளைக் காப்பாற்றிவிட்டுக் கடின விலை கேட்கின்றது' என்ற தலைப்பில் இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஒகஸ்ட் 15 ம் திகதியின் 'டைம்' சஞ்சிகை, பின்வருமாறு கூறுகிறது. ''விட்டவீன் வசதி'' யை உருவாக்கியதன் மூலம், (சர்வதேச நாணய நிதியின் நிர்வாக இயக்குநர் திரு. எச். ஜோன்னஸ் விட்டவின்னின் பெயரைக் கொண்டு இப்பட்டப் பெயர் சூட்டப்பட்டுள்ளது) ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் நாடுகளுக்குக் கடைசியில் தஞ்சமளிக்கும் நிறுவனமாக சர்வதேச நாணய நிதியின் முக்கியத்துவம் அதிகரிப்பதோடு, உதவி பெறும் நாடுகளிடம் சாத்தியமற்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதியுபகாரமாக எதிர்பார்க்கும் அதன் நிலையும் வலுவடைந்துள்ளது.

கடுமையான நெருக்கடிகளால் அழுத்தப்பட்டிருக்கும் நாடுகள் தனியார் வங்கிகளிடமிருந்து வரையறையின்றிக் கடன்கள் வாங்குவது பற்றிக் குறிப்பிட்டு மேலும் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. எண்ணெய் ஏற்றுமதி'' நாடுகளினுல் குவிக்கப்படும் மிகையை மீள் சுழற்சியில் ஈடுபடுத்தும் வேலையை தனியார் வங்கிகள் மேற்கொள்கின்றன. பிரதான வர்த்தக வங்கிகளுக்கு நாடுகள் கொடுக்க வேண்டிய கடன் 1969 ல் 110 கோடி டொலராக இருந்தது. சென்ற வருடத்தில் இத்தொகை 550 கோடியாக அதிகரித்தது. பிரேஸில், மெக்ஸிகோ, பெரு, ஸயரே போன்ற நாடுகளுக்கு மீண்டும் கடன்களை வழங்க இவ்வங்கிகள் இப்போது தயக்கம் தெரிவிப்பதுடன், மேலும் கடன் வசதிகளைப் பெறுதவிடத்துப் பெற்ற கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றலை இந்நாடுகள் இழக்கக்கூடும். சர்வதேச நாணய நிதி அவசரகாலக் கடன்களை வழங்கத்தவறின், பெரும்பான்மையான குறைவிருத்தி நாடுகள் பெற்ற கடன்களை மீளச் செலுத்தத் தவறுவதுடன், இதன் விளைவாக பல வங்கிகள் வீழ்ச்சியடைவதுடன் சர்வதேசப் பொருளாதாரத்திலும் மந்தம் ஏற்படும்.

1973-74 எண்ணெய் விலை அதிகரிப்புடன் இணைந்து ஏற்பட்ட உலகளாவிய மந்தத்தின் பின்னர் விட்டவீன் ஓய்வற்ற ஒரு நெருப்பு விளையாட்டுக்காரராக மாறியிருக்கின்ருர். ஓரிடத்தில் ஏற்படும் பணவீக்கத்தின் தீப்பொறிகளை அணைப்பதிலும், இன்னேரிடத்தில் சரிந்துவரும் பொருளாதாரங்களுக்குக் கைகொடுத்துதவுவதிலும் அவர் ஒரே நேரத்தில் ஈடுபட்டு வருகின்ருர். சில வேளைகளில் சகல தேசங்களுக்குமான மத்திய வங்கியொன்றின் தலைவர்போல அவர் நடந்து கொள்கின்ருர். இவ்வருடத்தின் ஆரம்பத்தில் மிகப்பெரிய சென்மதி நிலுவைக் குறையொன்றில் சிக்கியிருந்த பிரிட்டனுக்கு 3.9 கோடி டொலர் அவசரகாலக் கடனென்றை சர்வதேச நாணய நிதி வழங்கியது. பின்னர், குழப்பமான பணவீக்க நிலைமைகளிலும், எண்ணெய் இறக்குமதிகளை நிதிப்படுத்த இயலாத கட்டத்திலும் சிக்கித்தவித்த இத்தாலிக்கு 53 கோடி டாலர் கடன் வழங்குவது பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. இந்நிறுவனம் இல்லாதுவிடின் என்ன நடந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்கவே பயமாக இருக்கின்றது என சர்வதேச வங்கியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

''இவ்வாருன கடன்களுக்கு நிதி விதிக்கும் நிபந்தனைகள் பல அரசாங்கங்களால் வெறுக்கப்படுபவையாகும். பொதுச் செலவைக் குறைத்தல், குறைந்த விகித பணவீக்கத்துக்கான இலக்குகள், கொடுகடன் கட்டுப்பாடு, வாழ்க்கைத்தரத்தைக் குறைத்தல் போன்றவையே இந்த நிபந்தனைகளாகும். நிதி,

### வளர்முக உலகின் பிரதான படுகடன் நாடுகள் 31-12-75 ல் செலுத்தப்படாதிருக்கும் வெளிநாட்டுப் பொதுக்கடன்

### வளர்முக உலகின் 6 பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் பெருமளவில் கடன்பட்டிருக்கும் 4 நாடுகள்

| பிராந்தியம் — நாடு | தொகை (மில்லியன் டொலர்களில்) | சனத் தொகை (ஆயிரங்களில்) | தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி — 1957 (அமெரிக்க டொலர்) |
|---|---|---|---|
| தென் சஹாரா ஆபிரிக்கா: | | | |
| ஸய்ரே | 2,738.5 | 24,721 | 140 |
| ஐவரி கோஸ்ட் | 1,537.4 | 6,700 | 540 |
| சூடான் | 1,534.8 | 15,550 | 270 |
| நைஜீரியா | 1,248.8 | 75,023 | 340 |
| கிழக்காசியாவும், பசுபிக்கும்: | | | |
| இந்தோனேசியா | 11,764.3 | 132,112 | 220 |
| கொரியக் குடியரசு | 6,996.3 | 35,280 | 560 |
| சீனக் குடியரசு | 3,137.3 | — | — |
| மலேசியா | 3,020.6 | 12,308 | 760 |
| இலத்தீன் அமெரிக்காவும், கரிபியனும்: | | | |
| பிரேசில் | 14,121.0 | 106,996 | 1030 |
| மெக்ஸிகோ | 13,480.1 | 59,928 | 1050 |
| ஆர்ஜன்டீனு | 4,698.5 | 25,383 | 1550 |
| சிலி | 4,142.7 | 10,253 | 990 |
| வட ஆபிரிக்காவும், மத்திய கிழக்கும்: | | | |
| அல்ஜீரியா | 9,003.1 | 15,747 | 870 |
| இரான் | 7,126.3 | 33,390 | 1660 |
| எகிப்து | 5,686.9 | 37,230 | 260 |
| மொரோக்கோ | 2,461.9 | 16,680 | 470 |
| தென்னுசியா: | | | |
| இந்தியா | 14,580.1 | 608,012 | 140 |
| பாகிஸ்தான் | 6,328.1 | 69,229 | 160 |
| வங்காள தேசம் | 2,582.5 | 78,600 | 90 |
| ஆப்கானிஸ்தான் | 1,564.0 | 13,700 | 150 |
| ஸ்ரீலங்கா | 997.4 | 13,603 | 240 |
| அதிக வளர்ச்சியடைந்த மத்தியதரைக்கடல் நாடுகள்: | | | |
| துருக்கி | 4,565.0 | 40,198 | 900 |
| ஸ்பெயின் | 3,922.9 | 35,348 | 2750 |
| யூகோஸ்லாவியா | 3,353.1 | 21,350 | 1550 |
| கிரேக்கம் | 2,973.1 | 9,101 | 2340 |

மூலம்: உலக வங்கி ஆண்டறிக்கை, 1977.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இத்தகைய நிபந்தனைகளை கடன் பெறும் நாடுகளின் மேல் திணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை மறுக்கும் விட்டவீன், ''அபிப்பிராயம் கேட்டல்'' மட்டுமே நிபந்தனையாக இருக்கின்றது எனக் கூறுகின்றார். ஒரு நாடு தன் வரவு செலவுத் திட்டத்தில் எந்தளவுக்கு குறைப்புக்களைச் செய்ய வேண்டுமென்றோ, எந்தளவுக்கு வரிகளை உயர்த்த வேண்டுமென்றோ நிதி கேட்காமலிருக்கலாம். ஆனால் நிதியின் இயக்குனர்களைத் திருப்திப்படுத்துமளவுக்கு வரவு - செலவுகள் சமன்படாவிடில் கடன் வழங்க நிதி மறுக்கும். ''நாமோ ஐக்கிய அமெரிக்காவே இத்தாலியின் மீது செல்வாக்குச் செலுத்த முடியாதவிடத்து சர்வதேச நாணய நிதி அதனை இலகுவாகச் செய்துவருகின்றது. அது ஒரு சர்வதேச நிறுவனமாக இருப்பதால் அந்நாட்டுத் தேசியவாதிகளின் கூக்குரல் கூட எழுவதில்லை.'' இவ்வாறு மேற்கு ஜேர்மனியின் நிதியமைச்சு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

''சர்வதேச நாணய நிதியின் நிபந்தனைகள் கெய்ரோவில் கடைப்பிடிக்கப்பட்டபோது பெரும் ஆர்ப்பாட்டங்கள் அங்கு எழுந்தன. பெருவில் அரசாங்கத்துக்குள்ளேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பெருவின் சர்வாதிகார அரசு கடந்த மாதம் இந் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க மறுத்ததனால் இதை எதிர்த்து மத்திய வங்கி ஆளுனரும், நிதியமைச்சரும் ராஜினாமாச் செய்தனர். கடன் மீளச் செலுத்துதலை நீடித்துக் கொடுப்பதன் மூலம், நிதியும், தனியார் வங்கிகளும் பெருவில் தம் இடங்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

''31.12.1975 ல் செலுத்தப்படாத வெளிநாட்டுப் பொதுக்கடன்'' என உலக வங்கியால் கொடுக்கப்பட்ட அட்டவணையில், பெற்ற கடன் தொகை அடிப்படையில் 85 வளர்முக நாடுகளில் ஸ்ரீலங்கா 38 வது இடத்தைப் பெறுகின்றது. அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ள 6 பிராந்தியங்களில் மிகக் கூடிய கடனை வட ஆபிரிக்க, மத்திய கிழக்குப் பிராந்தியம் பெற்றிருக்கின்றது. எட்டு நாடுகளில் ஏழு நாடுகள் 111 கோடி டொலருக்குமதிகமாக வெளிக் கடனைப் பெற்றுள்ளன. ஆப்கானிஸ்தான், வங்காள தேசம், பர்மா, இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தென் ஆசியப் பிராந்தியம் 2 ம் இடத்தைப் பெறுகின்றது. நூறு கோர்டி டொலருக்குக் குறைந்த வெளிநாட்டுக் கடனைக் கொண்ட இரு நாடுகள் பர்மாவும், ஸ்ரீலங்காவும் மட்டுமேயாகும். வெளிக் கடன் பெருமளவில் அதிகரித்துக் காணப்படும் இன்னொரு பிராந்தியம் அதிக அளவு வளர்ச்சியடைந்த நாடுகளையுள்ளடக்கிய மத்தியதரைக் கடல் பிரதேசமாகும். இப்பிராந்தியத்திலுள்ள 7 நாடுகளில் 4 நாடுகள் 290 கோடி டொலருக்குமதிகமான கடனைப்பெற்றுள்ளன. மேலும் தென்னாசிய, பசுபிக் பிரிவிலுள்ள 8 நாடுகளில் 6 நாடுகள் 100 கோடி டொலருக்குமதிகமான வெளிக் கடனைப் பெற்றுள்ளன. இந்தோனேசியா, தென் கொரியா, தைவான், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளே இவையாகும். சஹாராவுக்குத் தெற்கே உள்ள ஆபிரிக்கப் பிராந்தியத்திலுள்ள 35 நாடுகளில் 7 நாடுகள் 100 கோடி டொலருக்குமதிகமான வெளிக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கின்றன.

# செஞ்சீனா எவ்வாறு வேலையின்மையை அகற்றியது

1949 ல் சோஷலிச சீனா உதயமான போது, 40 இலட்சம் வேலையற்ற தொழிலாளிகளுக்கும் புத்திஜீவிகளுக்கும் மட்டுமன்றி, பழைய சமூகத்திலிருந்து பெயர்க்கப்பட்ட 90 இலட்சம் நிர்வாக அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டிய பாரிய பொறுப்பை அது எதிர்நோக்கியது. மேலும் நாடு போரினால் சீரழிந்து போய் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. மக்கள் சீனா இந்த இலட்சக் கணக்கானோருக்கு வாழ்வளித்ததுடன் அதன் பின்னர் வந்த ஒன்பது வருடங்களில் முற்றாகவே வேலையினமையை ஒழித்துக் கட்டியது.

பரந்த அளவில் உற்பத்தியை அதிகரித்ததன் மூலமும், முழுத் திட்டமிடலிலும் கொள்கை மாற்றங்களைச் செய்து பொருத்தமான ஒழுங்கு விதிகளைச் செய்ததன் மூலமும் இப்பணி நிறைவேற்றப்பட்டது. ஆயினும், தேசிய பொருளாதாரத்தைப் படிப்படியாகவே புனரமைப்புச் செய்து விருத்தியாக்க வேண்டியிருந்ததனால், வேலையற்றோருக்குத் தொழில்கள் கிடைக்கும் வரை உதவிகள் செய்ய வேண்டியுமிருந்தது. வேலையற்ற தொழிலாளிகளுக்கும், புத்திஜீவிகளுக்குமான நிவாரண நடவடிக்கைகள் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், இவர்கள் ஒழுங்கு முறையில் தொழில்களைப் பெற்றுக்கொள்ளத் துணைபுரிய வேண்டுமெனவும் 1950 ல் தலைவர் மாவோ வலியுறுத்தினார்.

உறுதியான முறையில் ஐந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

1. கைத்தொழில்களுக்குத் தேவையானவிடத்து, வினைத்திறனுள்ள தொழிலாளர்களைத் தொழில்களில் அமர்த்தும் பொறுப்பு தொழில் அமைச்சிடம் விடுக்கப்பட்டது.
2. பயிற்சியற்ற தொழிலாளர்களுக்குத் தொழில்கள் வழங்கப்பட முன்னர் பயிற்சி அளிக்கப்பட்டது.
3. இதுவரை தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள், அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்படும் கைப்பணி அல்லது கூட்டுறவுச் சேவைகளில் தொண்டர் படை ரீதியில் ஒன்றிணைக்கப்பட்டனர். இவற்றின் உற்பத்தி அதிகரித்தபோது, தம் உறுப்பினர்களுக்கு நிலையான தொழில்களை வழங்கும் கூட்டுப் பண்ணைகளாக அல்லது அரச நிறுவனங்களாக இவை மாற்றமடைந்தன.
4. விடுதலைக்கு முன்னர் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்திருந்த விவசாயிகளுக்கும், விவசாயத்தில் ஆர்வம் கொண்டிருந்த ஏனையோருக்கும் கிராமப்புறங்களுக்குத் திரும்புவதற்காக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.
5. இந்நிவாரண நடவடிக்கைகளுக்குட்படாதோருக்கு தொழில்கள் கிடைக்கும் வரை சாதாரண வாழ்க்கைத் தரமொன்றை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அரசாங்கத்தினால் உதவிகள் வழங்கப்பட்டன.

நாட்டுப்புறங்களில் நிலவிய வேலையின்மை பற்றிய நிலை எவ்வாறு நீக்கப்பட்டது? முதலாவதாக நிலச் சீர்திருத்தம் மூலம் சொற்ப அளவில் நிலம் வைத்திருந்தோரும், நிலமற்றிருந்தோருமான கோடிக்கான குடியானவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் குழுக்களாக அமைந்து கூட்டுப்பண்ணை விவசாயம் செய்வதில் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. 1952 அளவில் வேலையின்மை முற்றாக ஒழிந்தது. ஆரம்பத்தில் பரஸ்பர உதவிக் குழுக்களாகவும் பின்னர் கூட்டுறவு முறையிலும் இயங்கிய விவசாயிகள் 1958 ல் மக்கள் குழுக்களை அமைத்தனர். சிறிய அளவிலான செறிவான பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்த அவர்கள் நவீன முறையிலான இயந்திர மயமாக்கப்பட்ட விவசாயத்தில் ஈடுபட்டதும் கிராமப் பொருளாதாரம் பன்முகப்படுத்தப்பட்டது. இச் செயல்களுக்குப் பெருமளவிலான மனிதசக்தி தேவையாயிருந்தது. புரட்சிக்கு முந்திய சீனாவில் வறுமையினால் விவசாயக் கூலிகள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்தனர்; ஆனால் புரட்சியின் பின்னர் பெருமளவில் கல்லூரிப் பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட தொழிலாளரும் கிராமப்புறங்களுக்குச் சென்று கிராமியப் புனர்நிர்மாணத்தில் ஈடுபட்டதனால் இப்போக்கு மறுமுகமாகத் திரும்பியது.

சோஷலிசத் திட்டமிடலின் கீழ் நிர்மாணமும், உற்பத்தியும் பெருமளவில் அதிகரித்ததுடன் இவை வேலையற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கின. 1958 அளவில் முழு அளவில் அபிவிருத்தியடைந்த சோஷலிசப் பொருளாதாரமானது, தொழிலாளர் படையின் நிலையில் அடிப்படை மாற்றமொன்றினை ஏற்படுத்தியது. வேலையின்மை மறைந்தது. உற்பத்தி பெரும் பாய்ச்சலில் கூடிச் சென்றது. இக்கட்டத்தில் சோஷ

(32ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(21ம் பக்கத் தொடர்ச்சி)

அட்டவணை 2

**தலைக்குரிய வருமான வளர்ச்சி வீதங்கள்**

| | 1950-1960 | 1960-1970 | 1970-1975 |
|---|---|---|---|
| மிக வறியவை .. .. .. | 2.6 | 1.8 | 1.1 |
| மத்தியதர வருமானமுள்ளவை .. .. | 3.2 | 3.5 | 4.2 |
| சகல வளர்முக நாடுகளும் .. .. | 2.9 | 3.2 | 3.7 |
| அபிவிருத்தியடைந்த நாடுகள் .. .. | 3.0 | 3.7 | 1.9 |

இவை பெரிய வட்டங்களைக் கொண்ட இலக்கங்கள் அல்ல. ஒவ்வொரு இலக்கத்துக்குள்ளும் ஒரு மனிதஜீவி இருக்கின்றான். இதில் மிகப் பரிதாபத்துக்குரிய ஓரம்சம் யாதெனில் இவர்களில் மிகப் பெரும்பான்மையினோர் சிறுவர்களாவர். வளர்முக நாடுகளில் வாழும் மொத்தம் 200 கோடி மக்களில் 86 கோடி பேர் 15 வயதுக்குக் குறைந்தோராகும். இவர்களே எதிர்கால சமுதாயத்தின் நம்பிக்கையின் சின்னங்கள். ஆனால் இவர்களில் அரைவாசிப் பேருக்கும் அதிகமானோர், நீண்ட கால ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் பலவீனமாக்கும் நோயொன்றினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். மூன்றிலொரு பங்குக்கும் அதிகமானோர் போஷாக்குக் குறைவினால் வாடுகின்றனர். இவர்களில் 29 கோடிப் பேர் பாடசாலை செல்வதில்லை.

வளர்முக உலகின் மிகக் கொடிய வறுமையின் சித்திரமொன்றே இது. யதார்த்த ரீதியான இக் காட்சிகளைப் புறக்கணித்துச் செல்லும் எந்த அபிவிருத்தி உபாயத்தினாலும் இந் நிலையை மாற்ற முடியாது.

இவையெல்லாவற்றையும் நீக்க என்ன செய்யலாம் என்பது எமக்குத் தெரியாது என்பதல்ல பிரச்சினை. என்ன செய்யவேண்டுமென்பதனை நாம் அறிவோம் பொருத்தமான அபிவிருத்தி உபாயமொன்றை நாம் உருவாக்க வேண்டும்.

- பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதுடன்;
- அவ்வளர்ச்சியினால் பெறப்படும் பயன்களில் பெரும்பான்மையானவற்றை, மிக வறிய நிலையிலிருப்போரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வழங்குதல் அவசியம்.

அரசியல் பின்பலமும், செல்வவளமும் கொண்ட வசதிபடைத்த சிறு தொகையினரின் நலவுரிமைகளில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாக இது இருப்பதனால், வளர்முக நாடுகளிலும், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துவது ஒரு பிரச்சினையாகும்.

கடந்த 25 வருட காலத்தில் வளர்முக நாடுகள் அடைந்துள்ள ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சி (அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பினும்) வறுமையைக் குறைப்பதில் போதிய பங்களிப்புச் செய்யவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, 1950 ன் பின்னர் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சியின் பொதுப் போக்குக்கு மிக வறிய நாடுகள் குறைந்த பங்களிப்பினையே அளித்துள்ளன. கடந்த சில வருடங்களில் அவற்றின் வளர்ச்சி வீதங்கள் மேலும் பின் தங்கியுள்ளன. துரித கதியில் வளர்ச்சியடைந்து கொண்டுவந்த வளர்முக நாடுகளில் கூட மிகக் குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் நன்மைகளைச் சமமாக அனுபவிக்கவில்லை. தேசியச் சராசரி வீதத்தின் மூன்றிலொரு பங்காகவே அவர்களது வருமானங்கள் அதிகரித்துள்ளன.

இவ்விரு போக்குகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது, சகல வளர்முக நாடுகளிலும் வறியோரின் வாழ்க்கைத்தரம் ஆமை வேகத்தில் அதிகரித்ததற்கான காரணம் புலனாகின்றது. வளர்முக நாடுகளின் இரு பிரிவினரும் வளர்ச்சியின் நன்மைகளைச் சமமாக அனுபவிக்க வேண்டுமென்பது இதனால் தெளிவாகின்றது.

இக்கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கும் போது, பொருளாதார வளர்ச்சியானது எப்போதுமே வறியோரின் வருமான மட்டங்களை உயர்த்தத் தவறுவதுடன் அது அவ்வளவு அத்தியாவசியமான தொன்றுமல்ல என்றிருக்கும் பிழையான கருத்தொன்று நீக்கப்படும்.

தென்னாசியாவிலும், சஹாரா ஆபிரிக்காவிலும் இருக்கும் பெரும்பான்மை வறியவர்களை உள்ளடக்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியானது சனத்தொகை வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைந்ததாகவே இருக்கின்றது. இந் நிலையில், வருமான மறு பங்கீட்டினால் மட்டுமே வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது அவ்வளவு சாத்தியமானதல்ல. மொத்த தேசிய வருமானம் இதற்குப் போதுமானதுமல்ல.

கடந்த 25 வருட காலங்களில் இந்நாடுகள் அடைந்து வந்த தலைக்குரிய சராசரி வருமான வளர்ச்சியை இப்போது இரட்டிப்பாக்குவதாக நாம் எண்ணிக் கொள்வோம். இது சாத்தியமற்ற ஓர் இலக்கு என்பது ஒருபுறமிருக்க, இவ்வளர்ச்சி வீதங்களை அந்நாடுகள் அடைந்தாலும் கூட இந் நூற்றாண்டின் முடிவில் அந்நாடுகளின் தலைக்குரிய சராசரி வருமானம் 400 டொலராக மட்டுமே இருக்கும். மேலும், வருமானத்தை நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்கு அரசாங்கங்கள் கொள்கைகளை வகுத்துக் கொள்ளாவிடின் சராசரி வருமான வளர்ச்சி, பெருமளவில் பரந்திருக்கும் வறுமையைப் போக்கத் தவறிவிடும். எனவே ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் வாழும் கோடிக் கணக்கான ஏழைகள் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நீண்ட நெடுங்காலம் காத்திருக்க வேண்டுமென்பதையே இது காட்டுகின்றது.

பரந்தளவிலான வறுமையை வெற்றிகொள்வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை? அவற்றின் தன்மைகள் நாட்டுக்கு நாடு சமூகத்துக்குச் சமூகம் வேறுபடலாம். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியவையாகும்.

- போஷாக்கின்மையின் நீண்ட கால விளைவுகளைத் தவிர்க்கவும், உற்பத்தி வாழ்க்கையொன்றின் பௌதீகத் தேவைகளை நிறைவேற்றவும் போதுமான சத்துள்ள உணவு.
- கால நிலை மாற்றங்களிலிருந்தும் சூழலிருந்தும் பாதுகாப்பளிக்கப் போதிய உடையும் உறையுளும்.
- கல்வி, சுத்தமான நீர், சுகாதார பராமரிப்பு போன்ற பொதுச் சேவைகள். சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் உற்பத்தியில் ஈடுபட இவை இன்றியமையாதவையாகும்.

மிக வறியோருக்குஉணவு போன்ற பொருட்களைச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்காக, வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேயிலை ஏல விற்பனை விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றன

1977 ஏப்ரல் இறுதியில் கிலோ கிராம் ஒன்று ரூபா 15.89 ஆக உச்சச் சராசரியை யடைந்த கொழும்பு ஏல விற்பனைகளின் தேயிலை விலைகள், அண்மைய மாதங்களில் குறையத் தொடங்கி இவ்வருடம் ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 13.86 ல் நிலைபெறுவதாயிற்று. எதிர்வரும் மாதங்களில் இது மேலும் வீழச்சியடையக்கூடிய நிலையில் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கடந்த வருட ஏப்ரல் மாத இறுதியில் கிலோகிராம் ஒன்று ரூபா 6.63 ஆக இருந்தது 1977 ஏப்ரல் இறுதியில் மொத்த விற்பனைச் சராசரிகள் கிலோகிராம் ஒன்று ரூபா 15.89 சதமாகக் கூடிற்று. இது இவ்வருடத்திற்கான ஆகக்கூடிய விலையாகும். கிலோ ஒன்றுக்கான சராசரி விலையில் இலாபம் ரூபா 9.26 சதமாகும். அதன் பின்னர் விற்பனைச் சராசரி விலைகள் மே மாத இறுதியில் ரூபா 15.45 ஆகவும், ஜூன் மாத இறுதியில் ரூபா 14.68 ஆகவும், ஜூலை மாத இறுதியில் ரூபா 14.23 ஆகவும், ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 13.86 ஆகவும் தொடர்ந்து வீழ்ச்சியுற்றுக் கொண்டே வருகின்றன. 1976 லும், 1977 லும் இவ்விரு கால கட்டங்களிலுமான விலைகளின் அதிகரிப்பு ஜனவரியிலிருந்து ஏப்பிரல் மாதம் வரை நிலையான உயர்ச்சிப் போக்கினைக் காட்டியதுடன், அடுத்துவரும் ஒவ்வொரு மாதங்களிலும் கீழ்நோக்கிச் சரிந்து 6 மாதங்களில் ஆகக்குறைந்த அதிகரிப்பெண்ணுன ரூபா 6.52ஐ ஆகஸ்ட் இறுதியில் அடைந்தது. (அட்டவணையைப் பார்க்க)

1977ன் ஒவ்வொரு முதல் எட்டு மாதங்களின் இந்தியிலும் மொத்த விற்பனவுச் சராசரிகள்

(கிலோகிராம் ஒன்றின் விலை)

| | | 1976 | 1977 | அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| ஜனவரி | .. | 6.54 | 10.14 | 3.60 |
| பெப்ரவரி | .. | 6.45 | 11.90 | 5.45 |
| மார்ச் | .. | 6.52 | 13.85 | 7.33 |
| ஏப்ரல் | .. | 6.63 | 15.89 | 9.26 |
| மே | .. | 6.80 | 15.45 | 8.65 |
| ஜூன் | .. | 6.92 | 14.68 | 7.66 |
| ஜூலை | .. | 7.09 | 14.23 | 7.14 |
| ஆகஸ்ட் | .. | 7.34 | 13.86 | 6.52 |

ஆகஸ்ட் மாத இறுதிவரை கிடைத்த பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளின் பயிர் செய்கை எண்கள் தேயிலை உற்பத்தியில் 1976 ஐ விட 1977 அதிகரிப்பு 8 கோடியே 57 லட்சம் ஆக இருக்கின்றது. அதிக அளவிலான அதிகரிப்பு இந்தியாவிலேயே ஏற்பட்டுள்ளது. இவ்வெட்டு மாத காலத்தில் இந்தியாவின் உற்பத்தி 1976 ல் 30.4 கோடி கிலே கிராம்களாக இருந்தது. 1977 ல் 34.9 கோடி கிலோகிராம்களாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் கென்யாவின் உற்பத்தி 2 கோடி கிலோ கிராம்களால் அதிகரித்துள்ளது. இலங்கையின் உற்பத்தியோ 1.2 கோடி கிலோகிராம்களால் அதிகரித்துள்ளது. எனினும் விகிதாசார ரீதியில் பார்க்கும்போது கென்யாவே முதலிடம் பெறுகின்றது. கென்யாவின் அதிகரிப்பு 75 சதவீதமும், இந்தியாவின் அதிகரிப்பு 15 சதவீதமும், இலங்கையினது 10 சதவீதமுமாகும். 1977ன் உற்பத்திக் கணிப்பீடுகள், இவ்வருடத்தின் மொத்த அதிகரிப்பு 1976 னதிலும் பார்க்க 10 கோடி கிலோகிராம்களுக்கு அதிகமாக இருக்குமெனச் சுட்டிக் காட்டுகின்ணன.

### பாகிஸ்தானின் தேயிலைச் சந்தை

இவ்வருடத்தின் ஆரம்ப மாதங்களில் பாகிஸ்தானின் தேயிலைச் சந்தைகளில் பெரும் பாகத்தை இந்தியாவும், வங்காள தேசமும் மீண்டும் பெற்றன. இதன் விளைவாக சென்ற வருடம் இதே காலப் பகுதியில் பாகிஸ்தானின் இறக்குமதியில் 60 சதவீதத்தைப் பெற்றிருந்த இலங்கை, இவ்வருடத்தில் ஜூன் மாதம் வரை 42 சதவீதத்தையே பெற்றது. சென்ற வருடம் முதல் 6 மாத காலங்களில் பாகிஸ்தான் இறக்குமதியில் 2 சதவீதமே பெற்றிருந்த வங்காள தேசம், இவ்வருடத்தின் அதே காலப்பகுதியில் 16 சதவீதத்தைப் பெற்றுக் கொண்டது. அதே வேளையில் பாகிஸ்தானின் சந்தைக்குள் நுழையாதிருந்த இந்தியா இவ்வருடத்தில் வர்த்தகத்தில் இறங்கி ஜூன் மாதம் வரையில் 14 வீதத்தைப் பெற்றுக் கொண்டது. சென்ற வருடத்தின் முதல் 6 மாதங்களில் 2 வீதத்தைப் பெற்றிருந்த சீன இவ்வருடத்தின் அதே காலப்பகுதியில் 5 வீதமாக அதன் பங்கை அதிகரித்துக் கொண்டது.

(அட்டவணை -26ம் பக்கம் பார்க்க)

### தேங்காய்

#### ஏற்றுமதித் தொகையில் பாரிய வீழ்ச்சி

கடந்த சில வருடங்களில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய் உட்பருப்பு உற்பத்திப் பொருட்கள் தொகையில் இவ்வருடத்திலேயே மிகக் குறைந்த தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது. 1975 ல் (முதல் எட்டு மாதங்களும்) 58 கோடி தேங்காய்களாகவும் 1976 ல் 53 கோடியே 70 லட்சம் தேங்காய்களாகவும் இருந்தது 13 கோடியே 90 லட்சமாக என்றுமில்லாதவாறு தேங்காய் உட்பருப்பு உற்பத்திப் பொருள் ஏற்றுமதி வீழச்சி கண்டுள்ளது.

பிரதான உற்பத்தி நாடுகளின் பயிர் செய்கை எண்கள்

(பத்து இலட்சம் கிலோகிராம்களில்)

| நாடு | | மாதம் | 1976 | 1977 | மொத்தம் | 1976 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | .. | ஆகஸ்ட் | 12.8 | 14.2 | ஆகஸ்ட் வரை | 130.8 | 142.4 |
| வடகிழக்கிந்திய | .. | ஆகஸ்ட் | 62.4* | 64.7 | ஆகஸ்ட் வரை | 236.6* | 260.7 |
| தென் இந்தியா | .. | ஆகஸ்ட் | 6.7* | 8.8 | ஆகஸ்ட் வரை | 67.8* | 88.5 |
| கென்யா | .. | ஜூலை | 3.8 | 5.3 | ஜூலை வரை | 28.9 | 48.9 |
| மலாவி | .. | ஆகஸ்ட் | 0.7 | 0.4 | ஆகஸ்ட் வரை | 21.2 | 23.6 |
| உகண்டா | .. | ஜூன் | 1.3* | 1.1 | ஜூன் வரை | 7.6* | 7.2 |
| தான்சானியா | .. | ஜூலை | 0.6* | 1.1 | ஜூலை வரை | 7.8* | 9.4 |
| இந்தோனேசியா | .. | ஜூன் | 3.3* | 5.0 | ஜூன் வரை | 29.6* | 30.7 |
| பங்களாதேஷ் | .. | ஆகஸ்ட் | 4.6* | 5.5 | ஆகஸ்ட் வரை | 18.4* | 22.2 |
| மொசாம்பிக் | .. | | — | — | ஜூன் வரை | 10.3 | 11.1 |
| | | | | | | 559.0* | 644.7 |

* மதிப்பீடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதித் தொகை வீழ்ச்சியின் பெருமளவு கீழ்க்கண்ட இலங்கையின் தேங்காய் உட்பருப்புற்பத்திப் பொருள் ஏற்றுமதி எண்களில் இருந்து தெளிவாகத் தெரியும். இது தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல், கொப்பரா, தனித் தேங்காய் ஆகியவற்றை உள்ளடக்கும்.

தேங்காய் உட்பருப்பு உற்பத்திப் பொருள் மொத்த ஏற்றுமதிகள்

10 லட்சம் தேங்காய்ச் சம அளவில்

| | |
|---|---|
| 1974 .. .. | 304.32 |
| 1975 .. .. | 579.99 |
| 1976 .. .. | 536.72 |
| 1977 .. .. | 139.48 |

இதன் விளைவாக, இலங்கைத் தெங்குப் பொருள் ஏற்றுமதி வருமானம் இவ்வருடம் ஆகஸ்ட் வரைக்கான கால கட்டத்தில் 1976 ன் இதே காலகட்டத்தின் வருமானத்தோடு ஒப்பிடுகையில் 9 சதவீதத்திற்கும் அதிகமாக வீழச்சியடைந்துள்ளது. ஏற்றுமதி விலைகள் 1976 ம் ஆண்டைவிட கவர்ச்சிகரமானவையாக இல்லாதிருந்திருப்பின் இவ்வீழ்ச்சி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்.

1977ல் ஜனவரி. முதல் ஆகஸ்ட் வரை ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 16 கோடியே 60 லட்சம் ஆகும். கடந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் இருந்ததிலும் பார்க்க இது ஏறத்தாழ ரூபா 2 கோடியே 70 லட்சம் குறைவானதாகும். 1977 ன் ஒவ்வொரு மாதத்தினதும் சராசரி வீழ்ச்சி ரூபா 35 லட்சம் ஆகும். வருமானக் குறைவுக்குப் பிரதான காரணம் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகளின் பாரதூரமான வீழ்ச்சியாகும். கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 3852 மெட்ரிக். தொன்களாக இருந்த தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி இவ்வருடத்தின் அதே காலப் பகுதியில் 2065 மெட். தொன்களாகக் குறைந்தது. இது, வருடத்தின் நடுப்பகுதி அளவில் ஏற்பட்ட தேங்காய் உற்பத்தியின் பாரிய வீழ்ச்சியினாலும் தேங்காய் எண்ணெயின் அதிகரித்த உள்ளூர் நுகர்வினாலும் ஏற்பட்டதொன்றாகும். 1977 ன் முதல் எட்டு மாதங்களில் 6541 மெட்ரிக் தொன்களாக இருந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தி இவ்வருடத்தில் 2624 தொன்களாகக் குறைந்தது. இத்தகைய 150 சதவீத உற்பத்தி வீழ்ச்சியின் தாக்கம் உள்ளூர்ச் சந்தையிலும் பிரதிபலித்தது. 1976 ஜூனில் ரூபா 2,750 ஆக இருந்தவிலை 1977ல் மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூபா 7,048ஆக அதிகரித்தது. எனினும் அடுத்த இரண்டு மாத காலங்களில் விலைகள் வீழ்ச்சியுற்று மெற்றிக் தொன் ஒன்றின் விலை இவ்வருட ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 4261 ஐ அடைந்தது. ஏற்றுமதி விலைகள் 1976 ல் இருந்ததை விடச் சீர்பெறத் தொடங்கின (1976 ஜன-ஆகஸ்ட் காலகட்டத்தில் மெற்றிக் தொன் ஒன்று ரூபா 2,581 ஆக இருந்தது. ஆனல் 1977 ஜனவரி - ஆகஸ்ட் காலகட்டத்தில்மெற்றிக் தொன் ஒன்று ரூபா 4,968 ஆக உயர்ந்திருக்கிறது.) இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தத்தவறியமை நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்.

ஒவ்வொரு மாதத்திலும் ஏற்றுமதிக்காக சராசரி 172 மெற்றிக் தொன் எண்ணெய்யே கிடைத்ததனல் நாட்டின் தெங்குப்பொருள் ஏற்றுமதி வருமானத்துக்கு தேங்காய்த்துருவல் அதிக பங்களிப்பினை இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் அளித்தது. இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் வரைக்கான தெங்குப் பொருள் ஏற்றுமதி வருமானமான ரூ. 26.6 கோடியில் 50 சதவீதம் வரை தேங்காய்த் துருவலில் இருந்தே பெறப்பட்டது. தெங்குப்பொருள் உற்பத்திகளில் பொதுவான வீழ்ச்சிப் போக்கு காணப்பட்டாலும், சர்வதேச விலை உயர்ச்சியானது தேங்காய்த்துருவல் உற்பத்தியினைத் தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்துள்ளது. கடந்த சில மாதங்களாக தேங்காய்த் துருவலின் உற்பத்தி அதிகரித்துக்கொண்டுவந்து 1977 ஆகஸ்டில் வருடத்திற்கே அதி உயர்ந்த நிலையான 3,985 மெற்றிக் தொன்களை எட்டியது. 1976 ஆகஸ்டில் 903 டொலர்களாக இருந்த சர்வதேச தேங்காய்த் துருவல் விலை 1977 ஆகஸ்டில் மெட்ரிக் தொன் விலை 1172 டொலராக உயர்ந்தது. 1977 ஆகஸ்டில் இலங்கைத் தேங்காய்த் துருவலின் கப்பற்றளம் நீங்கு விற்பனை விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு 1050-1100 அமெரிக்க டொலர்களாய் இருந்திருக்கிறது. 1976 ஆகஸ்டிலோ இது 451-471 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இவ்வருடத்தின் மொத்தத் தெங்குப் பொருள் ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 37 சதவீதம் உப - உற்பத்திப் பொருட்கள் மூலமே பெற்றுக்கொள்ளப்பட்டது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 32 சதவீதம் தேங்காய்த் தும்பிலிருந்தும், கயிற்றிலிருந்தும் பெறப்பட்டது. தும்புக் கயிற்றினதும் சராசரி ஏற்றுமதிப் பெறுமதி 1976 ன் முதல் 8 மாதங்களிலும் மெற்றிக் தொன்னொன்று ரூபா 2,149 ல் இருந்து இவ்வருடம் அதே காலகட்டத்தில் மெற்றிக் தொன் ஒன்று ரூபா 2,600 ஆக உயர்ந்துள்ளது. இவ்வருடத்தின் முதல் எட்டு மாதங்களிலும் சிரட்டைக்கரி மூலம் கிடைத்த வருமானம் அநேகமாக இரட்டிப்பாகியுள்ளது. 1976 ஜனவரி-ஆகஸ்டில் 15,492 ஆக இருந்த ஏற்றுமதித் தொகை இவ்வருடத்தின் அதே கால கட்டத்தில் 17,735 மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் 1976 ல் இதே காலகட்டத்தில் மெற்றிக் தொன்னொன்று ரூபா 365 ஆக இருந்த சராசரி ஏற்றுமதிப் பெறுமானம் 1977ல் மெற்றிக் தொன் ஒன்று ரூபா 612 ஆக உயர்ந்துள்ளது.

### பாகிஸ்தானின் தேயிலை இறக்குமதி

ஜனவரி - ஜூன்

| | 1977 தொகை (கிலோ கிராம்களில்) | 1977 வீதம் | 1976 தொகை (கிலோ கிராம்களில்) | 1976 வீதம் |
|---|---|---|---|---|
| இலங்கை .. .. .. | 11,300,102 | 41.7 | 15,353,688 | 60.2 |
| கென்யா .. .. .. | 3,709,296 | 13.7 | 5,322,445 | 20.9 |
| இந்தோனேசியா .. .. .. | 2,368,087 | 8.7 | 3,565,931 | 14.0 |
| வங்காள தேசம் .. .. | 4,334,954 | 16.0 | 500,032 | 2.0 |
| இந்தியா .. .. .. | 3,748,170 | 13.8 | — | — |
| சீன .. .. .. | 1,282,593 | 4.7 | 464,634 | 1.8 |
| ஏனைய ஆபிரிக்க நாடுகள் .. .. | 124,241 | 0.5 | 66,242 | 0.3 |
| ஏனையவை .. .. .. | 227,842 | 0.8 | 212,855 | 0.8 |
| | 27,095,285 | | 25,485,828 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கைத்தொழில் மயமாக்கல் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

— என். என். சச்சிதானந்த்

கிராமப் பிராந்தியங்களில் முன்னேறி வரும் கைத்தொழில்களோடு தொடர்புள்ள பிரச்சினைகள் பல்வேறு கோணங்களிலிருந்து எழுவதுண்டு. அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இது பிரதான அம்சமாக இடம் பெற்றது. சென்னை 'ஹிந்து' வில் திரு. என். என். சச்சிதானந்த் எழுதிய இக் கட்டுரையில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் ஸ்ரீலங்காவுடனும் தொடர்புள்ளனவாகும். கிராமப்புறங்களில் நவீன கைத்தொழில்களைப் பரவலாக்குவதனால் அங்கு நிலவும் பின்தங்கிய நிலைமைகளை அகற்றிவிட முடியாது என அவர் இங்கு வாதிடுகின்றார். அத்தகையதொரு உபாயம் சமூகக் கொந்தளிப்பினையும், பொருளாதாரத் திரிபுகளையும் ஏற்படுத்த வல்லது. உள்ளூர் மூல வளங்களின் அடிப்படையில் உருவானதும், கிராம மக்களின் பயிற்சித் திறன்களுக்கு ஏற்றனவுமான கைத்தொழில்களை அமைப்பதுவே இன்றைய அவசியமாகும்.

இந்தியாவின் தற்காலக் கலந்துரையாடல்களின் முக்கிய அம்சம் கிராம அபிவிருத்தி யாகும். ஒரு அரசியல்வாதி, அல்லது மேலதிகாரி அல்லது சமூக வியலாளர் கிராம அபிவிருத்தி பற்றி அழகிய வார்த்தைகளில் முழக்கமிடுவதையே இது பற்றிப் பேசுவோர் சொல்வர். சகல கருத்தரங்குகளிலும் ஒரு மரியாதைக்காக இது பற்றியும் வாதிக்கப்படும். சகல விதமான ஆய்வுக் கட்டுரைகளும், பொருளாதார ஆராய்ச்சிகளும் கிராம அபிவிருத்தி பற்றிக் குறிப்பிடாது முற்றுப் பெறுவதில்லை. எனவே அண்மையில் பங்களூரில் இந்துஸ்தான் எந்திர உபகரணங்கள் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கிராம கைத்தொழில்களினதும் சிறு கைத்தொழில்களினதும் நவீன மயமாக்கல் குறித்த அகில இந்திய செய்முறைக் கருத்தரங்கின் போது இவ்விடயம் கிளப்பப்பட்டது தவிர்க்க முடியாததொன்றாகும்.

கிராம அபிவிருத்தி கூடியளவுக்கு முக்கியத்துவம் பெறுவதற்கு தகுதியுடைய ஒன்றல்ல என்பது இங்கு பொருளல்ல. மொத்தச் சனத் தொகையில் நான்கில் மூன்று பங்கினர், கிராமங்களில் பின்தங்கிய வாழ்க்கை நிலைகளுடனும், பயங்கரமான வறுமையிலும் உழன்று வாழ்கின்றார்கள். கிராமப் பிராந்தியங்களில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதைக் கருத்திற் கொண்டனவல்லாத வேறெந்த அபிவிருத்தி உபாயங்களாலும் எமக்குப் பயனில்லை.

இந்நோக்கங்களின் மீது ஒற்றுமை காணப்படினும் ஒவ்வொருவரினதும் அணுகுமுறைகள் வேறுபட்டனவாகும். அதிகப்படியான திட்டமிடுவோரும் சமூக விஞ்ஞானிகளும் அரசியல் வாதிகளும் இருப்பது போலவே பல பல உபாயங்களும் உள்ளன. எனினும் இந்துஸ்தானி எந்திர கருவி நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. கிராம அபிவிருத்திக்காகச் செய்யக் கூடியவையன்றி செய்யக் கூடாதவை எவையெவை என்பதைப் பலர் முன்வைத்தார்கள். எம் திட்டவறிஞர் இவற்றில் சிலதையேனும் கருத்திற்கொண்டு நடந்திருப்பார்களானால் அவர்களின் இலட்சியங்களில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு வெற்றி பெற்றிருப்பார்கள்.

## பொதுத் தப்பபிப்பிராயங்கள்

நகரப்புறங்களில் வாழும் எமது திட்டமிடுவோர் மத்தியில் புகுந்து அங்கீகாரம் பெற்றுள்ள பொதுவான சில தப்பிப்பிராயங்களில் ஒன்று, கிராமப்புறங்களுக்கு நவீன கைத்தொழில்களைப் பரப்புவதன் மூலம் அக் கிராமங்களின் பின்தங்கிய நிலையினையும் அப்பின்தங்கிய தன்மையின் விளைவான வறுமையினையும் களைந்து விடலாம் என்ற கொள்கையாகும். கிராமாபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்துள்ள ஜனதாக்கட்சியின் சில சிறப்பான பிரபல பேச்சாளர்கள் கூட இவ்வுபாயத்தினை தீவிரமாக ஆதரித்து வருகின்றார்கள்.

பின்தங்கிய பிராந்தியங்களில் நவீன கைத்தொழில்களை நிறுவுவதனால் ஏற்படும் தாக்கங்களை யதார்த்த ரீதியில் மதிப்பீடு செய்யும் இந்திய அபிவிருத்தி ஆணையாளர் திரு. டி. சி. பூரி, நாட்டுப்புறங்களில் பணவீக்கம் ஏற்படுவதற்கும், புதிய அருவருக்கத்தக்க சமூகக் கொந்தளிப்புகள் உருவாவதற்கும் காரணமாகவிருந்த இவ்வுபாயம் அப் பிராந்தியங்களைப் பின்தங்கிய நிலையிலிருந்தும் விடுவிக்கத் தவறியுள்ளது எனக் கூறி வன்மையாக்க கண்டித்துள்ளார். உதாரணமாக பீகார் மாநிலத்தை எடுத்துக் காட்டியுள்ள அவர், பீஹாரின் மிகப் பின்தங்கிய பகுதிகளில் மத்திய அரசு பெருமளவிலான முதலீடுகளுடன் பாரிய கைத்தொழில்களை நிறுவிற்றென்றும் அதன் காரணமாக எந்தவித சுபீட்சமோ விருத்தியோ அங்கு இடம் பெறவில்லையென்றும் சுட்டிக் காட்டுவதுடன் அங்கு மேலும் வறுமையும் துயரமும் மேலோங்கியுள்ளது என்கிறார்.

செயற்றிறன் அற்றதும், போதியளவில் தாக்கங்களை ஏற்படுத்துவதில் சக்தியற்றதுமான இக் கிராம அபிவிருத்திக் கோட்பாட்டின் தோல்வி குறித்து மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் ஒரிஸ்ஸாவைப் பற்றி ஆராய வேண்டும். இம் மாநிலத்தில் உள்ள ஓர் ஒதுக்குப்புறமான பூர்வ குடிப் பிராந்தியமொன்றில் இந்திய அரசு இராட்சத உருக்காலை ஒன்று நிறுவிற்று, அங்குள்ள பூர்வகுடியினர் மீது அதன் தாக்கம் வெகு பாரதூரமாக இருந்தது. அவர்களது மென்மையானதும் சுதந்திரமானதுமான வாழ்க்கை முறை நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. சம்பளங்கள், கூலிப் படிகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் நிறைவாக உட்செலுத்தப்பட்ட பணம் அவர்களால் ஈடுகொடுக்க முடியாதளவிற்கு அவர்களது வாழ்க்கைச் செலவினை உயர்த்திற்று. சில பூர்வ குடி ஆண்களுக்கு மட்டும் பொறித்தொகுதிகளில் வேலை வாய்ப்புக் கிடைத்த போதிலும் பெரும்பான்மையினர் அவர்களது பயிற்சித் திறன் பொருத்தமற்றதாக இருந்ததனால் பயிற்சித் திறனற்ற ஒப்பந்தக் கூலிகளாக அமர்த்தப்பட்டுச் சுரண்டப்பட்டனர். பூர்வ குடிக் கன்னியர் ஒழுக்கக்கேட்டிற்கு உள்ளாக்கப்பட்டு விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். இற்றைவரை ரூர்க்கலா உருக்குத் தொழிற்சாலை ஒரு பிராந்தியத்தில் அபிவிருத்தித் திட்டமொன்றை ஏற்படுத்திவிட்டு அப்பிராந்தியத்தைப் பழைய புராதன வறுமைப் பிராந்தியமாக வைத்துள்ளது. அத் தொழிற்சாலையின் உள்ளீடுகளோ, உற்பத்திகளோ அப் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் எந்த முக்கியத்துவத்தையும் பெறவில்லை.

கிராமப் பிராந்தியங்களில் முன்யோசனை இன்றி நவீன கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களை நிறுவுவதானது, சூழ உள்ள பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு எவ்விதக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினையும் அளிக்க அது தவறுவதோடு மட்டுமன்றி மூலப் பொருட்களுக்கும் உற்பத்திப் பொருட்களுக்குமான சந்தைகள் அவ்விடத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ள நகரங்களில் இருப்பதனுல் பெருமளவிலான திட்ட நிறுவனச் செலவுகளுக்கும் உற்பத்திச் செலவுகளுக்கும் இட்டுச் செல்கின்றது. முற்றுக இல்லையென்றில்லாமல் அநேகமாக உட்பிரதேசத்தில் நிறுவப்பட்ட கைத்தொழிலுக்கு உதவுவதற்கு விருத்தி செய்யப்படும் சமூகப் பொது முதலீடுகள் மட்டுமே இத்தகைய அபிவிருத்தி உபாயமொன்றின் ஆக்கபூர்வமான பெறுபேறுகும்.

எனவே கைத்தொழில்களை பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பரவலாக்குவதற்கு முன்னர் இப்பிராந்தியத்தில் ஏற்படக்கூடிய சமூக பொருளாதாரத் தாக்கங்களைக் கருத்திற் கொண்டு நடைமுறைகளை உருவாக்கிக் கொள்ளுதல் பொருத்தமானதாயிருக்கும். திரு. பூரி சரியாகவே ஆலோசனை கூறியதுபோல் நிறுவப்படும் கைத்தொழில்கள் குறைந்தளவில் சமூக, சூழியல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலும், உள்ளூர்ப் பிராந்தியங்களில் கிடைக்கக்கூடிய மூலவளங்களையும் உள்ளூர் மனித வளங்களையும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் பொருத்தமான இடங்களில் நிறுவப்படவேண்டும். கைத்தொழில்களை ஓரிடப்படுத்தும் சமூக, பொருளாதார, தொழில் நுட்பக் காரணிகளும் இவையே என்பதை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட அரசியல், சட்ட, ஒழுங்கு, விவசாய, வருமான ஆட்சி அதிகார முகாமையோடு சமனுக பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தீர்மானம் எடுக்கும் முறையொன்றும் நிறுவப்பட வேண்டும் என்று திரு. பூரி சுட்டிக்காட்டினுர்.

கிராமாந்தரக் கைத்தொழில் மயப்படுத்தலின் மிகவும் முரண்பாடான அம்சங்கள் கிராமியக் கைவினைஞர்களின் வாழ்க்கை முறையில் ஏற்படக்கூடிய இடப் பெயர்வுகளாகும். நவீன கைத்தொழில் உருவில் நகர வழிப்பட்ட தொழில் நுட்பங்களைக் கிராமியங்களில் புகுத்துவதில் உள்ள பேரபாயம் முதலீட்டு ஆற்றல் உள்ள சுயாதீனக் கிராமக் கைத்தொழில் வினைஞரை ஊதியம் பெறும் அடிமைகளாகவோ அதற்குக் குறைந்தவர்களாகவோ மாற்றுவதும் கிராமந்தரக் கைவினைஞர் மத்தியில் வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்துவதுமாகும். இது கிராமத்தில் அதிகரித்த உற்பத்தித் திறனுக்கு ஆதரவு தேடுவதும் தேவையற்ற நவீனமயப்படுத்தலைப் புகுத்துவதாகவும் மட்டுமே இருக்கும். தற்போதைய பூர்வீகத் தன்மை வாய்ந்த கிராமாந்தரத் தொழில் நுட்பம் மாற்றப்படாது பாதுகாக்கப்பட வேண்டுமென்பதைத் தீவிர பாரம்பரியவாதிகள் மட்டுமே விரும்புவர். ஆயினும் நவீனமயப்படுத்தலின் உடனடியான தொழில்நுட்ப, பொருளாதார நன்மைகளை மதிப்பீடு செய்கையில் நீண்ட காலச் சமூக விளைவுகளை மறந்துவிடக் கூடாது.

காதி கிராமக் கைத்தொழில்கள் சபையின் பிரதிநிதி ஒருவர் இக் கருத்தரங்கில் குறிப்பிட்டது போல கிராமங்களுக்குள் புகுத்தப்படக்கூடிய அதிசிறந்த தொழில் நுட்பம், கிராமாந்தரக் கைத்தொழில் வினைஞர்களை அவர்களது முதலீட்டுக் குணும்சங்களைப் பேணிப் பாதுகாத்து, அதிக உற்பத்தியில் ஈடுபட வைத்து நேரத்தை மிச்சப்படுத்தி ஆகக் குறைந்த புதிய முதலீட்டினைச் செய்து கொள்ள உதவக்கூடிய வாய்ப்பினைத் தரவல்ல ஒரு தொழில் நுட்பமாகும். இறுதியாக, இத் தொழில் நுட்பம் கிராம மட்டத்திலேயே உதவக்கூடிய அளவுக்கு மிகவும் எளிமையானதாக அமைய வேண்டும், மேலும் இத் தொழில் நுட்பம் மேலதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருப்பின் அதன் இலட்சியத்தை அநேசமாக அடைந்ததாகக் கருதமுடியும்.

இத்தகைய தொழில் நுட்பமொன்றை வழங்குவது உண்மையில் இந்திய ஆராய்ச்சியாளருக்கு மிகப் பெரும் சவாலொன்றுகும். இந்திய விஞ்ஞானக் கழகத்தின் எதிர்காலக் கணிப்பாளர் கலாநிதி ரோஹத்ஜி கருத்தரங்கில் குறிப்பிட்டது போல் அத்தகைய தொழில் நுட்பத்தை புதிதாய் அமைத்தல் அணுசக்தியிலோ விண்கல ஆய்விலோ தொழிலாற்றுவதிலும் பார்க்க அதிக பிரமிப்பூட்டுவதாக இருக்கும். ஏனெனில் இது குறித்து இந்திய விஞ்ஞானிகள் பின்பற்றக்கூடிய முன்னிழ்வுகள் எதுவும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படவில்லை.

உத்தியோகபூர்வமான மானியங்கள் மூலம் கிராமிய கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிக்க முடியுமென்ற ஒரு கொள்கைப் போக்கும் நிலவுகின்றது. ஏனெனில் நவீன நகரப்புறக் கைத்தொழிலின் பாரிய தொகையான உற்பத்திகளோடு இவ்வுற்பத்தி போட்டியிடுவதற்கு இத்தகைய மானியங்கள் அத்தியாவசியமானவை எனக் கூறப்படுகின்றது. இது ஒரு தவறுன கருதுகோள் மட்டுமன்றி கிராமாந்தரக் கைத்தொழில்களில் நிலவும் ஒழுங்கினங்களையும் திறமையின்மையையும் மூடி மறைக்கும் ஒரு செலவாகவும் அமையும். இம் முயற்சி கிராமாந்தரக் கைத்தொழிலை அதன் சொந்த வலுவிலேயே ஆற்றலுடன் இயங்க வைக்கக்கூடிய முயற்சியாய் இருக்க வேண்டும். வசதியாகவும் போதியளவிலும் திறமையாகவும் கிராமங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய சில பொருட்களை, கிராமப்புற உற்பத்திகளாகவே ஒதுக்குவதன் மூலம் இவ்விலட்சியத்தினை இலகுவில் அடையலாம்.

கிராம உற்பத்திப் பொருட்கள் பெற்றுக்கொள்ளும் விலைகளை உயர்த்த வேண்டியது ஒரு முக்கிய பணியாகும். உற்பத்திப் பொருள்களின் தரத்தினை விருத்தி செய்வதன் மூலமும் பரந்த செல்வமிக்க சந்தைகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமும் இந்நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளலாம். உதாரணமாக ஒரு கிராமாந்தரக் குயவன் தனது பாரம்பரிய சக்கர முறையிலிருந்து மாறி வழக்குருளை யமைப்பில் வைத்து மட்பாண்டங்களை வனையக்கூடியதாக இருந்து விசேடமான சூளை முறையும் மெருகிடுதலும் பயிற்றப்பட்டால் அவன் சிறந்த மட்பாண்டங்களை உற்பத்தி செய்யக்கூடியவனுக இருப்பான். மேலும் அவன் வனையும் மட்பாண்டங்கள் பக்கத்துத் தாலுகாவுக்குச் செல்வதற்குப் பதிலாக பெரிய நகரங்களைச் சென்றடைந்தால் அவன் தனது பொருள்களுக்கு வசீகரமான விலைகளைப் பெறலாம். இந்துஸ்தானி எந்திரக் கருவி நிறுவனம் போன்ற பாரிய கைத்தொழிற்றுபனங்கள் கைவினைஞர்க்கு பயிற்சி நிலையங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும், சந்தைப் படுத்தல், சமூகப் பொது முதலீடுகள் போன்றவற்றை உருவாக்கிக் கொடுப்பதன் மூலமும் கிராமியக் கைத்தொழில்களை விருத்தியாக்குவதில் தம் பங்களிப்பினைச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நகர அமைப்பு — தெளிவான கொள்கையொன்றின் அவசியம்

— கே. லொசானு குணரத்ன

ஸ்ரீலங்காவின் மொத்தச் சனத்தொகையில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றரெனவும் நாட்டில் வாழும் மக்களில் இவர்கள் மிகவும் வறியவர்கள் என்றும், நாடு, நகரத்திட்டவறிஞரும், கட்டிடக்கலை வல்லுனருமான கே. எல். குணரத்ன இக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அவர்களின் முக்கியமான தொழில் விவசாயமாக இருப்பினும், விவசாயம் செய்யக்கூடிய நிலத்தில் பெரும் பகுதி அபிவிருத்தி செய்யப்படாததாகவே இருக்கின்றது. சுகாதாரம், கல்வி, சமூக நல வசதிகள் போன்றவை கிராமங்களில் குறைவாகக் காணப்படுவதுடன் இவை தேவையானோரைச் சென்றடைவதுமில்லை. ஸ்ரீலங்காவில் இன்று நிலவும் கிராம — நகர்ப்புற உறவுகள் சமனற்றவையாகவே இருக்கின்றன. விவசாயத்தினால் ஏற்படும் நன்மைகள் கூட விவசாயியை விடுத்து நகரவாசியையே சென்றடைகின்றன. மூலவளங்களின் பெருக்கு நகர்ப்புறங்களை நோக்கிச் செல்வதாகவே இருக்கின்றது. கொழும்பை நோக்கிய குடிவரவு விகிதம் குறைவாக இருப்பினும், சிறிய நகரங்களை நோக்கிய குடிப்பெயர்வு உயர்வாகவே காணப்படுகின்றது. எவ்வாறாயினும், இன்னும் பெரும்பான்மை மக்கள் விருத்தியின் அறிகுறிகளே தென்படாத நிலங்களில் தங்கியிருக்கின்றனர்.

தற்போதைய தேசிய நகர அமைப்பு காலனித்துவத்தின் முகவர்களால் உருவாக்கப்பட்டதொன்றாக இருப்பதனால், அதனையடியொட்டிய குறைவிருத்திப்படி முறையானது அதன் தவிர்க்க முடியாத விளைவொன்றாகும் என்ற மையக்கரு இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. நாம் கட்டியெழுப்ப விழையும் கிராமப்புனர் நிர்மாணத்துக்கெதிராகவிருக்கும் மிகப் பெரிய தடைக்கல்லும் இதுவாகும்.

எம் தேசிய நகர அமைப்பு முறை மாற்றப்பட்டாலேயொழிய அபிவிருத்தி இலட்சியங்களில் நாம் வெற்றிபெற முடியாது என அவர் வாதிடுகின்றார். அவ்வாறு செய்வதற்கு சிறப்பான முறையில் உருவாக்கப்பட்ட நகரக் கொள்கையொன்று அவசியமாகும். மாவட்ட நகர ரீதியில் சிந்திக்கும் திட்டவறிஞர்களாலன்றி, தேசிய ரீதியில் பணிபுரியும் திட்டமிடுவோரினால் மட்டுமே அத்தகைய கொள்கையொன்றை உருவாக்க முடியும்.

நகரங்கள் பல வழிகளில் தோன்றியுள்ளன. மானிய முறைச் சமுதாயத்தில் பிரபுக்கள் மேலாதிக்கம் செலுத்திய பகுதிகளைச் சுற்றி நகரங்கள் வளர்ச்சியடைந்தன. இராணுவத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு இப்பிரதேசங்கள் மதில்களால் சூழப்பட்டிருந்தன. மேலும், நியாயமற்ற வரி அறவீடுகளுக்கும், மானிய முறை அடக்கு முறைகளுக்குமெதிராகக் காலத்துக்குக்காலம் விவசாயிகள் கிளர்ந்தெழுந்தனர்.

மானியச் சமூகப் பிரதானிகள், சூழவுள்ள கிராமங்களில் தம் ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ள ஒவ்வொரு நகரத்தையும் பயன்படுத்தி வந்தது போலவே, மன்னர்களும், பேரரசர்களும் ஒன்றுடனொன்று தொடர்பு படுத்தப்பட்ட நகரங்களின் மூலம் பரந்து விரிந்த கிராமப்புறங்களில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டலாயினர். சில ஆட்சிகள் நீதியுடன் நடைபெற்றன; இன்னும் சில அடக்கு முறையையும், சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டன.

மத்திய கால ஐரோப்பாவில் இவ்வாறான பல நகரங்கள் காணப்பட்டதுடன், பிறிதொரு வகையான "சுதந்திரமான" நகரங்களும் உருவாயின. விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் நிலையங்களாக உருவெடுத்த மதில் சூழ்ந்த இந் நகரப்புறங்கள், மானிய அமைப்பிலிருந்த நிலக்கிழார்களின் நுகத்தடியிலிருந்து பறந்தோடிவரும் கிராமவாசிகளுக்கும், தொழில் வினைஞர்களுக்கும் சொர்க்கபுரிகளாக இருந்தன. நிலக்கிழார்களுக்கும், மேலாதிக்கப் பிரபுக்களுக்கு மிடையே தோன்றிய புதிய வர்க்கமொன்று இந்நகர்களில் அடைக்கலம் புகலாயிற்று. இந்நகரங்கள், கிராமங்களில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை தேடிக் கொடுத்தன. ஐரோப்பாவில் மத்தியதரவகுப்பாரினதும், வர்த்தக சமூகத்தினதும் எழுச்சியுடன் மட்டுமன்றி வாணிகத்தினதும் தொழில் பயிலும் கில்டுகளினதும் தோற்றத்துடனும் இந்நகரங்கள் தொடர்புற்றிருக்கின்றன. வர்த்தக நோக்கங்களுக்காகவும், பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும், ஒன்றுடனொன்று இணைக்கப்பட்ட சுதந்திர நகரங்களாக இவை அமையலாயின. ஒரே காலத்தில் எழுச்சியடையத் தொடங்கிய வர்த்தகத்தினதும், அதையடியொற்றிய முதலாளித்துவத்தினதும் விளைவாக, இராணுவ அரண்களாகவும், அளவிலும் பொருளாதார பலத்திலும் விசாலமானவையாகவும் இந்நகர்கள் வளர்ச்சியடையத் தொடங்கின.

புவியியல் வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து கிராமங்களுக்கும் நகரங்களுக்குமான சமூக, பொருளாதார, பௌதீகத் தொடர்புகள், நிலையாக விவசாயம் செய்யப்பட்டு வந்த பிரதேசங்களிலேயே இருந்து வந்துள்ளன. நாமறிந்த வரையில் நாகரிகத்தின் தோற்றத்திலிருந்தே கிராமங்களும், நகரங்களும் ஒன்றுடனொன்று ஒத்துழைத்து வந்துள்ளன.

### பிராந்திய நகர அமைப்புக்களின் வளர்ச்சி

கிராம, நகர்க் குடியேற்றங்களின் ஆரம்ப வளர்ச்சியின் போது இவற்றுக்கிடையேயான தொடர்புகள் தரை மார்க்கத்தில் ஒற்றையடிப்பாதைகள் மூலமாகவும், வண்டில் பாதைகள் மூலமாகவும் ஏற்படுவதுடன், இயற்கையமைப்பு பொருத்தமாக விருப்பின் நீர்ப் போக்குவரத்து மூலமாகவும் ஏற்படுகின்றன.

வலைப்பின்னல் முறையிலான போக்குவரத்து வசதிகளைத் தம் மகத்தே கொண்ட நகரங்களானவை, ஏனைய நகரங்களினதும் மக்களினதும் சேவை மையங்களாக உருவெடுக்கின்றன. உதாரணமாக ஒவ்வொரு சிறிய நகரிலும் பெரிய வைத்தியசாலையொன்றை அமைப்பது வீண் செலவை ஏற்படுத்துவதாக இருக்கும். குறிப்பிட்ட பிரதேசத்தில் வைத்தியசாலைக்குப் போதியளவு நோயாளிகள் இருக்க மாட்டார்கள். வைத்தியசாலையில் இருக்கும் பல கட்டில்கள் வெறுமையாக இருப்பதுடன். அங்கு பணிபுரியும் வைத்தியர்களதும், நிபுணர்களதும் திறமைகள் வீண்டிக்கப்படும் இவ்வாறான இடமொன்றுக்கு முதலுதவி வசதிகளைக்கொண்ட சிறிய மருந்தகமொன்று போதுமானது. பல சிறு நகர்களுக்கு மத்தியிலமைந்திருக்கும் பெரிய நகர் மையமொன்றில் அமைந்திருக்கும் வைத்தியசாலையொன்றினால் கூடிய அளவில் பயனடையலாம். அவ்வாறானதொரு மையம் பரந்த நிலப்பரப்பில் சிதறுண்டு வாழும் மக்கள் தொகையினருக்குத் தேவையான பொருட்களை வழங்கும்.

இவ்வாறான மாநகரங்கள், நகரங்கள், கிராமப்புறங்கள் பற்றியும், அவற்றுக் கிடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு பற்றியும், தங்கியிருத்தல் பற்றியும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப ஆய்வுகளை வோல்டர் கிரிஸ்டோல்லர் மேற்கொண்டதுடன் அவரைத் தொடர்ந்து லோஸ்ச் போன்றோர் ஆய்வுகள் செய்தனர். இதன் விளைவாக எழுச்சியடைந்த 'நடுமையக் கோட்பாடனது' தற்கால நிலப் பரப்புத் திட்டமிடல் விஞ்ஞான வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக இருக்கின்றது.

### காலனித்துவமும் மூன்றாம் உலக நகரங்களும்

மூன்றாம் உலகமென்றும்' குறைவிருத்தி நாடுகளென்றும் வளர்முக நாடுகளென்றும் அழைக்கப்படும் சகல நாடுகளும் விதிவிலக்கின்றி காலனியாதிக்கப் பேரரசுகளால் அடிமைப்படுத்தப்பட்டிருந்தன. காலனித்துவத்துக்கும், குறைவிருத்திக்குமிடையே ஒரு தற்செயலான தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. அன்ட்ரே குந்தர் பிரான்க் தன் எழுத்துக்களில் 'குறைவிருத்தி' என்ற சொல்லை 'விருத்தியின்மை' என்ற சொல்லிலிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டி இருக்கின்றார். காலனித்துவத்தின் சக்திகளே குறைவிருத்தி நிலைமைகளை ஏற்படுத்தின என்பதை ஏற்றுக் கொள்ளும் ஒருவர், பிரான்கின் சகல கருத்துக்களுடனும் ஒத்துபோக வேண்டுமெனபதில்லை. இத்தற்காலிகத் தொடர்பானது ஆசியாவில் மட்டுமன்றி, ஆபிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் காணப்படுகின்றது.

மூன்றாம் உலகின் பல பிரதான நகரங்கள் பண்பாட்டு, புவியியல் ரீதியில் வேறுபட்ட பல பிராந்தியங்களில் அமைந்திருந்த போதிலும், பொதுவான பௌதீக, சமூக, பொருளாதார அம்சங்களைத் தம்மகத்தே கொண்டனவாக இருக்கின்றன. உதாரணமாக இந்நகரங்கள் யாவும் துறைமுக நகர்களாக இருப்பதுடன், காலனியாதிக்கம் நிலவிய காலத்தில் இராணுவ, கடற்படை அரண்களாகவும் விளங்கி வந்துள்ளன. மறைந்துபோன பேரசுகளின் வர்ந்தக கேந்திர நிலையங்களாகவும், ஐரோப்பியரினதும் சுதேசிகளினதும் கலாச்சார இணைப்பின் புகலிடங்களாகவும் இந்நகர்கள் இருந்து வந்துள்ளன. ஆக்ரா, ரியோடி ஜெனீரா, கொழும்பு போன்ற நகரங்களை சிறப்பான மூன்று உதாரணங்களாகக் காட்டலாம்.

இந்நாடுகளில் காணப்பட்ட பாரம்பரிய சமூக, பொருளாதார ஒழுங்குகள், கடல் கடந்து தம் ஆதிக்கத்தினை விஸ்தரித்துக் கொண்ட ஐரோப்பிய வல்லரசுகளினால் ஒடுக்கப்பட்டு புதிய முறையிலான ஒழுங்குகள் உருவாக்கப்படலாயின. பாரம்பரிய ஒழுங்கு முறைகள் பூரணமாக ஒழிக்கப்படவில்லையாயினும் அவை புறக்கணிக்கப்பட்டதன் மூலம் தேய்ந்து மறையலாயின. அடிப்படைத் தேவைகளில் சுய தேவைப் பூர்த்தியடைவதை இலக்காகக் கொண்ட பாரம்பரிய பொருளாதார அமைப்பை அடியொற்றிய தொழில் முறைகள் மாற்றமடைந்து, வெளிநாட்டுத் துறைமுகங்களினாலும், நகரங்களினாலும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகத்தை மையமாகக்கொண்ட பொருளாதார அமைப்பு உருவாயிற்று. பின்தங்கிய ''மூடப்பட்ட'' பொருளாதாரமொன்றிலிருந்து நவீனமான ''திறந்த'' பொருளாதாரமாக ஏற்பட்ட மாற்றமொன்றாக இதனைப் பல மேற்கத்திய பொருளியலாளர்கள் கருதுகின்றனர். தாதுப் பொருட்கள், பெருந்தோட்ட உற்பத்திகள், மேற்குலகில் பெறுமதி வாய்ந்தவையாக விருந்த ஏனைய பல பொருட்கள் போன்றவற்றைப் பலவந்தமாகப் பிடுங்கி எடுத்து மலிவு விலைகளில் ஐரோப்பாவுக்குக் கப்பலேற்றிய ஒரு சுரண்டல் நடவடிக்கையாகவே மூன்றாம் உலகம் இதனைக் கருதுகின்றது.

### இலங்கையின் தற்போதைய தேசிய நகர அமைப்பின் வளர்ச்சி

#### போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலங்கள்

போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னரேயே கொழும்புத் துறைமுகம் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்றைய புறக்கோட்டைப் பகுதியில் அப்போது சில குடியேற்றங்கள் இருந்த போதிலும், குறிப்பிடத்தக்களவு நகரமொன்று இருக்கவில்லை. கோட்டேயில் அமைந்திருந்த அரச தலைநகரே சமீபத்திலிருந்த நகராகும். இன்றைய கொழும்பு நகரம், 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயரினால் துறைமுகத்துக்குச் சமீபத்தில் உருவாக்கப்பட்ட கோட்டையாகும். இராணுவ, கப்பற்றளமாகப் பாவிப்பதற்கும், வாசனைத் திரவியங்களின் வர்த்தகத்தை இலகுபடுத்தவுமே போர்த்துக்கேயர் இந்நகரை உருவாக்கினர்.

தம் வருகையின் ஐம்பதாண்டுகளின் பின்னர் கோட்டை இராச்சியத்தின் பெரும்பகுதியில் வரி அறவிடும் உரிமையையும், ஆட்சியதிகாரத்தையும் போர்த்துக்கேயர் பெற்றுக்கொண்டனர். அரசனையும், பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தும் வாய்ப்பினை அவர்கள் தம் வசப்படுத்திக் கொண்டனர். தீவின் ஏனைய கரையோரப் பகுதிகளுக்கெதிராகக் கொழும்பிலிருந்து இராணுவ, கடற்படைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சிறிது காலத்தில் கோட்டை இராச்சியத்தைப் போலவே வட பகுதி இராச்சியமும் வீழ்ச்சியுற்றது.

போர்த்துக்கேயரினால் நிறுவப்பட்ட பாதைகளும் ஏனைய பொது நல வசதிகளும் இலங்கையரைக் கருத்திற்கொண்டு செய்யப்பட்டவையல்ல. வாசனைத்திரவிய வர்த்தகத்தை நிர்வகித்தல், பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்துச் செய்தல் போன்ற நோக்கங்களுக்காகவே இவை ஏற்படுத்தப்பட்டன. மேலும் இராணுவ நோக்கங்கள் கருதியும் பாதைகள் நிறுவப்பட்டன. இவ்வர்த்தகத்தின் அடிப்படையில் பெருமளவு நிலம் பயிரிடப்பட்டதுடன், பாதைகளினாலும் ஏனைய சமூகப் பொது முதலீடுகளினாலும் இந்நிலங்கள் நன்மையடைந்தன. கொழும்புக்கும் போர்த்துக்கல்லுக்குமிடையிலான வெளி வர்த்தகத்தில் தங்கியிருக்க வேண்டி நேரிட்டதால் ஏனைய நிலங்கள் புறக்கணிக்கப்பட்டன. எனவே கொழும்பும் இலங்கையின் ஏனைய கரையோரப் பிராந்திய நகரங்களும் கடல் வழிமூலம் தொடர்பு படுத்தப்பட்டு அடுத்து வந்த 150 வருட காலத்தில் லிஸ்பனுக்கு அடிமைப்பட்டிருந்தன.

17 ம் நூற்றாண்டின் மத்தியில் போர்த்துக்கேயரின் இடத்தினை டச்சுக்காரர் பிடித்துக் கொண்டனர். அவர்கள் போர்த்துக்கேயரால் நிறுவப்பட்ட அரண்களை மேலும் பலப்படுத்தியதுடன் வர்த்தக, இராணுவ நோக்கங்கள் கருதி மேலும் சமூகப் பொது முதலீடுகளைச் செய்யலாயினர். பெருந்தோட்ட உற்பத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைக் கொழும்புக்குக் கொண்டு வருதற் பொருட்டு அமைக்கப்பட்ட கால்வாய்ப் போக்குவரத்துமுறை குறிப்பிடக் கூடிய தொன்றாகும். அடுத்து வந்த 133 வருடங்களில் ஒல்லாந்துடனான போக்குவரத்து நிலவியது.

**பிரித்தானியர் காலம்**

18 ம் நூற்றாண்டின் இறுதியில் டச்சுக்காரரைத் துரத்திவிட்டு பிரிட்டிஷார் அவர்களது இடத்தினைப் பிடித்தனர். 1815 ல் தீவின் சகல பாகங்களிலும் அவர்களின் ஆதிக்கம் வலுப்பெறலாயிற்று.

இராணுவ, வர்த்தக, நிர்வாக கேந்திரஸ்தானமாக கொழும்பு அமைந்ததுடன் தேசிய நகர அமைப்பொன்று உருவாகத் தொடங்கியது. தீவின் வடமத்திய, கிழக்குப் பிரதேசங்களில் இருந்துவந்த பாரம்பரிய நீர்ப்பாசன முறைகளும், அவற்றையடியொற்றிய குடியிருப்புக்களும் நகர்ப்புறங்களும் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே அழியத் தொடங்கியிருந்தன. தொடர்ந்த இராணுவத் தாக்குதல்களினாலும், புறக்கணிப்பினாலும் நீர்ப்பாசனத் திட்டங்கள் தூர்ந்து போகலாயின. உலர் வலயத்தில் ஏறத்தாழ 20 நூற்றாண்டுகள் கைக்கொள்ளப்பட்டு வந்த நிலையான பயிர்ச்செய்கை யானது சாத்தியமற்றதாகப் போய்விட்டது. நீர்த் தேக்கங்கள் பழுது பார்க்கப்படாததுடன் மலேரியாக் காய்ச்சலும் பரவத் தொடங்கியது. ஈர வலய உயர் நிலங்களில் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானியருக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் வளர்ச்சியடையத் தொடங்கியவுடன், சனத்தொகையினரில் பெரும் பகுதியினர் மத்திய, தென் மேற்குப் பகுதிகளை நோக்கி நகரத் தொடங்கினர்.

பிரித்தானியரின் வர்த்தக நலன்களைப் பேண இயலாது போனதால் டச்சுக்காரரின் கால்வாய்ப் போக்குவரத்து முறை புறக்கணிக்கப்பட்டது. முழு நாடும் பிரித்தானியரின் கொடியின் கீழ் வந்ததும் பெருந்தோட்டப் பகுதிகளுக்குப் பாதைகள் நிறுவப்பட்டதுடன், முன்னிருந்த பாதைகள் திருத்தியமைக்கப்பட்டன. வர்த்தக, நிர்வாக வசதிகள் கருதி கொழும்பிலும் ஏனைய எட்டு மாகாணத் தலைநகரங்களிலும் பாதைகள், புகைவண்டிப் பாதைகள், தொலைபேசித் தந்திப் போக்குவரத்துக்கள் போன்றவை உருவாக்கப்பட்டன. பாரிய முதலீடுகளும், பராமரிப்புச் செலவுகளும் வர்த்தகத்திலிருந்து பெறப்பட்ட பெருந் தொகையான இலாபத்திலிருந்து கிடைத்தன.

சிறப்பு நோக்கங்கள் கருதி கொழும்பு ஏனைய எட்டு மாகாணத் தலைநகரங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதுவே இன்றைய தேசிய நகர அமைப்பின் அடிப்படை அம்சமாகும். இலங்கை மக்களில் பெரும்பான்மையினரின் நலன் கருதி இம் முறை உருவாக்கப்படவில்லை. மாறாக தொடர்ந்த வந்த ஐந்து நூற்றாண்டுகளில் ஆட்சி செலுத்திய மூன்று காலனியாதிக்கப் பேரரசுகளும் நாட்டின் சாரத்தை உறிஞ்சி எடுப்பதற்காக நிறுவப்பட்ட சமூகப் பொது முதலீடுகளாகவே இவை இருக்கின்றன. சிறியளவிலிருந்து விசாலித்து வளர்ந்து வரும் சிறுபான்மையினர் இவற்றினால் நன்மையடையலாயினர். இலாபங்களில் பெரும்பகுதி பிரித்தானியருக்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட நகர்சார்ந்த மேட்டுக் குடியினருக்கும் சென்றடைந்தன. ஆயினும் இவற்றின் இறுதி இலக்கு இலண்டன் மாநகரமாகவே இருந்தது.

**அபிவிருத்தி உபாயமும் தேசிய நகரக் கொள்கையும்**

அபிவிருத்தித் திட்டவறிஞர்களில் பல கோட்பாடுகளைச் சார்ந்து நிற்போர் இருக்கின்றனர். சிலர் அபிவிருத்தியில் கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற கருத்துடையோராவர். வேறும் சிலர் இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தொன்றை வலியுறுத்துகின்றனர். தேசிய அபிவிருத்தி முயற்சியில் பிரதான இடம் வகிக்க வேண்டியது விவசாயமா அல்லது கைத்தொழிலா என்ற பிரச்சினையின் அடிப்படையிலேயே இக் கருத்து வேறுபாடுகள் உருவெடுக்கின்றன. கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் வழங்குவோர் எடுத்துக் காட்டும் இரண்டு முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:

1. கிராமங்களில் அபரிமிதமாகக் காணப்படும் தொழிலாளர்களை விவசாயத்துக்கு ஊறுவிளைவிக்காதவாறு நகர்ப்புறங்களிலிருக்கும் கைத்தொழில்களுக்கு மாற்றி பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தலாம்.
2. ஆசியாவில் வாழும் உழவன் சில பாரம்பரிய பண்பாட்டுத் தடைகள் காரணமாக பொருளாதார வளர்ச்சி அபிலாசைக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றான். இதனால் விவசாயத்தை நவீனமயமாக்குவதில் ஈடுபடுத்தப்படும் பாரிய அளவிலான மூலதனத்துக்கேற்ற பலன்களைப் பெற முடியாமலிருக்கின்றது. நகரக் கைத்தொழில்களில் முடக்கப்படும். மூலதனம் போதிய இலாபங்களைப் பெற்றுத் தருவதுடன் தேசிய அபிவிருத்தியைத் தூண்டக் கூடியதாகவுமிருக்கும்.

புதிய கோட்பாட்டாளர்கள் இவ்விரு வாதங்களையும் புறக்கணிக்கின்றனர். கிராமப்புறங்களிலிருந்து நகரப்புறங்களை நோக்கித் தொழிலாளர் குடிப்பெயர்வு செய்வதை எவ்விதத்திலும் ஆதரிக்க முடியாதென்றும், நன்றாக உழைக்கக் கூடிய இளவயதினர் இவ்வாறு செல்வதனால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்படுமென்றும் அவர்கள் கருதுகின்றனர். விவசாயத்துறையின் முழு உற்பத்தி இயலளவு உணரப்படாதிருப்பதனால், விவசாய உற்பத்தி குறையாதிருந்தாலும் அது தீங்கற்ற ஒரு போக்கு எனக் கருத இயலாது. பண்பாட்டு ரீதியான தடைகளினால் விவசாயிகளின் ஊக்கம் குன்றியிருக்கின்றது என்ற வாதத்தையும் அவர்கள் மறுக்கின்றனர். விவசாயிகள் பொருளாதார வளர்ச்சி பற்றிய அபிலாஷைகளுக்குத் தடையாகவிருக்கின்றனர் எனக் கூறுவது ஒரு பொது முடிவோ, மேற்கொள்ளப்பட்ட வெளிக் கள ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட ஒரு தீர்மானமோ அல்ல. எனவே, போதிய முதலீட்டு வசதிகள் இருக்குமிடத்து விவசாய அபிவிருத்தி சாத்தியமானதென்றும், தேசிய முயற்சிகளில் கிராம அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும் இப் புதுக் கோட்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**எமது தேசிய அபிவிருத்தி உபாயங்கள்**

விசேஷ காரணங்களினால் ஒன்று சாத்தியமற்றது எனக் காணப்படும் நாடுகள் தவிர மற்ற சகல வளர்முக நாடுகளும் விவசாய அபிவிருத்தியையும், கைத்தொழில் அபிவிருத்தியையும் ஏற்படுத்த விழைகின்றன. எவ்வாறிருப்பினும், ஒரு வளர்முக நாட்டுக்குப் பொருத்தமான அபிவிருத்தி உபாயம் மற்றொன்றுக்குப் பொருத்தமற்றதாக விருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1960** க்களின் இறுதியிலிருந்து, தொடர்ந்து எம் நாட்டை அன்னியச் செலாவணி நெருக்கடி சென்மதி நிலுவைக் குறை போன்ற சர்வதேசப் பொருளாதார நடவடிக்கைகள் பாதித்துவத்துள்ளமையால், அவற்றிலிருந்து மீட்சி பெறும் நோக்கிலேயே எம் பொருளாதார அபிவிருத்தி உபாயங்கள் உருவெடுத்தன. இறக்குமதிப் பொருட்களுக்கான பிரதியீடுகள், பாரம்பரிய மற்ற ஏற்றுமதிகள் என்பன பிரதான உபாயங்களாகும்.

இறக்குமதிப் பிரதியீட்டுத் திட்டத்தின் கீழ், **1960** களில் புதிய கைத்தொழில்கள் உருவாவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. உள் நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்துப வையாக இவை அமையவேண்டியிருந்தன. எவ்வாறிருப்பினும் விவசாயத் துறையில் பெருமளவிலான உற்பத்தியைப் பெறுவதில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. இவ்வுற்பத்தி அதிகரிப்பானது 3 வழிகளில் செய்யப்பட வேண்டியிருந்தது. அவையாவன:

(அ) ஏற்கனவே 'பயிர் செய்யப்படும் நிலங்களில் விளைச்சலை அதிகரித்தல்.

(ஆ) ஈர வலயத்தில் வாழும் மக்களை உலர் வலயத்துக்குக் குடிப் பெயர்வு செய்து நீர்ப்பாசனத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொண்டு புது நிலங்களில் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தல்.

(இ) 'காலனித்துவ' பெருந்தோட்டப் பகுதிகளில் பயிர்களைப் பன்முகப்படுத்தல்.

ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து வருமானப் பங்கீடு, நிலச் சீர்திருத்தம், இறக்குமதிப் பிரதியீடு போன்றவையே பொருளாதார அபிவிருத்திக்கான எமது பிரதான உபாயங்களாக இருக்கின்றன. கைத்தொழில் துறை புறக்கணிக்கப்படாததுடன் விவசாயத் துறையுடன் இணைந்து வளர்ச்சி பெற ஊக்குவிக்கப்பட்டுள்ளது. பாரிய மூலதனச் செலவீடுகள் விவசாயத் துறைக்கே செல்கின்றன.

**தற்போதைய தேசிய நகர அமைப்பும், தேசிய அபிவிருத்தி உபாயங்களும்**

தற்போதைய நகர அமைப்பானது காலனித்துவ எஜமானர்களின் நிர்வாக வசதிகள் கருதியும், பொருளாதார இலட்சியங்கள் கருதியும் உருவாக்கப்பட்ட தொன்று என்பது தெளிவாகும்.

கொழும்பு நகரத்தைக் கேந்திரஸ்தானமாகக் கொண்டு ஈர வலயப் பெருந்தோட்டப் பிரதேசங்களை அண்டிய பல சிறு நகர்களைக் கொண்டதாக இந்த அமைப்பு இருக்கின்றது. கொழும்பிலிருந்து முழு நாட்டையும் ஆட்சி செய்யும் நோக்கிலும் இது அமைக்கப்பட்டது. சுரண்டலையும் மேலாதிக்கத்தையும் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்ட ஓரமைப்பே இதுவாகும். கிராமத்தில் வாழும் விவசாயிகளுக்கு நன்மையளிக்கும் பொருட்டு இது உருவாக்கப்படவில்லை. எனவே, எமது தற்போதைய அபிவிருத்தி உபாயங்களுடன் இது தொடர்புற்றிருத்தல் சாத்தியமாகுமா?

அபிவிருத்தி இலட்சியங்களை வெற்றி கொள்ளும் பொருட்டு எம் தற்போதைய தேசிய நகர அமைப்பினை மாற்றியமைத்தல் இன்றியமையாத தொன்றாகும். பொருத்தமான ஒரு முறையானது ஆரம்பத்தில் கூடிய மூலதனச் செலவுகளை ஏற்படுத்துவதாக இருக்கும். எனினும் எதிர்வரும் வருடங்களில் இம் முதலீடுகளின் அபரிமிதமான இலாபங்களை நாம் அறுவடை செய்ய முடியும்.

அல்லது எமது தற்போதைய நகர அமைப்பில் பொருத்தமான திருத்தங்களைச் செய்து அபிவிருத்தி முயற்சிகளுடன் ஒத்துப்போகக் கூடியதாகச் அதனை மாற்றியமைக்கலாம். இவ்வாறு செய்யும் போது செலவும் குறைவாகவிருக்கும். ஆயினும் இதற்குக் கூடிய திறமையும், ஆற்றலும் அவசியமாகும். மாவட்டங்களில் நிர்வாகத்தினைப் பன்முகப்படுத்த வேண்டுமென்ற சமீபத்திய கருத்தொன்று இச்செயல் முறையின் ஆரம்பமாக இருக்கக் கூடும்.

இதற்கென எடுக்கப்படும் முயற்சிகள் பின்வரும் முறையில் அமையலாம்:

1. தீர்மானங்கள் எடுக்க முன்னர் பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.
2. ஒரு கட்டுக்கோப்பிலான கொள்கைத் தீர்மானங்கள் வேண்டும். இத் தீர்மானங்களை எடுப்பதில் நிபுணர்களின் வழிகாட்டுதலைப் பெறல் அவசியம்.
3. ஒரு குறிப்பிட்ட நகரப் பிராந்தியமொன்றுக்குப் பொருத்தமான கொள்கைகளைத் தேசிய ரீதியில் பிரயோக்கிக்கக் கூடாது.
4. சகல கொள்கைகளும் மக்களின் சமூக, பொருளாதார அபிலாசைகளைப் பிரதிபலிப்பனவாக இருத்தல் வேண்டும்.

(**23**ம் பக்கத் தொடர்ச்சி)

லிசத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெருந்தொகையினரான பெண்கள் தொழிலாளர் படையில் சேர்ந்தனர்.

இன்றை சீனாவில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் தொழிலாளர் படையில் சேர்கின்றனர். இவர்கள் பாடசாலைகளிலிருந்தும் தொழில்நுட்ப, தொழில் கல்லூரிகளிலிருந்தும் பல்கலைக் கழகங்களிலிருந்தும் வருகின்றனர். வளர்ச்சியடையும் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட சேவைகளுக்கிணங்க இவர்களுக்குத் தொழில்கள் வழங்கப்படுகின்றன.

நடுத்தர தொழில்நுட்பக் கல்லூரிகளினதும், பல்கலைக் கழகங்களினதும் பட்டதாரிகள், தொழில்நுட்ப அறிவியல் அல்லது சிறப்புத் தேர்ச்சித் துறைகளில் தொழில்களில் அமர்த்தப்படுவதற்காகத் திட்டமிட்ட முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். நடுத்தர தொழில் கல்வி நிலையங்களின் பட்டதாரிகள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாகின்றனர். பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோர் தம் கல்வியைத் தொடர்வர்; அல்லது கைத்தொழில், மூலதன வாக்கம், கலாச்சாரப் பணிகள், கல்வி, சுகாதார வேலைகள், நீதி அல்லது வர்த்தகம் போன்ற துறைகளில் தொழில்களை நாடிச் செல்வர். ஆயிரக்கணக்கானோர், விவசாயத்துக்குப் பெருமளவில் மனித சக்தி தேவைப்படுவதற்காக மட்டுமன்றி, நீர்ப்பாதுகாப்புத் திட்டங்கள், வன பரிபாலனம், கால்நடை வளர்ப்பு மீன்பிடி, கிராமியக் கைத்தொழில் போன்ற துறைகளில் பணியாற்றுவதற்காகக் கிராமப்புறங்களில் குடியமர்த்தப்படுகின்னர்.

செஞ்சீனாவின் எந்தக் குடிமகனும் இன்று வேலையின்மை பற்றி அஞ்சுவதில்லை. வேலை செய்யக் கூடிய ஒவ்வொருவரும் தத்தமது தொழில்கள் மூலம் வாழ்க்கை நடத்துவதுடன் நாட்டுக்கும் உதவுகின்றனர். ஒரு தொழிற்சாலையோ நிறுவனமோ அதன் கருவிகளை நவீனமயமாக்கும் போது அல்லது புதிய தொழில் நுட்பங்களைக் கையாளும்போது அல்லது தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரிக்கும்போது மேலதிகத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதில்லை.





கிராம மட்டத்திலான உள்ளூர் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டகையால் இயக்கப்படும் இயந்திரங்கள் மூலம் இரத்தினக்கற்கள் வெட்டப்படுகின்றன. வெட்டப்பட்ட கற்கள் இதே போன்ற இயந்திர மொன்றினல் மெருகூட்டப்படுகின்றன.







அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் கற்களைப் பரிசிலனை செய்வதற்கு நவீன கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றது. இத்தகைய கருவிகளின் துணையுடன் கூட்டுத்தாபனத்தின் ஆய்வு கூடத்தில் பரிசோதனைகள் செய்யப்படுவதை இப் படங்களில் காண்கின்றீர்கள்.



கூட்டுத்தாபனத்தினல் அறிமுகப்படுத்தப்பட்ட மின் சாரத்தினல் இயக்கப்படும் சிலகருவிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.



[illegible]த்தின் காட்சிச்சாலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் கற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு



விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ
மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 137 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org